கல்கி

KALKI 25·9·83 ரூ1·20




இப்போது!
விக்ஸ் வழங்கும்
இயற்கைக் காணிக்கை
விக்ஸ்
ஹெர்பல்
மாத்திரைகள்
Vicks
Herbal
இப்போது, விக்ஸிலே மருந்துகளும் மூலிகைகளும் சிறப்புடன் கலக்கப்பட்டுள்ளன. ஆகவே அது தொண்டைக்கு இயற்கையான முறையிலே இதமளித்து, வாய்க்கும் உன்னத சுவை தருகிறது.
தொண்டைக்கு இதம்
சுவைத்திடவும் உன்னதம்

வீ ராஜேந்தர் 1.2.3...

டி. ராஜேந்தர்....

(1)

கதை, திரைக்கதை, வசனம், டைரக்ஷன், இசை, பாடல், காமிரா, நடிப்பு என்று அஷ்டாவதானம் பண்ணி வரும் டி. ராஜேந்தர் தம் அடுத்த 'தங்கைக்கோர் கீதம்' மூலம் பாடகராகவும் ஆகியிருக்கிறார். ஹீரோயின் நளினி. இதில் 'ஆனந்த் பாபு' என்ற இளைஞரை அறிமுகப்படுத்துகிறார். ஆ. பாபுவுக்கு அட்டகாசமான டான்ஸ் ஒரு பிளஸ் பாயிண்டாம். (ஆனந்த் பாபு நாகேஷின் மகன்) படம் தீபாவளி ரிலீஸ்.

(2)

ராஜேந்தர் கழுத்திலே 'உஷா ராஜேந்தர்' என்று பொறித்த செயின், கையிலே டி. ராஜேந்தர்' என்று பொறித்த பிரேஸ்லெட் அணிந்திருக்கிறார். பிடித்த உடை வெள்ளை பாண்ட், வெள்ளைச்சட்டை. கடவுள் பக்தி ரொம்ப அதிகம். தினமும் காலையில் ஆழ்வார்பேட்டையில் உள்ள ஆஞ்சநேயர் கோவிலுக்குத் தவறாமல் போகிறார். ராஜா அண்ணாமலைபுரம் ஐயப்பன் கோவிலுக்கும் அடிக்கடி போவதுண்டு. செட்டில் நடிகர்களை, டெக்னிஷியன்களை 'கண்ணு' போட்டு அழைப்பதும் தம் தலைமுடியை அடிக்கடி கோதி விட்டுக் கொள்வதும் டி. ராஜேந்தர் ஸ்டைல்.

(3)

ஷூட்டிங்குக்குக் கிளம்பு முன் எடுக்க வேண்டிய காட்சிகளைத் தீர்மானித்துக் கொண்டு விடுகிறார். முன்பே வசனம் எழுதி எடுத்துக்கொண்டு வருவது துளிக்கூடப் பிடிக்காத விஷயம். காமிராக் கோணங்களை அட்ஜஸ்ட் செய்யும்போதே காட்சிக்கான டயலாக்குகளைத் தீர்மானித்து, நடிகர்களிடம் சொல்கிறார். தமது பெரிய பலம் என்று இவர் நினைப்பது வசனத்தையும், தொய்வில்லாது கதை சொல்லும் திறமையும்தான். படத்தில் 'ரயில்' சம்பந்தப்பட்ட காட்சிகள் இடம் பெறுவது நல்லது என்று செண்டிமெண்டலாக நம்புகிறார். ஆனாலும் தேவையில்லாமல் அக்காட்சியைத் திணிக்க மாட்டேன் என்கிறார்.



ரவீந்தர்....

(1)

ஜெமினி அருகில் ஒரு லாட்ஜில்தான் ரவீந்தருக்கு ஜாகை. மூன்றாவது மாடியில் அறை. சுவரில் ஜாஸ் வகையறா போஸ்டர்கள் இத்யாதி. இரண்டாவது மாடியில் உள்ள ஓர் அறையில் மலேசியத் தமிழரான ஒரு நண்பர் வசிக்கிறார். இரண்டு ரூம்களுக்கும் 'இண்டர்காம்' வசதி உண்டு. நண்பர்கள் ரவீந்தரைத் 'தம்பி' என்றே குறிப்பிடுகிறார்கள்.

(2)

சொந்த ஊர் கொச்சி. அப்பா இல்லை. அம்மா டாக்டர். தம்பிகளில் ஒருவர் இஞ்ஜினியரிங், இன்னொருவர் பி.காம் படிக்கிறார்கள். மலையாளப்படங்களுக்குத் தாராளமாகக் கால்ஷீட் தந்துவிடுகிறார்.



(3)

கிறிஸ்டியனாயிருந்தும், கழுத்தில் சிவலிங்கம் பொறித்த டாலர் போட்டுக் கொண்டிருக்கிறார். கோவில்களுக்குச் செல்கிறார். நேரம் கிடைக்கும்போதெல்லாம் ஆடுவது செஸ்ஸும் டிரேடும். செஸ்ஸில் ரவீந்தர் இல்லாடியாம். காசு வைத்து 'டிரேட்' ஆட மாட்டார். தோற்றுப் போனவர்கள் 10 தோப்புக்கரணம் போட வேண்டும்.

-சந்திரா




ஒற்றைச் சிறுநீரகம் உதவுமா?

○ டாக்டர் சி. சின்னசாமி

"ஒற்றைச் சிறுநீரகம் உள்ள ஆணோ பெண்ணோ இயல்பான வாழ்க்கை நடத்த முடியாதா? இவர்களுக்குத் திருமணம் ஆவது பெரிய பிரச்னையாக இருக்கிறதே?'' என்று கேட்டபோது டாக்டர் சி. சின்னசாமி சிரிக்கிறார். ''நம்மிடையேயுள்ள அர்த்தமற்ற பயங்களின் விளைவே இதுபோன்ற பிரச்னைகள் எழக் காரணம். உங்களுக்குத் தெரியுமோ? பலருக்குப் பிறவியிலேயே ஒற்றைச் சிறுநீரகம்தான் செயல்படும்படி அமைந்திருக்கும். ஆனால் மிகவும் ஆரோக்கியமாகத்தான் அவர்கள் வாழ்கிறார்கள். ''சாதாரணமாக ஒற்றைச் சிறுநீரகமே மனிதனுக்கு ஆயுட்காலம் முழுவதும் வேலை செய்யப் போதுமானது. மற்றது 'ஸ்பேர் பார்ட்' தான். விமானங்களுக்கு இரண்டு என்ஜின் என்று இருக்கிற மாதிரி மனித உடம்பில் இரண்டு சிறுநீரகங்கள். ஒன்று இல்லாவிட்டாலும் பழுதடைந்து போனாலும் மற்றது போதுமானதுதான். ஒற்றைச் சிறுநீரகம் உடையவனுக்குப் பாதுகாப்பில்லை என்கிற அச்சம் அனாவசியமானது'' என்கிறார் டாக்டர். தொடர்ந்து அவர் கூறிய கருத்துக்கள்:

உள்ளங்கை அகலத்தில் பீன்ஸ் விதை வடிவத்தில் அடிவயிற்றுப் பகுதியில் உள்ள கிட்னி என்கிற சிறுநீரகம் இரத்த ஓட்டத்தைச் சுத்தப்படுத்திக் கழிவுப் பொருள்களைப் பிரித்தெடுத்துச் சிறுநீராக வெளியே அனுப்பி விடுகிறது. யூரியா தேவையற்ற நச்சுப் பொருள்கள் எல்லாம் இப்படி வெளியேறுவதால்தான் இரத்தம் தூய்மையானதாய் இருக்க முடிகிறது. சிறுநீரகத்தின் இந்த வேலை தடைப்படுகிறபோது 'கிட்னி ஃபெய்லியர்' ஏற்பட்டு உயிருக்கு ஆபத்து உண்டாகிறது.

○ சிறுநீரகத்தின் உட்புறம்




நாள்பட்ட இரத்த அழுத்த நோய் கவனிக்காமல் விடப்பட்டால்சிறுநீரகத்தின் பணி தடைப்படலாம். சொறி, சிரங்கு, டான்ஸில்ஸ் போன்றவை குணப்படுத்தப்படாமல் தீவிரமாகி அதனால் சிறுநீரகம் பாதிக்கப்படலாம். மற்றபடி சிறுநீர்க் குழாய்களில் அடைப்பேற்படுத்துகிற கல், புற்று நோய்—இவை காரணமாகவும் சிறுநீரகம் பாழாகலாம். பல நோய்கள் ஒரே கிட்னியை மட்டும் பாதிக்கின்றன. இரண்டு சிறுநீரகங்களும் கெட்டுப் போவதென்பது அரிதானது.


கல்லடைப்பு போன்ற காரணங்களால் ஏற்படுகிற கோளாறுகளை எளிதில் குணப்படுத்திவிடலாம். கற்களை அகற்றி உடல்நிலையைச் சீராகக் கவனித்தால் போதும். மற்றபடி 'டயாலஸிஸ்' மூலமும் தற்காலிகமாகச் சிறுநீரகம் செயல்படாதிருப்பதைச் சமாளிக்கலாம். இப்போதெல்லாம் வீட்டிலேயே வைத்துக் கொள்கிற 'ஹோம் டயாலஸிஸ்' முறைகூட நடைமுறைக்கு வந்து விட்டது. இரத்தத்தைத் தூய்மைப்படுத்துகிற வேலையைச் செயற்கை முறையில் செய்வதே டயாலஸிஸ் கருவியின் வேலை. ஆனால் இது மிகவும் பணச் செலவுள்ள சிகிச்சை.

டயாலஸிஸ் கருவியின் துணை கொண்டு ஏழு எட்டு ஆண்டுகள் கூட உயிர்வாழ வைத்திருக்கிறார்கள். ஆனால் இப்படி அடிக்கடி டயாலஸிஸ் இணைப்பதில் சில பிரச்னைகளும் உண்டு. இரத்தக் குழாயை அடிக்கடி வெட்டி டயாலஸிஸ் குழாய்களைச் செருகுவதன் மூலம் இரத்தக் குழாயில் அடைப்பு ஏற்படக் கூடும். இந்த மாதிரி பழுது பார்க்கவே முடியாமல் சிறுநீரகங்கள் இரண்டும் சேதமாகிவிடுகிறபோது உறுப்பு மாற்றுச் சிகிச்சைதான் ஓரளவுக்குச் சீரான பாதுகாப்பைத் தர முடியும்.

ஒரே மாதிரியான இரட்டைப் பிறவிகள் சிறப்பான மாற்றுச் சிகிச்சைக்கு உதவ முடி

○ மாற்று சிறுநீரக ஆபரேஷனுக்குச் சிறுநீரகம் தயார்படுத்தப்படுகிறது.





○ மாற்று சிறுநீரகம் [illegible] பொருத்தப்படுகிறது.

யும். இரட்டையரில் ஒருவருக்குச் சிறுநீரகங்கள் பாழானால் மற்றவரின் ஒரு சிறுநீரகத்தைப் பொருத்தி விடலாம். இந்த மாதிரி கிடைக்கும் சிறுநீரகம்தான் 100 சதம் வெற்றி தரும்.

அடுத்தபடியாக இரத்த உறவுள்ள சகோதரர்களின் உறுப்புக்கள் பயன்படுத்தப்பட்டால் நல்லது. இதற்கும் அடுத்தபடியாகத் தாய் தந்தை போன்றவர்களின் உறுப்புக்கள் பயன் தரும். இந்த உறவு முறையில் யாரும் சிறுநீரகம் தந்து உதவ முடியாதபோதுதான் தூரத்து உறவினர்களும் உறவு அல்லாதவர்களும் தரும் தானங்கள் பயன்படுத்தப்படும். கணவனுக்கு மனைவியும் மனைவிக்குக் கணவனும் கூட அந்நியமானவர்கள் என்றுதான் கருதப்படும். அந்நியமான அல்லது தூரத்து உறவினர்களிடமிருந்து பெறப்படும் சிறுநீரகங்கள் அவ்வளவு சிறப்பாய்ப் பணி செய்வதில்லை.

மனித உடம்பில் இயற்கையாகவே உள்ள எதிர்ப்பு உணர்ச்சி காரணமாய் வேறு இடத்திலிருந்து எடுத்துப் பொருத்தப்படும் உறுப்புக்கள் இலேசில் ஏற்கப்படுவதில்லை. உறுப்பு மாற்றம் செய்யப்பட்ட சிறுநீரகத்தையும் பெற்றுக் கொள்கிற உடம்பு எதிர்த்துப் போரிட்டுப் புறக்கணிக்கவே முயல்கிறது. இதைத் தவிர்ப்பதற்காக இம்யூரான், கார்ட்டிஸோன் போன்ற மருந்துகள் அதிக அளவில் தரப்படுகின்றன. எதிர்ப்பு செல்களின் கொட்டத்தை இந்த மருந்துகள் அடக்கிப் புதிய உறுப்பு வேர்விட இவை உதவுகின்றன.

தானம் தருபவரிடமிருந்து சிறுநீரகத்தைப் பிரித்து எடுக்கு முன் அவருடைய உடல்நிலை நன்றாகச் சோதனை செய்யப்படும். ஒற்றைச் சிறுநீரகத்தை அகற்றி விட்டால் மீதமுள்ள ஒன்றை வைத்துக் கொண்டு அவர் ஆரோக்கியமாக உயிர்வாழ முடியுமா என்பதை உறுதி செய்து கொண்ட பிறகே நன்கொடைச் சிறுநீரகம் அகற்றப்படும்.

அமெரிக்கா போன்ற நாடுகளில் உயிருடன் இருப்பவர்கள் சிறுநீரக தானம் தருவது என்பது குறைவான எண்ணிக்கையில்தான். அங்கெல்லாம் விபத்துக்களில் உயிரிழக்கிறவர்களின் சிறுநீரகங்கள் தாராளமாகக் கிடைக்கின்றன. விபத்துக்கு ஆளானவர் இனிமேல் உயிர்வாழ முடியாது என்கிற நிலைமை ஏற்பட்டவுடன் அவருடைய மூளை இறந்துவிட்டது என்ற நிலையை உறுதி செய்து கொண்டு, சிறுநீரகங்களை அகற்றுகிறார்கள். இப்படி அகற்றுவதற்கு மரணமடையப் போகிறவரின் நெருங்கிய உறவுக்காரர்கள் ஒப்புதல் தருகிறார்கள்.

வடக்கு ஐரோப்பிய சிறுநீரக மாற்று நிறுவனம் என்ற ஓர் அமைப்பு செயல்படுகிறது. இதில் உறுப்பினர்களாக உள்ள நாடுகளுக்குத் தேவைப்படுகிற சிறுநீரகங்கள் இந்த அமைப்பினால் விமானம் மூலம் இலவசமாக அனுப்பி வைக்கப்படுகின்றன. தேவைப்படுகிற சிறுநீரகங்கள் தகுதியானதாகவும் இருக்க வேண்டுமே? எனவே தகுதியான சிறுநீரகம் எது என்பதை மிகவும் சக்தி வாய்ந்த கம்ப்யூட்டர்களே தீர்மானிக்கின்றன. டாா

லனின் கருவியில் வைக்கப்பட்டுள்ளநோயாளிகளின் விவரங்களை வைத்து மரணமடையப் போகிறவரின் இரத்த வகை திசுக்கள் இவற்றின் விவரங்களை ஒப்பு நோக்கி கம்ப்யூட்டர்கள்தான் பொருத்தம் பார்த்துச் சொல்கின்றன.

பொதுவாக இறந்தவரின் இரண்டு சிறுநீரகங்களில் ஒன்றை உள்ளூர்த் தேவைக்காகப் பயன்படுத்திக் கொண்டு மற்றதைத் தான் வெளியே அனுப்புகிறார்கள். இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் தானமாகக் கிடைக்கும் சிறுநீரகம் நோயாளிக்குப் பொருத்தப்படுகிறது.

சிறுநீரக மாற்றுச் சிகிச்சை முடிந்தவுடன் ஆறு மாதங்களிலிருந்து ஒரு வருடம் வரை தொடர் கவனிப்பு அவசியமாகிறது.

மேலை நாடுகளைப் போல் நம்முடைய நாட்டில் மக்களிடையே அறிவியல் பூர்வமான விழிப்பு இன்னும் ஏற்படவில்லை. இங்கே சாலை விபத்துக்களில் ஆண்டு தோறும் நூற்றுக் கணக்கானவர்கள் பலியாகிறார்கள். இவர்களுடைய மரணம் வருந்துதற்குரியது தான். ஆனாலும் இவர்களுடைய உடம்பிலிருந்து பிறருக்கு வாழ்வளிக்கக் கூடிய சிறுநீரகம், கண் போன்ற உறுப்புக்களைத் தானம் தருகிற மனப் பக்குவம் ஏற்படுவது வெகு அரிதாகவே இருக்கிறது. படித்து நன்றாய் விவரம் அறிந்தவர்களிடையே கூட இதெல்லாம் இனம் புரியாத தயக்கம் ஏற்படுகிறது. காலப் போக்கில் இவை யெல்லாம் மாறும் என நம்பலாம்.

சிறுநீரகத்தில் ஏற்படுகிற கல் அடைப்பு அறுவைச் சிகிச்சை மூலமே வெளியே எடுக்கப்படுகிறது. சாதாரணமாக ஐம்பது கிராம் நூறு கிராம் எடையுள்ள கற்கள் இருக்கும். கிரிக்கெட் பந்து அளவுள்ள கற்கள் கூட அகற்றப்பட்டிருக்கின்றன.

சிறுநீர்ப் பாதையில் ஏற்படுகிற கல் அடைப்புக்களை மின்சாரக் கருவியொன்றின் மூலம் துண்டுகளாக்கி அகற்றுகிறார்கள். டெலஸ்கோப் மாதிரி ஒரு கருவி இதற்குப் பயன்படுகிறது. உள்ளே இருக்கும் அடைப்பை வெளியே இருந்து பார்க்க முடியும். 'ரெஸக்டோஸ்கோப்' என்ற இந்தக் கருவியின் உதவியால் நூறு வயது ஆனவர்களுக்குக் கூடச் சிகிச்சை யளிக்கப்பட்டுள்ளது.

பேட்டி, கட்டுரை: சுப்ரபாலன்

திருமலை நாயக்கர்



சாதாரண 'செட்டு'களுடன் சமூக நாடகங்களே சென்னை மேடைகளில் நாள்தோறும் நடைபெறும்போது சமீபத்திய சரித்திரச் சம்பவங்களை ஆதார பூர்வமாகச் சேர்த்துப் பிரம்மாண்டமான 'செட்டு'களுடன் வித்தியாசமாக அமைத்திருக்கிறார்கள் 'திருமலை நாயக்கர்' நாடகத்தை.

தளவாய் ராமய்யனை மட்டம் தட்டவும், அவரையும் திருமலை மன்னரையும் இறுதியில் கொன்றுவிடவும் திட்டமிடும் ஜெயா தீட்சிதரும் அக்கம்மா தேவியும் அவள் தம்பி நரசப்பனும் வருகிறபோதெல்லாம் ஒரு மர்ம நாவலைப் போலவே சுவாரஸ்யமாக நாடகத்தைக் கொண்டு போகிறார்கள்.

நாடகக் கதை அமைப்பில் சிறு சிறு சம்பவங்கள் கூட விட்டுப் போகாமல் அவை கதையோடு இழைந்து போவதையும் உரையாடல்களில் பண்பான வசன அமைப்பையும் பார்க்கும்போது நாடகாசிரியர் ஆறு. அழகப்பனின் திறமைக்குப் பாராட்டுச் சொல்ல வேண்டும். (பண்டாரம் — சிவஞானம் உரையாடலைச் சற்றுக் குறைத்திருக்கலாம் என்பது தவிர நாடகத்தில் குறையேதும் இல்லை.)



ஹெரான் ராமசாமி திருமலை நாயக்கராக கம்பீரமாக நடித்திருக்கிறார்; கேசவப் பட்டரின் மனைவி கல்யாணியிடமும் அவன் பெண் மீனாவிடமும் குழைந்து போகிறார். ராயசம் அமைதியான நடிப்பிலும் ஜெயா தீட்சிதர் அழுத்தமான நடிப்பிலும் பளிச்சென்று தெரிகிறார்கள்.

• சாருகேசி



ஷா வாலஸ் வழங்கும்
சூப்பர் பவர்
ரீகல்
டிடர்ஜெண்ட் கட்டி
அழுக்கைத் தகர்த்திடும்
துணிகளைக் காத்திடும்
ரீகலின் அபார சலவை சக்தி, உங்கள் துணிகளில் விடாப்பிடியாகப் படிந்திருக்கும் அழுக்கைத் தகர்த்து விரட்டுகிறது. உங்கள் துணிகளை அதிவெண்மையாகவும் பளிச்சென்றும் சலவை செய்கிறது.
மேலும் ரீகலின் பாதுகாப்பான சலவை உங்கள் துணிகளுக்கு இதமானது. மென்மையானது... புதுமையான நறுமணத்துடன் கூட.
Regal
Tough on dirt - Soft on clothes
Shaw Wallace
ஷா வாலஸின் தரமான தயாரிப்பு
ACIL/0592/83-Tam-R

பிள்ளையார்பட்டிப் பெருமான்

ஆனந்தி

பிட்டுக்கு மண் சுமந்த கதையைப் பற்றிய ஒரு நாட்டுப் பாடலைப் புகழேந்திப் புலவர் கிராமியப் பெண்களுக்காகப் பாடிக் கொடுத்தார் என்று சொல்வதுண்டு.

சிவபெருமானே தம்முடைய கஷ்டங்களைத் தம் சகாக்களிடம் எடுத்துக் கூறுகிறார்:

''கேளுங்கடா தம்பிமாரே! வாழ்வு
கெட்டு இந்தக் கூலியாளாய்வந்த
விதத்தை...

பார்வதி மலைநீலி நம்மைப்
பலபல விதமாகக் கடுகடுத்து
பேசாததெல்லாம் பேசினாள் அதனால்
பிரிந்திட மனம்கொண்டுதுணிவடைந்து
பிள்ளைகள் குணம் பார்த்தோம் அதுவும்
பிடிக்கலை கணபதி என்ன பண்ணுறான்
எந்தெந்தக் காரியத்துக்கும் அவன்
எமக்கு முன்னேபோய் வசித்திருக்கான்.
வேலவன் சேதி கேளு!...''

என்பதாக வரிசையாகத் தமது அல்லல்களைச் சொல்லிக் கொண்டே போகிறார். ஸர்வேச்வரனே இப்படித் திண்டாடுகிறார் என்பது சம்சாரபந்தத்தில்மாட்டிக்கொண்டு விழிக்கும் நமக்குச் சிரிப்புக் கலந்த ஆறுதலைத் தருகிறது.

சிவபெருமான் அங்கலாய்த்துக் கொள்ள மாட்டாரா பின்னே! நாம் ஸோமவார பூஜை செய்யும்போது கூட விக்னேச்வர பூஜை செய்து விட்டுத்தானே மஹேச்வரனைப் பூஜிக்கிறோம்!

கணபதியே பிரதான மூர்த்தியாகவும் பிள்ளையார் பட்டி என்றே பெயர் பெற்றதுமான ஒரு திவ்ய க்ஷேத்திரம் ராமனாதபுரம் மாவட்டத்திலிருக்கிறது. இந்த மூலக்கோவில் சுமார் 1600 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பது குடைவரைக் கோவிலாக அமைந்திருப்பதாலும் பல கல்வெட்டுக்களைப் படியெடுத்து ஆராய்ந்தபடியாலும் தெரிய வருகிறது!

குடைவரை என்றால் மலையைக் குடைந்து அமைத்த கோவில் என்று பொருள். மண்ணாலும் மரத்தாலும் கட்டிய கோவில்கள் அழிந்து போகலாம். குடை வரைக்கோயில்கள் அழியாத்தன்மை பெற்று விளங்குகின்றன.




நேமம்

இந்தக் குடைவரைக் கோயிலில் பிரதானமாக இருப்பவர் கற்பகப் பிள்ளையாரான தேசி விநாயகப் பிள்ளையார். அவருக்கு வலது புறத்தில் லிங்கோத்பவ மூர்த்தி. இன்னொரு கருவறையில் திருவீங்கைக்குடி மகாதேவர் பெரிய உருவில் காட்சியளிக்கிறார். தெற்கு நோக்கி சங்கரநாராயணரின் அழகிய வடிவம் காணப்படுகிறது.

இவையெல்லாம் பாண்டியர் காலத்திருப்பணி என்றும் பின்னால் மூன்று திருப்பணிகள் நடந்து கோவில் இன்றுள்ள அளவுக்குப்பரந்து விரிந்திருக்கிறது என்றும் கூறுகிறார்கள். கோவில் திருப்பணி செய்த போது மருதீச்வரம் என்ற அருகில் இருந்த கோவிலையும் சேர்த்துக் கட்டி ஒரே கோயிலாகச் செய்திருக்கிறார்கள். ஆகவே இந்தக் கோவிலில் மகாதேவர் அவருடைய தேவியான சிவகாமி அம்மன் மருதீசர் அவருடைய அம்மனான வாடா மலர் மங்கை என்று தனித்தனித் திருவுண்ணாழிகளில் குடி கொண்டிருக்கிறார்கள். பன்னிரண்டாம் நூற்றாண்டின் முடிவில் இந்தப் பிரதேசத்துக்கு இடம் பெயர்ந்த நகரத்தார் பெருமக்கள் இந்தத் திருப்பணிகளைச் செய்து வந்திருப்பதாக அறிகிறோம்.

பிள்ளையார்பட்டியில் தேசிவிநாயகர் சந்நிதியில் நின்று தரிசனம் செய்யும் போது இவர் எவ்வளவு வித்தியாசமானவர் என்ற எண்ணம் மனதில் தோன்றுகிறது. குடைவரைக் கோவிலானதால் பாறையோடு ஒட்டியே அமர்ந்திருக்கிறார். இரண்டு கரங்கள். இடது கரம் இடுப்பில். வலது கரத்தில் பூரண ஞானம் பொதிந்த கொழுக்கட்டை. தும்பிக்கையும் கொழுக்கட்டையைப் பார்த்தே திரும்பியிருப்பதால் பிரணவ ஸ்வரூபியாகவும் விளங்குகிறார். இரண்டு பாதங்களும் ஆசனத்தில் படியச் சப்பணமிட்டு அமர்ந்த நிலை.

எந்தக் காலத்தில் கட்டப்பட்டிருந்தாலும் ஒரு கோவிலுக்குப் பெருமை சேர்ப்பது நித்ய



காளிநடனம்

பூஜைகளைச் செய்பவர்களின் சிரத்தையும் வழிபடும் மக்களின் பக்தியுமே. அன்பர்களின் இதயத் தாமரைகள் சமர்ப்பிக்கப்படுவதாலேயே வழிபாடுகள் செம்மையாக நடக்கும் கோயில்களில் தெய்வ சாந்நித்தியம் திகழ்கிறது. கோவில்கள் கட்டப்பட்ட காலத்து அரசர்களைப் பற்றியே பேசுகிறோம். பெயர் தெரியாத எத்தனை சிற்பிகளின் கைங்கரியம் கோவில்களைச் சாதித்திருக்கிறது!

சற்று இருண்டிருப்பதால் தீபச்சுடர்கள் அழகாகப் பொன்னிறமாகப் பொலிகின்றன. விநாயகருக்கு முன்பக்கத்திலேயே ஆரம்சூட்டியது போல் சரவிளக்குகளை ஏற்றியிருப்பது கலையாக இருக்கிறது. நக்ஷத்திர மாலையாகவே பொலிகிறது. அந்த ஒளியில் நீண்ட மாலையும் விபூதிப்பட்டையும் சந்தனப் பொட்டும் துலங்க அரையில் கச்சம் உடுத்தித் தலையிலிருந்து உத்தரீயம் சாத்திய நிலையில் வட்டமான சின்னக் காதுகளுடன் கற்பக விநாயகரைத் தரிசிக்கிறோம். சின்னக் குழந்தையாக அம்பிகையுடன் விளையாடும் பாலனாகவே காணப்படுகிறார்.

வெற்றியைத் தருபவர் கணநாயகர். தென்னாட்டில் கணபதி வழிபாடு வாதாபிகொண்ட சேனாதிபதி பரஞ்சோதி சிறுத்தொண்ட நாயனாராகித் தம் ஊரான திருச்செங்காட்டாங்குடியில் கணபதீச்சரத்தைக் கட்டிய பிறகு நன்றாகப் பரவியது.

உச்சி காலப் பூஜை தொடங்குகிறது. கோவிலில் பூஜைகள் மிகவும் சிறப்பாகச் செய்யப்படுகின்றன. நாட்டியம் ஒன்று நீங்கலாக எல்லா உபசாரங்களும் மிக விமரிசையாகவும் முறைபிசகாமலும் சிரத்தையோடு செய்வதைக் கண்டபோது மகிழ்ச்சியாக இருந்தது. தீப ஒளியில் தரிசித்த பெருமானைக் கற்பூர ஜோதியில் பிரகாசமாகக் காணும்போது கன்னத்தில் போட்டுக்கொள்கிறோம். ஒவ்வொரு சந்நிதியாகப் பூஜைகள் செய்து மருதீசர் சந்நிதிக்கு வருகிறார்கள். சில படிகள் ஏறினால் திருவுண்ணாழியில் மருதீசனையும் வாடாமலர் மங்கையையும் கண் குளிரக் காணலாம். கணபதியின் சந்நிதிக்கு எதிரே ராஜகோபுரம். மருதீசர் சந்நிதிக்கு எதிரே இன்னொரு ராஜகோபுரம். மணிகளின் ஓசைகளும் அருமறையின் முழக்கமும் தூப தீபமணங்களும் வழிபாட்டின் கச்சிதமும் பாராட்டத் தோன்றுகிறது.

உச்சி கால பூஜை முடிந்த பின் நகரத்தாரை ஊர், கோத்திரம் முதலியவற்றைச் சொல்லி அழைத்து முதல் பிரசாதம் வழங்குகிறார்கள். அதன் பிறகுதான் நகரத்தார்கள் வழிபடும் கோவில்கள் ஒன்பது, அவற்றில் பிள்ளையார்பட்டி முக்கியமானது என்பதை அறிய நேர்ந்தது.

விநாயக சதுர்த்தியன்று விரதம் தொடங்குபவர்களும் விரதத்தைப் பூர்த்தி செய்பவர்களும் நூற்றுக் கணக்கில் இங்கு வந்து குழுமி கற்பக விநாயகர் சந்நிதியில் விரதமிருந்து அவன் அருளைப் பெறுகிறார்களாம். விரதமிருப்போர்க்கு நகரத்தார் விடுதியில் எல்லா வசதிகளையும் செய்து தருகிறார்களாம்.

சில புதுமையான முறைகளைப் பிள்ளையார்பட்டி கோவில் வழிபாட்டில் காணலாம். அருள்மிகு கற்பக விநாயகருக்குத் தினந்தோறும் சர்க்கரைப் பொங்கல் வடை சாம்பார் ரஸம் கறி பச்சடி முதலிய வியஞ்சனங்களுடன் குழித்தளிகை செய்து நைவேத்தியம் செய்யப்படுகிறது. பக்தர்கள் முன்னதாகவே சொல்லி வைத்துச் சொற்பத் தொகையைச் செலுத்தினால் இந்தப் பிரசாதம் உச்சிகாலத்துக்குப் பிறகு அவர்களுக்குப் போஜனமாக அளிக்கப்படுகிறது.

உச்சிவேளைக்கு மேல் ஆகிவிடுவதால் நல்ல பசியாகவும் இருக்கும். மிக ருசியாகத் தயாரிக்கப்பட்ட நைவேத்தியம், விநாயகப் பெருமான் பிரஸாதம் என்ற எண்ணம் எல்லாம் சேர்ந்து நமக்குப் பரமதிருப்தியைத் தருகிறது. பொரி உருண்டை காலை நைவேத்யமாம். கொடுத்தார்கள். என்ன ருசி தெரியுமா?

○ ஸ்ரீ கற்பக விநாயகர் பிள்ளையார்பட்டி



கரகரவென்று பாகு மணத்துடன் அதைச் சாப்பிடும்போது,

''கைத்தலநிறைகனிஅப்பமோடவல்பொரி கப்பிய கரிமுகன் அடிபேணி''க்கொண்டே வாழ்நாள் முழுவதும் இருந்து விடலாம் என்றுதான் தோன்றும்!

இந்தக் கோவிலில் வெள்ளி யானை வாகனம் தங்கப் பெருச்சாளி எல்லாம் இருக்கிறதாம். ஆனால் பார்க்க முடியவில்லை.

மருதமரத்தின்அடிமரத்தைமட்டும்பிராகாரத்திலேயே பீடம் கட்டி வைத்திருக்கிறார்கள்.

தூண் சிற்பங்களில் காணப்படும் தெய்வ மூர்த்தங்களின் கரங்களில் ''இங்கே தலபுராணம் கிடைக்கும்.'' ''போட்டோ கிடைக்கும்'' என்று அட்டைகளில் எழுதித் தொங்கவிட்டிருப்பது மட்டும் நெஞ்சை உறுத்துகிறது.

மார்கழி மாதம் திருவாதிரை விழாவில் சுவாமிசார்பாகப் படிக்கப்படும்மடல் ரொம்ப சுவாரஸ்யமானது. ஊடல்கொண்டுமௌனம் சாதிக்கும் தேவிக்கு சிவபெருமான் ஊடல் தீர்த்த முகமாகச் சில நிலங்களைப் பட்டயம் செய்து கொடுக்கிறார்! இது சண்டேச நாயனார் சார்பாகப் படிக்கப் படுகிறதாம்! இந்த மடலை எதற்காகப் படிக்கிறார்கள் என்பது விளங்கவில்லை. யாராவது ஒருவர் இந்த நிலத்தைத் திருவாதிரை விழாவுக்கு மான்யமாக அளித்திருக்கலாம். தம் பெயரால் வழங்க விரும்பாமல் இறைவன் பெயரிலேயே எழுதிப்படித்திருக்கலாம். அதுவே நிலையாக நின்று விட்டதோ என்னவோ?

பிள்ளையார்பட்டியிலிருந்து மாலையில் நேமம் என்ற கோவிலுக்குச் சென்றோம். நேரே பஸ் கிடையாது. குன்றக்குடியில் இரண்டு மணி நேரம் தவம் செய்ய நேர்ந்தது. ''நேமம் செல்லும் பஸ்ஸா?'' என்று கேட்டு பஸ் ஏறினோம். ஊருக்குப் புதியவர்கள் என்று அறிந்து சொன்ட கண்டக்டர் டிக்கெட் கொடுத்து விட்டு அக்கறையோடு ''திரும்பிப் போக வேறு பஸ் கிடையாது. இதுவேஎட்டு மணிக்குமேல் வரும்.கோவிலைப் பார்த்து விட்டு வந்துவிடுங்கள்''என்று கூறித் தம் பரிவால் எங்களை வியப்பில் ஆழ்த்தினார்.

இருள் சூழ்ந்துவரும் வேளை. முதலில் திருக்குளம்.கொஞ்சமாகத்தண்ணீர்நடுவில்காணப்பட்டது. கோபுர வாசலில் வெளிச்சம் விழுந்த பக்கம் சென்றோம். கோபுரங்களின் தோற்றம் கண்களுக்குத் தெரிந்ததே தவிர சுதைவேலை முதலியன தெரியவில்லை. உள்ளே சென்றதும் தூணுக்குத் தூண் சிற்பங்கள் காணப்பட்டன. பிள்ளையார்பட்டி, கோவிலூர் பாணி சிற்பங்கள்.

வயது முதிர்ந்த குருக்கள் வந்தார். கருவறைகளைத் திறந்து கொண்டே சுவாமி பெயர் ஜெயங்கொண்ட சோழீச்வரர் என்றும் அம்மன் பெயர் சௌந்தர நாயகி என்றும் கூறினார். ஆவலோடு பூஜைகள் செய்து விபூதிக் குங்குமப் பிரசாதங்களை அளித்தார். ஒரு புஷ்பம் கூடக் காணப்படவில்லை. உற்சவ விக்கிரகங்கள் எல்லாம் புதிதாகத் தேய்த்து வைத்தது போலப் பளபளப்பாக இருந்தன. ஒரு கிராம தேவதையின் விக்ரகம் இருந்தது. பெயர் அழகிய நாச்சியம்மன். கோவில் ஒதுக்குப்புறமாக இருப்பதால் இங்கே வந்து பாதுகாப்புக்காக இருக்கிறாள்.

குருக்கள் கூறின சில விஷயங்கள் மனத்தை மிகவும் வருத்தமடையச் செய்தன. ஆண்டுக்கு எட்டாயிரம் மூட்டை நெல் வந்து கொண்டிருந்த கோவிலாம் இது. உற்சவங்களும் நித்ய பூஜைகளும் மிக நன்றாக நடந்து கொண்டிருந்தனவாம்.

இப்போது அரசாங்கம் ரூ. 3000மும் அற நிலையங்கள் பாதுகாப்புவாரியம் ரூ.1000மும் ஆண்டொன்றுக்கு வழங்குகிறார்களாம். கோவில் நிலத்துக்கு முன்பு வாரம் கொடுத்துக் கொண்டிருந்தார்களாம். இப்போது யாரும் கொடுப்பதில்லை.

இந்த மாதிரிப் பல கோவில்களில் கேட்டுத் துயரடைய நேரிட்டது.

இத்தகைய கோவில்களைப் பார்க்கவும் துயரமாக உள்ளது. கோவில்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய வருவாயைப் பெற்றுத் தரவும் வருவாய் அதிகமில்லாத கோயில்களுக்கு அதிக வருமானமுள்ள கோயில்கள் மூலம் உதவவும் அரசாங்கம் சீரிய திட்டம் வகுத்துத் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டாமா?

புகைப்படங்கள்: **மணியம்செல்வன்**

அருள்வாக்கு


நான் சொல்லுகிற கர்மானுஷ்டானங்கள் பூஜை முதலியன வெல்லாம் 'வெறும்' சடங்குதானே என்று கேட்பவர்கள் இருக்கிறார்கள். ஆத்மானுபவம் என்பது உள் விஷயம். சடங்குகளோ வெளிக் காரியங்கள். இவை எப்படி ஆத்மானுபவத்துக்கு உதவும் என்பது அவர்களுடைய சந்தேகம்.

உண்மையில் ஆத்மானுபவம் பெற்று விட்டால் சடங்கே தேவையில்லைதான். ஆனால் உண்மையான ஆத்மானுபவம் நமக்கு வந்து விட்டதா அதற்கு நாம் பக்குவப்பட்டு விட்டோமா? என்று அந்தரங்க சுத்தமாகப் பார்த்துக்கொண்டால் நாம் அதற்கு எவ்வளவோ தூரத்தில் நிற்கிறோம் என்று தெரியும். எத்தனையோ ஜென்மாக்கள் எடுத்து எத்தனையோ கர்மாக்களைச் செய்து அதனைபூர்வவாசனைகளாலும் நம்உண்மை ஸ்வரூபமான ஆத்மானந்தத்தை மூடிக் கொண்டிருக்கிறோம். சத் கருமம் செய்தும் சத்வாசனைகளைப் பெருக்கிக்கொண்டும் பழைய துஷ்கர்மங்களையும் துர்வாஸனைகளையும் போக்கிக் கொள்ள வேண்டும். பிறகு கர்மா தானே நின்று போகும். ஆத்ம விசாரத்தில் இறங்கலாம். அதுவரையில் 'வெறும்' சடங்கு என்று சொல்கிற கர்மங்கள் பூஜை எல்லாம் நமக்கு அவசியம் பிரயோஜனமானவையே.


- ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள்




விருந்தினரை
வரவேற்க –
இதோ
நரசுஸ்
காபி
அது ஜீவனுள்ள
ஒரே காபி.
''தேர்மலோ'' முறை
தயாரிப்பு காபி.
WELCOME
நரசுஸ்
காபி கம்பெனி
சேலம் 636 007.
கிளைகள்: தமிழ்நாடெங்கும்.
ADWAVE/NCC/2439



இப்ப நேரமல்லே!
அப்புறம் பேசுவோம்..
அப்புறம் பேசுவோம்!
பேச்சு வார்த்தைகள்





தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம்
ஜம்னு குடி போயிக்கோ இந்தா, வீட்டுச் சாவி!
மக்கள்
லஞ்சம் ஊழல்

கல்கி

1983 செப்டம்பர் 25
ருத்ரோத்காரி புரட்டாசி 9
மலர் : 42 இதழ் : 8



விலைக்கு வாங்கும் ஆபத்து!

அணுவைப் பிளப்பதில் மனிதன் வெற்றி கண்ட நாளிலிருந்தே அதிலுள்ள அபாயங்களைப் பற்றியும் அறிஞர்கள் எச்சரித்து வந்துள்ளனர். இதில் உள்ள ஆபத்துக்களைக் கருதுகையில் இதனால் அடையும் நன்மைகள் பெரிதல்ல என்று கூறிவந்துள்ளனர். ஆனால் விஞ்ஞானிகளின் ஆர்வமும் ஆட்சிப் பொறுப்பில் உள்ளோரின் பேராசையும் சேர்ந்து கொள்ள அணு சக்தியின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாது போயிற்று. மனித குலத்தையே பூண்டோடு அழித்துவிடக் கூடிய அணு குண்டுகளைப் பல்லாயிரக் கணக்கில் வல்லரசுகள் செய்து குவித்துள்ளன. முன் யோசனையின்றித் தவறான ஒரு பித்தானை அழுத்தினால் போதும், உலகப் போர் மூள்வதையும் மனித இனம் அழிவதையும் தவிர்க்க முடியாது போகலாம். இப்படித் தவறுகள் நிகழ்வதற்குரிய சாத்தியக் கூறுகள் உள்ளதை, அண்மையில் பயணிகள் விமானம் ஒன்று உளவு விமானமாகக் கருதப்பட்டு ருஷ்யாவினால் சுட்டு வீழ்த்தப்பட்டதானது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கிறது.

உலகம் அஞ்சவேண்டியிருப்பது அணு ஆயுதங்களுக்கு மட்டுமல்ல. ஆக்கபூர்வமாக அணுசக்தியைப் பயன்படுத்துவதிலும் ஆபத்துக்கள் மிகுதியாக உள்ளன. ஒரு அணு மின் நிலையத்தை உருவாக்க ஆகும் செலவை விட அதன் ஆயுட்காலம் முடிந்த பின் அதை மூடுவதற்கு அதிக செலவாகும் என்று இப்போது உணரத் தலைப்பட்டிருக்கிறார்கள், அமெரிக்காவில். அந்நிலையத்திலிருந்து வெளிப்படும் கதிரியக்கத்தினால் சுற்றுப்புறச் சூழ்நிலை பாதிக்கப்படாதிருக்கத் தக்க முன்னேற்பாடுகளைச் செய்ய அவ்வளவு செலவாகிறது! ஏராளமாய்ச் செலவு செய்தாலும் அணுமின் நிலையங்களிலிருந்து வெளிப்படும் கழிவுப் பொருள்களை மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு கழித்துக் கட்டுவதென்பது ரொம்பக் கஷ்டம். இது தொடர்பான ஆராய்ச்சிக்குக் கோடிக் கணக்கான டாலர்களை அமெரிக்கா செலவிட்டும் திருப்திகரமான ஒரு முறையை இன்னும் கண்டு பிடித்த பாடில்லை. கான்கிரீட் பெட்டிகளில் அடைத்துக் கடல் ஆழத்தில் போட்டாலும் சரி, மனித நடமாட்டம் இல்லாத பிரதேசங்களில் பூமியில் ஆழக் குழி தோண்டிப் புதைத்தாலும் சரி, ராக்கெட்டில் ஏற்றி விண்வெளிக்கே அனுப்பிவிட்டாலும் சரி, ஏதேனும் ஒரு விதத்தில் கதிரியக்கம் தாவரங்களை, மிருகங்களை, மக்களைப் பாதிக்கவே செய்யும் என்று கண்டுணர்ந்திருக்கிறார்கள்.

இந்தச் சூழ்நிலையில்தான் கேரளப் பல்கலைக் கழகம், இந்திய அணுமின் நிலையங்களின் கழிவுப் பொருள்களை எங்கு கொண்டுபோய் ஆபத்தின்றிக் கழித்துக் கட்டுவது என்று தீர்மானிக்க, மேற்கு தொடர்ச்சி மலைகளை ஆராய்ந்திருக்கிறது. அவர்கள் தேடுகிற இடம் இந்த உலகிலும் இல்லை, விண்வெளியிலும் கிடையாது!

கதிரியக்கக் கழிவுப் பொருள்கள் ஹைதராபாத்தில் வெட்ட வெளியில் கொட்டிக் கிடந்ததும் அதனால் இரு குழந்தைகள் பாதிக்கப் பட்டதும்; கல்கத்தாவில் கதிரியக்க அணுசக்திக் குப்பி ஒன்று காணாமல் போய்க் காயலான் கடையில் கிடைத்ததும் சமீபத்திய செய்திகள்; பரபரப்புடன் பீதியையும் ஊட்டும் தகவல்கள்.

நிலக்கரிக்குத் தட்டுப்பாடு இல்லாத மே. ஜெர்மனி, பிரிட்டன் முதலிய நாடுகள், அணுசக்தி மின் நிலையங்களை விட அனல் மின் நிலையங்களே தேவலாம்; செலவும் கம்மி, ஆபத்தும் குறைவு என்று உணரத் தலைப்பட்டு விட்டன.

நமக்கு இன்னும் புத்தி வரவில்லை.

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்

இரும்பு குதிரைகள்

பாலகுமாரன்

அத்தியாயம் 37

"ஏதுபத்தி கவிதை... மறுபடி குதிரை தானு..." காயத்ரி புல்தரையில் உட்கார்ந்தபடி கேட்டாள்.

"ஆமா... குதிரைதான்.. போர்னு நெனச்சா சொல்லலே."

"ச்சேச்சே... அப்படி நெனைக்கலே. ஏன் குதிரை இவ்ளோ நெருக்கமா போயிடுத்து உங்களுக்கு?"

"குதிரைன்னு வெறும் மிருகத்தைக் குறிப்பிடற குதிரை இல்லே. ரொம்ப உரிமையோட இருக்கிற ஏதும் குதிரையோட சம்பந்தமாயிடும் எனக்கு. உதாரணமா காற்று சுழட்டி சுழட்டி அடிச்சா குதிரைத் தாண்டி போறதுன்னு தோணும். போரிங் பம்ப் டைட்டா அடிக்க ஜலம் வந்தா பம்புக்குள்ள குதிரை ஜலம் இழுக்கறதாப்படும்."

"அதாவது சக்தி – இயங்கு சக்தி ரொம்ப புடிச்சிருக்கு இல்லியா"

"யெஸ். அதப்பத்தி நெனைக்க நெனைக்க அதிசயமா இருக்கு. இந்தக் கவிதை அந்தச் சக்தியைப் பத்தித்தான். ஒரு கதை மாதிரி பூடகமா சொல்ல ட்ரை பண்ணியிருக்கிறேன்."

"நான் ரெடி. உட்காருங்களேன்."

"இல்லே. நின்னுண்டே சொல்றேன்."

"அடிச்சக்கை. கவிதைக்கு உசந்த இடம் வேணுமா மேடைமாதிரி"

"நோ. ஒரு இடமா நிக்காம கொஞ்சம் மோனோ ஆக்டிங்கோட சொல்லலாம்னு பட்டுது."

"அது ரைட். குதிரை பத்தின கவிதை உக்காந்து சொன்னு தப்பு தான். மௌனம் பத்தி சத்தம் போட்டுக் கவிதை படிக்கிற மாதிரியாயிடும்."


"கேலி பண்றியா காயத்ரி"

"இல்லே. விஸ்வநாதன். உங்க வின்ஸியாடி நெனச்க சந்தோஷப்படறேன். கவிதை சொல்லுங்கோ."

விஸ்வநாதன் தொண்டையைச் செருமிக் கொண்டான். காயத்ரியை விட்டுத் தொலைவில் நின்றான். ஒரு கட்டியக்காரன் அறிவிப்புப் போல் உரத்த குரலில் கவிதையை ஆரம்பித்தான்.

கல்தோன்றிமண்தோன்றி கடவுள்தோன்றி
கைவழியே மொழிவளரும் காலம்தோன்றி
கால்நடையே செல்வமெனக் கொண்ட
நாளில்
ஆண்டிருந்த ஓர்அரசன் பறையறிவித்தான்
வீட்டிற்கு ஒருகுதிரை வளர்க்கவேண்டும்
வேண்டுகிற உதவிகள் அரசுசெய்யும்
குதிரைகள் தேசத்தின் பொக்கிஷங்கள்
போர் வந்தால் புரவிகளை அரசேவாங்கும்
போர்க்காலம் காணுத அரசுஇல்லை
போராட்டம் இல்லாத காலம்இல்லை.
போர்காலம் முன்கருதி புரவிவளர்ப்பீர்
பின்வளரும் சந்ததிக்கு உறுதிகொடுப்பீர்.
மீறுபவர் தேசத்தின் முதல்எதிரிகள்
மறுப்பவர்கள் வெளியேற்றப்படுவார்
உறுதி.
பறையடித்து ஊர்முழுதும் சேதிசொல்ல
ஜனம்கூடி தெருநடுவே புலம்பலாச்சு.

"இவன்என்ன பேயரசன் குதிரைவெறியன்
திடுமென்று குதிரைக்கு எங்கேபோக....
குதிரைதான் செல்வமெனில், செந்நெல்
என்ன



கொன்னுமட்டும் பயிரிடவா வயலும்நீரும்.
ஆடுகளோ உணவாகும் மாடுகளோ பயிர்
வளர்க்கும்.
மேய்ப்பதொன்றும் கடினமில்லை. கோல்
அசையக் கூடவரும்
குடும்பத்துப் பெண்மணிக்கு குதிரைகளா
கட்டுப்படும்.

குரல் கொடுத்தால் நாய் போல புரவிகளா
துணையாகும்
இவன் என்ன பேயரசன் குதிரைவெறியன்..

பார்ப்பனர்கள் சிலர்கூடி தமக்குள்பேசி
முடிவாக திடமாக சபைக்குள்சென்று
தமக்குமட்டும் கட்டளையை தளர்த்துமாறு
பணிவாக அறிவித்தார் காரணம்
சொன்னார்:

வேதங்கள் சொல்லுகையில் குதிரை
கனைக்கும்

பாடத்தில் முழுமுனைப்பு சிதறிப்போகும்
தோல்பொருளை பார்ப்பனர்கள் தொடக்
கூடாது.

வாரின்றி குதிரைகள் வசப்படாது.
போருக்கும் பார்ப்பனருக்கும் பொருத்த
மில்லை.

போரில்லா வாழ்க்கையிதே எங்கள்
கொள்கை

பேரரசன் யோசித்தான் தலையசைத்தான்
பார்ப்பனர்கள் குதிரைக்கு விலக்குஎன்றான்

பார்ப்பனர்கள் சபைநீங்க வணிகர் வந்தார்
வைத்தியரும் கொல்லரோடு சேர்ந்து
கொண்டார்.


எங்களுக்கும் விலக்களிப்பாய் தேரா மன்னா
வணிகத்தில் எருதுகளே உதவியாகும்
பொதிசுமக்கும் கழுதைகளே போதும்
எமக்கு

ஊர்சுற்றும் வேலையிலே நாங்கள் இருக்க
பெண்டுகளே பிறவேலை செய்தல்வேண்டும்
புரவிகளைப் பெண்டுகளால் ஆளமுடியுமா
பேரரசே தயைசெய்யும். இதுதாங்க
முடியுமா?
மன்னவனும் மனுஏற்றான். விலக்கு
என்றான்

வந்தவர்கள் சபையின கூட்டமாக
தொழில்தெரிந்த சூத்திரர்கள் முன்னே
சென்றார்.

குதிரைகள் பேணுதற்கு வசதியில்லை.
முன்பின்னே இதுகுறித்துப் பழக்கமில்லை.
கைகாலே துணையாக உழைப்போர் நாங்கள்
போரென்றால் கால்படையின் அங்கம்
நாங்கள்

குதிரைகள் சுமை எமக்கு உதவிதராது
உழவுக்கோ கவலைக்கோ துணையாகாது



மன்னவனும் தலையசைத்தான் சரியே
என்றான்
படைவீரர் மேற்கொள்வார் போகச்
சொன்னான்
படைவீரர் பெருமறவர்கூட்டம்போட்டார்
முடிவாக அரசனிடம் வணக்கம்சொன்னார்.
போர்காலம் குதிரைகள் தேவையெனினும்
போர்எதிரி யானையுடன் வந்துநின்றால்
குதிரைகள் என்செய்யும் கலைந்துபோகும்
போர்துவங்கு முன்னமே குழப்பம்சேரும்.
படைவீரர் தெருவுக்குஒருயானைவளர்ப்பார்
முறைபோட்டு அனுதினமும் பேணிக்
காப்பார்
வீட்டுக்கொரு குதிரையென்ற விதியினின்று
பேரரசே விலக்களிப்பீர் யானைதருவீர்.

பேரரசன் யோசித்தான் கவலைஆழ
கையசைத்தான் மறவர்கள் கலைந்துபோக
மறுநாளே சபைகூட்டி எழுந்துநின்று
பெருமன்னன் குரல்செருமி பேசலானான்
குதிரையெனச் சொன்னதுவிலங்காமக்காள்
புரவியதன் மகிமையதைத் தெரியாஜனமே
வீட்டுக்கொரு வலிமையுள்ள மனிதர்என்று
நான் சொன்ன செய்தியது தவறுசொல்
வீர
குதிரையதை சபை நடுவே நிறுத்திப்பாரும்
உடல்முழுதும் கைதடவி உணர்ந்துபாரும்.
எவ்வளவுதின்றாலும் குழிவிழுந்த வயிறு
எப்போதும் எப்போதும் துடித்தஉணர்வு
கண்மூடி நின்றாலும் காதுகேட்கும்
காதுகளே நாலுபக்கம் சுற்றிப்பார்க்கும்
உடல்வலிமை இருந்தாலும் மூர்க்கம்
காட்டா
குதிரைகுணம்கொண்டவர்கள்உயர்ந்தோர்
ஆவார்.
போர் என்றால் குத்திட்டி யுத்தம்அல்ல.
மனிதரோடு மனிதர்வெட்டி சாய்தல்அல்ல
பெரு வாழ்க்கை தனை நோக்கிக்காலம்
போகும்
தன்மையினைப் போரென்றேன் வேறொன்
றில்லை

அவன்: அண்ணன் ஆயிரம் ரூபாய் அனுப்பறதா எழுதி இருக்கார்.

இவன்: அது சரி, இப்ப எங்கடா அவசரமா?

அவன்: இந்த லெட்டரை அடகு வச்சுக் கொஞ்சம் பணம் வாங்க....

—சிவலட்சுமி



புரியாத என்மக்காள் மந்தைஆடே
உமக்கிங்கே அரசனாக வெட்கம் கொண்
டேன்
வெறும் பதரைக் கோல்பிடித்து காப்பார்
உண்டோ?
உணர்வில்லா ஜனத்துக்கு அரசன்வேறோ
ஒருகாலம்—இவ்வுலகம் கொள்ளும்கண்மீர்
குதிரைகளே உலகத்தின் பெருமூச்சாகும்.
குதிரைகளே இப்புவியில் செங்கோல்ஓச்சும்
விரல்நுனியால் விசையறிந்து வேகம்
காட்டும்
உழவுக்கும் தொழிலுக்கும் உதவியாகி
ஊர்விட்டு ஊர்போகக் கருவியாகி
விண்முட்டிப் பிறந்கி அனைத்தும்செயலும்
குதிரையே முன்நின்று நடத்தும்கண்மீர்

கலியென்ற காலமுண்டு இத்தரைமீதில்
கடவுளெனக் குதிரைவரும் ஆட்சிசெய்யும்
பல்வேறு ரூபத்தில் மனிதர்முன்னே
குதிரையெனும் பெருவுணர்வே
கைகொடுக்கும்
வளமான வாழ்வுண்டு மனிதர் அன்று
தேவரென வலம் வருவார் சொல்வேன்
கண்மீர்
கால்நடையில் ஆடுகளே செல்வம் என்ற
மக்களிடம் மன்னனெனஇருத்தல்வேண்டா
பசுக்களெனும் பார்ப்பனர்கள் காலம்
முடிந்து
குதிரையிது வினையிலே வேதர் பேசும்.
காலத்தை என்னுள்ளே இன்றே
கண்டேன்!
போய்வருவேன் என் மக்காள் விடை
கொடுப்பீர்
உம்மோடு இருத்தல் இனி இயலாதென்றான்
பெருமன்னன் வாள்வீசி தன்தலை
துணித்தான்.

கலியென்னும் குதிரையதன் ஆட்சியின்று
கண்திறக்கத் துவங்கிவிட்ட நேரம்
கண்டோம்
தலைதுணித்த பெருமன்னன் வருவான்
மீண்டும்
முகம்மட்டும் குதிரையாகக் கொண்டவாறு
குரங்குகளை மூத்தோராய் கொண்டமனிதர்
குணம்மாறி குதிரைக்கு வணக்கம்சொல்வர்
கலியென்ற குதிரையதன் ஆட்சி துவங்கும்
மனிதருக்குள் மறுபடியும் நேசம்துளிர்க்கும்
யாகங்கள் பூஜைகள் பூர்த்தி செய்யா
ஸ்நேகத்தை குதிரைகள் வளர்த்துக்
கொடுக்கும்.
குழப்பங்கள் முற்பரப்பில் தோன்றினாலும்
குதிரைகள் விஞ்ஞானம் உலகம்வளைக்கும்.
குதிரைகள் ஞானத்தை என்னுள்கண்டேன்
கலியென்னும் யுகத்துக்கு வரவு
சொன்னேன்.

''அபாரம் விஸ்வநாதன். அபாரம்'' காயத்ரி கைதட்டி பாராட்டினாள். ''எவ்வளவு தீர்மானமான போயட்ரி. எவ்வளவு நம்பிக்கை. நாளைக்கு சுபிட்சம் வரும்னு நம்பிக்கை. எல்லாரும் கலியுகம் மோசமானதுன்னு சொல்வா. நீங்க அற்புதமான காலம்னு நம்ப வைக்கறீங்க. ஸோ... விஞ்ஞானம் தான் ஐ மீன் குதிரை ஞானம்

தான் மனுஷாளுக்குள்ள ஸ்நேகம் வளர்க்கப் போறது. பரஸ்பரம் புரிஞ்சுக்க முடியும்.''

''கரெக்ட் காயத்ரி. நமக்குள்ள ஸ்நேகம் விஞ்ஞானம் தான் கொண்டு வந்து கொடுக்கணும். இனிமே வேற வழியில்லே.''

''எப்படி விஸ்வநாதன். சயின்ஸால யுத்தம் குறைஞ்சிருக்கா. கும்பல் கும்பலா சாகப்போறோம் ஒருநாளைக்கு. யார் கொன்னுன்னு கூட தெரியாம சாகப்போறோம்.''

''நோ அந்த ஸ்டேஜ் வராது காயத்ரி. என் அபிப்பிராயம் சாவினுடைய குரூரம் மனுஷனைக் கடுமையா தாக்கியிருக்கு. ஒரே ஒரு ஹிரோஷிமா, அணுகுண்டு போடறதை ரொம்ப ஒத்திப் போட்டிருக்கு. சேர சோழ பாண்டியர் காலத்தை விட இன்னிக்கு யுத்தம் குறைவு. எங்க சண்டை நடந்தாலும் முதலில் உலகத்துல அது நிக்கறதுக்கு எல்லாரும் கவலைப்படறாங்க. சண்டை வளரட்டும்னு யாரும் விரும்பலே. ஆரம்பக் குழப்பம் இப்ப இருக்கு. இது சரியா போகும். மனுஷன் கைல இருக்கற சக்தி அவனைப் பயமுறுத்தும். அந்த சக்தி எதிரே தான் ஒண்ணுமில்லேன்னு புரிஞ்சு போகும்.''

''தினசரி வாழ்க்கைக்கு எப்படி இது உதவியாகும் விசு. பாத்ரூம் லைட், டி.வி.செட், சினிமான்னு...?''

''சினிமா அல்பமா காயத்ரி. என்ன அற்புதம் அது. ஒரு மனுஷனை எவ்வளவு க்ளோசா காட்டறது. பதினாறு அடிக்குப் பதினாறு அடி ஒரு முகம் ஸ்கிரீன்ல தெரியறது எவ்வளவு உதவி!''

''புரியலே விஸ்வநாதன்.''

''நீ சரியான சினிமா பாக்கலே காயத்ரி. நான் ஜீஸஸ் க்ரைஸ்ட்டுன்னு ஒரு படம் வீடியோல பார்த்தேன். அப்பா... பத்து தடவை பைபிள் முழுக்கப் படிச்சா கூட எனக்கு கிறிஸ்துவைப் பத்தி புரிஞ்சிருக்காது. அந்த மனுஷனுடைய வேதனை. கவலை. ஜனங்களைப் பத்திய கருணை க்ளோசப்ல காமிக்கிற போது அந்தக் கவலை எனக்குள்ள ஒட்டிக்கறது. வெட்கமில்லாம சொல்றேன். குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள். அவர்களைத் தடுக்காதீர்கள்னு யேசு சொல்ற போது குழந்தைகளை அணைக்கக்கற போது என் குழந்தைகளை முதன்முதலா நான் ரொம்ப நேசிச்சேன். அந்த ஒரு சீன் மனசுல பதிஞ்சு போயிடுத்து. எல்லா ஜனங்களையும் குழந்தையா அணைக்கக்கற யேசு மனசு எனக்கு வந்துடுத்து. சினிமா அற்புதமான கண்டுபிடிப்பு — காயத்ரி. அதைத் தப்பா உபயோகப்படுத்தறோம். அணுவைப் பொதிச்ச நியூட்ரான் குண்டா மாத்தி நல்லதை பெட்டுக்கற மாதிரி பண்றோம். எனக்கு சினிமா ஆசை வந்ததுக்குக் காரணம் அதுல வர ஹீரோவோ ஹீரோயினோ இல்லே. அந்த காமிரா பண்ற வித்தை. மனுஷனை மனுஷனுக்கு நெருக்கமா காட்டற யுக்தி. கண்ணாடில மூஞ்சியைப் பாத்துக்கறதைவிட நூறு மடங்கு உசத்தி இது. நல்ல சினிமா வேணும்னு ஆசை இருக்கு காயத்ரி.''

''புரியறது விஸ்வநாதன். இதுல ஒரு சிக்கல். நீங்க தெரிஞ்சுக்கலே. மனுஷனுடைய குணம் இந்தக் கண்டுபிடிப்பால் மாறும்னு நெனைக்கறது பெரிய தப்பு. கத்திக்குப்



துணுக்கு பற்றிய துணுக்கு-பகுதி 1

பச்சையப்பன் கல்லூரியில் முதுகலை இரண்டாம் ஆண்டு தமிழ் இலக்கிய வகுப்பு நடந்து கொண்டிருந்தது. பேராசிரியர் அறவாணன் 'மொழி வரலாறு' நடத்திக் கொண்டிருந்தார். தமிழில் 'திணை பாகுபாடு' பற்றி வாதம் வந்தது. பேராசிரியர் சொன்னார்: ''ஆணும் பெண்ணும் உயர்திணையில் அடங்குகிறார்கள். ஆனால் அந்த உயர்திணை மக்களுக்குப் பிறக்கும் குழந்தை அஃறிணை என்கிறார்கள். எப்படி இது சரி? 'அவன்' என்பது ஆண்பாலில் அடங்கும். 'அவள்' என்பது பெண்பாலில் அடங்கும். 'குழந்தை' எந்தப் பாலில் அடங்கும்?'' என்று கேட்டு நிறுத்தினார். உடனே மாணவர் வைரமுத்து எழுந்து, ''தாய்ப்பாலில் அடங்கும்'' என்றார். வகுப்பறையில் ஒரே ஆரவாரம்.

—எம். பொன்மணி

இந்தத் துணுக்கு பற்றிய ஒரு துணுக்கு உள்ளது. அதை வேறு ஒரு பக்கத்தில் காண்க!

பதிலா துப்பாக்கி. தெருக்கூத்து தாசி டான்ஸுக்கு பதிலா சினிமா. எவ்வளவு பெரிய சக்தி கெடைச்சாலும் மனுஷனுடைய அடிப்படைக் குணம் வன்முறைதான். அதை வெளிப்படுத்தறதுதான். எல்லோருக்கும் மோட்டார் சைக்கிள் கெடைச்சா யாரு ஸ்பீடாப் போறதுங்கற போட்டிதான் வரும். குதிரை ரேஸ். இல்லேன்னு கார் ரேஸ் இல்லேன்னு ஏரோப்ளேன் ரேஸ். இந்தப் போட்டில ஒருத்தரை ஒருத்தர் முந்தணும். முந்திப் போறதுக்கு அடுத்தவனை இடிச்சு அழிக்கணும். மரமும் செடியும் கொடுக்கற டெம்பரரி அமைதி கூட அவனுக்கு வராம போயிடும். பனிமலையும் சந்திரனும் குளிர் காற்றும் கொடுக்கிற கொஞ்ச நிதானமும் காணமப் போகும். விஞ்ஞானம் அமைதியைக்கொடுக்காது விஸ்வநாதன். நாம பூண்டோட அழியப் போறோம். நெறைய கார்பன் டை ஆக்ஸைட் உற்பத்தி பண்ணி இயற்கையைப் பகைச்சுக்கப் போறோம்.''

''நாம இன்னிக்கு வந்திருக்கிற இடம் இயல்பான வளர்ச்சி இல்லையா காயத்ரி?''

''இல்லே விஸ்வநாதன். தப்பா காலடி எடுத்து வச்சாச்சு.''

(தொடரும்)



இலவசம்!

**கவர்ச்சியான
ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல்
கிண்ணம், 2 டின் ஃபாரெக்ஸ்
வாங்கும்போது.**

சில தேர்ந்தெடுத்த ஊர்களில்
மட்டுமே வழங்கப்படுகிறது.
ஸ்டாக் உள்ளவரை.



க்ளாக்ஸோ வழங்கும் **ஃபாரெக்ஸ்**®

வளரும் குழந்தைகளுக்கான விசேஷ திட உணவு.

CASGLF-43-203 TAM



இன்று போய் நாளை வா!

சுபா

இந்த மாதிரி இண்டர்வ்யூ வைபவங்களுக்கு மட்டும் போடுவதால் பழக்கமில்லாத ஷூ கணுக்காலை நெம்பி நெம்பி விட்டது. கால் கண்டுவிரல் விடுதலைக்குக் கதறியது.

டக் — டடக் — டக் — டடக்.

நிச் — சயம் — வெற்றி — தான்.

மனத்தில் லேசான கர்வம் கூட எழுந்தது. சமுதாயத்தில் அவன் மதிப்பு கூடிப்போகும். அம்மாவுக்கு அவன் காசில் ஒரு நாலு முழம் நித்திய மல்லி வாங்கித் தரலாம். அப்பாவுக்குக் கண்ணாடி ஃபிரேம் மாற்றலாம். ஜானுவுக்கு முதல் கட்டமாய் வெள்ளியில் ஜிமிக்கி தொங்கவிட்டு அழகு பார்க்கலாம். கல்யாணம் செய்து கொடுக்கையில் மற்றவை. அவன் தெரு முனை திரும்பும்வரையில் அம்மா வாசலிலேயே நின்று கொண்டிருந்ததைத் திரும்பிப் பார்த்தான். லேசாய்ச் சிரித்துக் கொண்டான்.

பஸ் ஸ்டாண்டில் திருவிழாக் கூட்டம்.

முழுக்கைச் சட்டையின் முனையை மடித்துக் கடிகாரத்தைப் பார்த்தான்.

ஒன்பது முப்பத்தைந்து. அப்பாவின் அருமையான பழங்காலத்துக் கடிகாரம். எண்ணெய் ஊறிய டயல். அழுக்கேறிய முட்கள். ஆனால் நொடி பிசகாமல் கடமையைச் செய்கிற ஜீவன்.

புத்தம் புதிதாய் ஜப்பான் கடிகாரம் காசு கொடுத்து அப்பாவால் வாங்க முடிந்தது. தனக்காக அல்ல. தன் இரண்டு மாப்பிள்ளைகளுக்காக. தலை தீபாவளிகளுக்கு வாட்சும், தங்கச் சங்கிலியுமாய் பி. எஃப். தேய்ந்திருந்தது. இன்னும் ஜானு வேறு காத்திருக்கிறாள்.

எல்லா அப்பாக்களையும் போல் திட்டாமல், 'என்னடா ஆச்சு?' என்று கேட்பார்.

'ரிக்ரெட் லெட்டர் வந்திருக்குப்பா... இந்த வேலை கண்டிப்பாக் கெடைச்சுடும்னு நெனைச்சிட்டிருந்தேன். இண்டர்வ்யூ கூட நல்லாப் பண்ணியிருந்தேன்....'

'பரவாயில்லை.... அடுத்த தரம் இன்னும் நல்லாப் பண்ணு. ஏதோ பாங்க் பரீட்சைக்கு நாப்பது ரூபா வேணும்னு கேட்டியாமே... இந்தா.'

'ஏதுப்பா பணம்... மருந்து வாங்கறதுக்கு மட்டும்தான் இருக்குன்னு அம்மா சொன்னாங்களே...'

'நான் என்ன சாகவா கெடக்கறேன். இன்னும் நாலு நாள்ல ஒண்ணாந் தேதி. அப்ப வாங்கிக்கிட்டாப் போவுது. அது வரைக்கும் பாங்க்காரன் காத்திட்டிருக்கமாட்டானே.'

இந்தப் பரிவுதான் வாள் மாதிரி நெஞ்சு வரை இறங்கும். எப்படியாவது இந்த முறை வெற்றி காண வேண்டும் என்னும் துடிப்பை நரம்புகளில் மீட்டும்.

மூன்று வருடங்கள். ஆயிரத்துக்கும் மேற்பட்ட கண்ணீர் இரவுகள்.

இன்னும் விடியவில்லை.

இன்றைக்கு விடிந்துவிடும்.

மூன்று கட்ட இண்டர்வ்யூவில் இரண்டைக் கடந்தாயிற்று. இன்றைக்குக் கடைசிக் கட்டம்.

'அட்மினிஸ்ட்ரேடிவ் ஆஃபீஸர்' என்ற பளபளப்பான உத்தியோகம். மூன்று காலி இடங்களுக்கு ஆறு பேர் கடைசிக் கட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள்.

ஆட்டோவில் போகலாமா என்று தோன்றியது. வீண் செலவு. பக்கத்தில் இருக்கிற மவுண்ட் ரோடுதானே. போய்விடலாம் என்று மனம் கணக்குப் போட்டு முடிப்பதற்குள் பஸ் வந்து விட்டது.

மவுண்ட் ரோடுக்கு ஒரு டிக்கட் வாங்கிக் கொண்டான். கூடியவரை நெம்பி நெம்பி உள்ளே போனான்.

ராயப்பேட்டை வந்ததும் அதிசயமாய் பஸ்ஸில் கூட்டம் குறைந்தது. திடீரென்று யாரோ தோளில் தட்டினார்கள். திரும்பினான். பின் இருக்கையில் இருந்த அந்த இளைஞன் சட்டென்று கையை இழுத்துக் கொண்டு ''ஸாரி'' என்றான். ''பின்னு

துணுக்கு பற்றிய துணுக்கு பகுதி 2

வேறு ஒரு பக்கத்தில் நீங்கள் படித்த துணுக்கு பத்து ஆண்டுகளுக்கு முன் 'ஆனந்த விகடன்' இதழில் பிரசுரமானது. இந்தத் துணுக்கில் அப்படி என்ன விசேஷம் என்கிறீர்களா? துணுக்கு எழுதியவர் பெயரைப் பாருங்கள்! இன்றைய 'பொன்மணி வைரமுத்து'தான் அவர்! துணுக்கில் உள்ள 'மாணவர் வைரமுத்து'தான் இன்றைய கவிஞர் வைரமுத்து!

—தகவல்: ஆர். அரிகோபி





லேர்ந்து பார்த்ததில என் ஃப்ரெண்ட் ஒருத்தன் மாதிரி இருந்தது. அதான் தட்டினேன் ஸாரி...'' என்றான்.

''பரவாயில்லை...''என்றான்ராமச்சந்திரன்.

''இங்கேயே நின்னுக்குங்க...நான் ஆர்ட்ஸ் காலேஜ்ல எறங்கப் போறேன்....சீட் கிடைக்கும்....''

''தாங்க்யூ....''

''கொஞ்சம் ஸ்டாப்பிங் வந்தவுடனே சொல்றீங்களா... எனக்கு மரக்காணந்தான் நேடிவ் ப்ளேஸ்...''

''ஓயெஸ்.''

அந்த இளைஞனை ஒட்டி முழங்கால் உயரத்திற்கு ஒரு பெட்டி குறுக்கில் நின்றது.

'ஆர். பிரகாஷ்' என்று ஸ்டிக்கர் ஒட்டியிருந்தது.

''சொச்சின் போறேன்... வெஸ்ட் கோஸ்டைப் பிடிக்கணும்'' என்றான் அவன்.

''சென்ட்ரல்ல இல்ல எறங்கணும். ஆர்ட்ஸ் காலேஜ்னீங்க?''

''வழில கொஞ்சம் வேலை. ரெண்டு மூணு புஸ்தகம் வாங்கணும். ஆர்ட்ஸ்காலேஜ் கிட்ட நெறையப் புத்தகக் கடைகள் இருக்குமுங்க....''

''ஆமா...''

''இன்டர்வ்யூவா?'' — ஆர். பிரகாஷ் கேட்டான்.

''ஆமா...''

''வெள்ளை சட்டை, பாண்ட்... பளபளச்ச ஷூ... கையில ஃபைல்... பார்த்தவுடனே நெனைச்சேன். ஏன்னு போன மாசம் வரைக்கும் இந்த வேஷத்தை நானும் அடிக்கடி போட்டுக்கிட்டிருந்தவன்தான்.''

''அப்படியா?'' என்று ராமச்சந்திரன் நட்பாய்ப் புன்னகைத்தான். ''அப்படின்னு இப்ப வேலை கெடைச்சிடுச்சா?''

''ம்.... கொச்சின்ல. இரண்டு வருஷம் ட்ரெயினிங். அப்புறம் மூணுவருஷம் பாண்ட். சேரப் போறதில்லன்னுதான் முதல்ல நெனைச்சிட்டிருந்தேன்.''

''ஏன்?''

''ரெண்டாயிரம் ரூபா செக்யூரிட்டி டெபாஸிட் கேட்டிருந்தாங்க. பணத்துக்கு எங்க போறது? வயசான அம்மா, தம்பி வேற பொடியன். எனக்கும் வேலை கெடையாது. எவன் கொடுப்பான் நம்பி. எங்கம்மாதான் விடலை. எல்லாம் போக மிச்சமிருந்த ரெண்டு வளையலை அடகு வச்சி ரெண்டாயிரம் புரட்டிக் கொடுத்தாங்க. அதை டிராஃப்டா மாத்தக்கூட நேரமில்ல... கௌம்பிட்டேன். நாளைக்குத்தான் லாஸ்ட் டே ஜாயின் பண்ண. இல்லாட்டி வேலை வேறே யாருக்காவது போயிடும்.''

அவனுடைய கண்ணுக்குக் கீழே இருந்த கருவளையங்கள் அவனுடைய கவலை பற்றிச் சொல்லின.

ஆர்ட்ஸ் காலேஜ் நிறுத்தத்துக்கு அருகில் பச்சைக்குக் காத்திருந்து பஸ் வலதில் திரும்பிற்று.

''இதான் உங்க ஸ்டாப்பிங்'' என்றான் ராமச்சந்திரன்.

''தாங்க்யூ.... நீங்க உக்காருங்க'' என்று எழுந்து கொண்டான்.

''விஷ் யூ ஆல் தி பெஸ்ட்'' என்று அவன் சொன்னது காற்றில் மிதந்து வந்து அவனை அடைந்து விலகிப் போயிற்று.

இரண்டு ஸ்டாப்பிங் தள்ளி ராமச்சந்திரன் இறங்கினான்.

ஒன்பது ஐம்பது. இன்னும் பத்தே நிமிடங்கள். போய்விடலாம். பஸ் கிளம்பிற்று.

''சார்....'' என்று பஸ்ஸுக்கு உள்ளேயிருந்து பதற்றமான குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தான்.

''உங்க பர்ஸ்....'' என்று ஒரு கை நீண்டு இவனைப் பார்த்து வீசியது. பழுப்பு வண்ணத்தில் தோல் பர்ஸ். தன்னுடைய பர்ஸ் இல்லை என்று உணரு முன் பஸ் வேகம் பிடித்திருந்தது.

ஒரு பரபரப்பில் அதைத் திறந்து பார்த்தான். ஓரங்கள் கிழிந்து நைந்து இருந்த அந்தப் பர்ஸில் பிரசவப் பெண் மாதிரி உப்பிக்கொண்டு நூறு ரூபாய் நோட்டுக்கள். இரண்டு விரல் அகலத்திற்கு பழுப்பு அட்டையில் ரயில்வே டிக்கட். பின்னால் ஆர் பிரகாஷ் (26) என்று பால் பாயிண்ட் எழுத்துகள். நாலாய் மடித்த இன்னொரு காகிதம். நாளைக் காலை பத்து மணிக்கு இரண்டாயிரம் ரூபாயோடு வரச் சொல்லி வேண்டுகோள் விட்டிருந்த மூன்றுவதும் கடைசியுமான நினைவூட்டல் கடிதம்.

ராமச்சந்திரனுக்குக் கை வெட வெடவென்று நடுங்கியது. உடம்பு வியர்த்தது.

உடனே என்ன செய்ய வேண்டும் எனப் புரியாமல் குழப்பமா யிருந்தது. நடுச் சாலையில் மஞ்சள் கோட்டுக்கருகே நின்றிருந்த கான்ஸ்டபிளிடம் கொண்டு போய்க் கொடுத்து விடலாமா என்று தோன்றிற்று. அதில் மனம் சமாதானம் அடையும் என்று தோன்றவில்லை.

எந்தக் கடைக்குப் போயிருப்பான் அவன்? ஐந்து நிமிடமா பத்து நிமிடமா அவனைத் தேடிக் கண்டு பிடித்து நேரடியாய்ச் சேர்ப்பித்து விட்டாலென்ன என்று தோன்றிற்று.

சட்டென்று ஒரு ஆட்டோவைப் பிடித்தான்.

''அண்ணன் காவலர்; தம்பி பல்லவர்! இவங்க ரெண்டு பேருக்கும் பிடிச்ச காய்கறி எது தெரியுமா ''

''தெரியலியே! என்ன அது ''

''பீட் - ரூட்!'' —சி. பூபால் சிங்



டெட் கட்டியில் மட்டுமே உள்ளது ஸால்வெண்ட் பவர்


இது துணிகளுக்கு முற்றிலும் பளிச்சிடும் வெண்மை அளிக்கிறது



வேறெந்த டிடர்ஜெண்ட் கட்டியும் பாரும் இதற்கு இணையில்லை பாரும்



DIPR/509/83/ELEGANT



டைரக்டர்: நம்ம பட விநியோகஸ்தர் படத்துக்கு இன்னும் கொஞ்சம் மசாலா சேர்க்கச் சொன்னார்!

முதல் புத்தகக் கடையில் நுழைந்தவுடனேயே ''அதை இப்படி வச்சிட்டுப் போங்க'' என்று ஒரு சிப்பந்தி டோக்கனை நீட்டி ஃபைலை வாங்கி வைத்துக் கொண்டான். ராமச்சந்திரன் சுற்றிச் சுற்றி வந்தான். ஆர். பிரகாஷ் என்ன கலரில் சட்டை போட்டிருந்தான் என்று யோசித்துப் பார்த்தான். கண்ணாடி போட்டிருந்தானா இல்லையா என்று நினைவைத் தட்டிப் பார்த்தான். முகத்தை நினைவுபடுத்திப் பார்த்தான். அந்தக் கருவளையங்களும் அவன் சோகமும் தான் நினைவுக்கு வந்தது. கையில் பெட்டி வைத்திருப்பார்களோ யாராவது என்று கண்களைச் சுழற்றினான். பெட்டி வைத்திருந்தாலும் சவுண்டரிலேயே மடக்கி விடுவார்கள் என்று அப்புறம்தான் உறைத்தது.

அவனைக் காணவில்லை.

திடுதிடுவென்று வெளியில் வந்தான்.

''கொஞ்சம் வெயிட் பண்ணுப்பா...'' என்று ஆட்டோவிடம் கூறிவிட்டு விரைந்து வந்த வண்டிகளுக்கிடையில் குறுக்கும் நெடுக்குமாய் ஓடினான். எதிர்ச் சாரியிலிருந்த புத்தகக் கடையில் நுழைந்து காக்காய்ப் பார்வை பார்த்தான். இல்லை. பக்கத்துக் கடை. அதற்கடுத்த கடை என்று நேரம் விரலிடுக்கில் நழுவிக் கொண்டிருந்தது.

கடிகாரத்தைப் பார்த்தான். பத்து ஐந்து.

'நீங்கள் மிகக் கூர்மையாகப் பத்து மணிக்கு எங்கள் அலுவலகத்திற்கு வந்து சேரவேண்டுமென....'

ஏற்கெனவே ஐந்து நிமிஷம் லேட்.

இரண்டாயிரம் தொலைந்து போனால் படித்த இளைஞன் என்ன செய்வான்? முதலில் அருகில் இருக்கும் போலீஸ் ஸ்டேஷனுக்குள் நுழைந்து அந்த பஸ்ஸை டெர்மினலில் நிறுத்தி வைக்க ஏற்பாடு செய்யப் பார்ப்பான். ஒருவேளை போலீஸிடம்தான் பிரகாஷ் போயிருப்பானோ?

அவசரமாய் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடினான். ஆட்டோ அங்கேயே ஒரு வளைசல் வளைந்து அவனைத் துரத்திக் கொண்டு வந்தது. போலீஸ் ஸ்டேஷனில் ஒரு தினத்தாள் படித்துக் கொண்டிருந்த கான்ஸ்டபிள். வாக்கப் கம்பியைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்த ஒரு ஆள். அப்புறம் ஆர். பிரகாஷ் இல்லை. வேறு யாரோ.

''ஆர். பிரகாஷ்...''! என்றான் தடுமாறிப் போய்.

''யாருங்க... பிரஸாத் ஸாரா அவர் லீவிலே போயிருக்காரே...''

''தாங்க்ஸ்'' என்று சொல்லி வெளியே வந்தான். மனம் படபடவென்று அடித்துக் கொண்டது. நேரே ரயில்வே ஸ்டேஷனுக்கே போய்ப் பார்த்தால் என்ன?

''ஆட்டோ சென்ட்ரலுக்குப் போ...''

சென்ட்ரலில் நுழைந்தவுடன் ஸ்டேஷன் மாஸ்டரைப் பார்த்தான். விவரங்கள் சொன்னான். அவர் பொறுமையாய் இன்டர்காமை கையில் எடுத்தபோது ஆவேசமாய் வந்தது. இரண்டு நிமிடங்களில் பிளாட்ஃபார்ம், பிளாட்பாரமாய் பிரகாஷைக் கூவி அழைத்தது ஸ்பீக்கர்.

ஒவ்வொரு கை தள்ளு கதவைத் திறக்கும் போதும் எழுந்து கொண்டான். வலது புஜத்தில் டோக்கன் கட்டியிருந்த போர்ட்டரிலிருந்து கையெழுத்து வாங்க வந்த அஸிஸ்டெண்ட் என்று ஐம்பது பேர் சுமாருக்கு வந்து போனார்கள்.

''நீங்க கொஞ்சம் பொறுமையா உக்-காருங்க...'' என்றார் ஸ்டேஷன் மாஸ்டர்.

''ட்ரெயின் போயிடுமே...''

''போகாது. அதுக்கு இன்னும் கொஞ்சம் நேரமிருக்கு.''

பல்லைக் கடித்துக் கொண்டான்.

பத்து ஐம்பதுக்குப் பரபரப்பாய் ஓடிவந்தான் பிரகாஷ்.

கண்கள் பொங்கியிருந்தன. இவனைக் கண்டதும் நீர் கன்னத்தில் இறங்கியது.

''தாங்க்ஸ்... தாங்க்ஸ்....'' என்று மறுபடி மறுபடி முனகினான்.

ராமச்சந்திரன் அந்தத்தோல் பர்ஸை அவனிடம் நீட்டினான். ஆர். பிரகாஷ் பர்ஸோடு சேர்த்துக் கைகளையும் பிடித்துக் கொண்டான். ஒரு வேகத்தில் சட்டென்று அவனை இழுத்துக் கட்டிக் கொண்டான்.

''நீங்க இண்டர்வ்யூ போகணுமில்லே''

''போகணும். நீங்க பேசிட்டு டயத்தை வேஸ்ட் பண்ணுறீங்க... ட்ரெயின் கிளம்பிடப் போகுது. பொறப்படுங்க...''

ராமச்சந்திரன் ஸ்டேஷனை விட்டு வெளியில் வந்தான். நிமிர்ந்து மணிக்கூண்டைப் பார்த்தான். பதினொன்று!

இடது கை வாகாய் ஃபைலைப் பிடிக்க எத்தனித்தது...; அட! என்று உறைத்தது. ஃபைலைப் புத்தகக் கடையிலேயே விட்டு வந்தது நினைவுக்கு வந்தது.

சுரங்கப் பாதையில் இறங்கினான்.

இண்டர்வியூ இந்நேரம் முடிந்திருக்கும். ஐந்து பேர்களில் மூவரைத் தேர்ந்தெடுத்திருப்பார்கள். இவனுடைய பிரகாசமான விடியல் தள்ளிப் போய்விடக் கூடும்.

''ஐய பார்த்துப் போயேம்பா... குழந்தை காலை மெதிச்சுக்கினே போறியே...''

''கவனிக்கலம்மா.''

படிகளில் ஏறினான். பஸ்ஸுக்காகக் காத்திருந்தபோது பரபரப்பில்லாமல் இருந்தது. கசங்கியிருந்த சட்டையை நீவி விட்டுக் கொள்ள வேண்டுமென்று துடிப்பில்லாமல் இருந்தது.

ஏழு மணி. காலையின் ஆரம்ப வெப்பம். வடமேற்காய்ப் பலர் போய்க் கொண்டிருந்தார்கள் சந்தைக்கு. செவ்வாய்க் கிழமை.

கலைநிமிர்ந்துபோன தக்காளி பற்றி விமர்சனப் பரிமாறல்கள்.

நேரம் ஆகிக் கொண்டிருந்தது.

தியாகேசன் எங்கேயோ அலைபாய விட்டான் கண்களை. ரோகிணி ஜீன்ஸில் இருந்தாள். கட்டம் போட்ட ஸ்லாக் அவளுக்கு இளமை எடுப்போடு இருந்தது.

நான் — ராஜா — கைக் கடிகாரத்தைப் பார்த்தேன். எங்கள் மூவரின் மனத்துக்குள்ளேயும் ஓர் அவசர ரத்தம்.

புதையல்!

எதிர்பார்த்த பஸ் வராததைக் குறித்து, பஸ் ஸ்டாண்டின் சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தவரைக் கேட்க....

''இப்பத்தான் எட்டாம் நம்பர் போனுப்பல. வரும். நீங்க எங்க போறுப்பல...?''

நாங்கள் சென்னையிலிருந்து வந்ததைக் கேட்டுக் கொண்டார். வந்திறங்கிய சென்ட்ரல் பஸ் ஸ்டாண்டிலேயே, நாங்கள் போகவிருக்கும் சிதம்பரத்துக்குப் பஸ் இருக்க, இங்கே வருவானேன் என்றும் துக்கம் விசாரித்தார். மந்தாரக்குப்பத்தில் இறங்குவதற்குப் பதிலாக இந்தச் செவ்வாய் சந்தை பஸ் ஸ்டாண்டில் தவறுதலாக இறங்கியதற்கு அடிஷனல் அனுதாபத்தை 'எங்கள் முன் கொட்டித் தீர்த்தார்.

சற்றுத் தள்ளினாற்போல் எதிரே காளி கோவிலில் காவியுடை இளைஞனின் கைச் சிலம்புக் கையசைவுகள். பின்னால் தூரப் பார்வையில் தீப்பெட்டிகளை அடுக்கி வைத்தாற்போல் மாடிக் கட்டிடங்கள். கேட்க ஆளில்லாத சந்தர்ப்பத்தில் சுதந்திரமாய் ஒரு மினி குற்றாலத்தைச் சிருஷ்டிக்கும் வாட்டர் டாங்க்.

''புதுக்குப்பம் ரவுண்டாணு போனு பெரியார் பேருந்து வருமாம் போயிடுங்க'' என்றார்.

போனேம்.

ரோகிணி தோளில் மாட்டிய பையைக் குலர் வழியே சுற்றிச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தாள். எங்களிடம் அதிகம் லக்கேஜ் இல்லை. தியாகேசனிடம் ஒரு 'கிட் பாக்' இருந்தது. என்னிடம் ஒரு காடா பை. ரோகிணியிடம் ஒரு ஜிப் போட்ட ஏர்-பாக்.

தியாகேசனிடம்தான் புதையலை எடுக்க வேண்டிய முக்கிய அஸ்திரங்கள் இருந்தன.

அம்பேத்கார் சிலையைத் தாண்டும்போதுதான் பஸ் வந்தது.

ஏறி அமர்ந்தபோது ரோகிணி ''மனசில ஏதோ பயமா இருக்கு. என்னன்னு தெரியல்லே. உனக்கு எப்படி இருக்கு ராஜா?'' என்றாள்.

''பாரு. தியாகேசன் ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்ட் விவரங்களை அத்துப்படி செஞ்சவன். கையிலே 'மேப்'போடுதான் வந்திருக்கான். அந்த வரைபடம் எப்படிக் கிடைச்சது, எங்கே கிடைச்சதுன்ற அநாவசியமான சந்தேகங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டுத்தான் இந்தப் பயணத்தை ஆரம்பிச்சிருக்கோம். தெரிஞ்சுதா?''

''தியாகேசனை நீ நம்பறியா?''

பிச்சாவரத்தில் ஒரு புதையல்

— பத்மஜா —



''நம்பணும். அவன் என் டியரஸ்ட் ஃப்ரண்ட். அவன் வச்ச குறி தவறுது. பல நூறு வருஷங்களுக்கு முன்னுலே கப்பல் கொள்ளைக்காரங்களோட ஆக்கிரமிப்பிலே கிடைச்ச பொருட்கள் இந்தப் புதையல்லே அடங்கியிருக்கு. கடலிலிருந்து எப்படி அலைமோதிக் கடலோரப் பகுதியிலே இருக்கிற பிச்சாவரத்துக்கு வந்ததுங்கறது நமக்குத் தெரியாது. ஆனா அந்த விவரங்கள், புதையல் விவரங்கள் மட்டும் அடங்கிய விதம் தியாகேசனுக்குக் கிடைச்சிருக்கு. நம்ம அதிர்ஷ்டம், தியாகேசன் எனக்கு க்ளோஸ் பிரண்டா இருந்தது. அதனுலேதான் நம்மையே துணையா அழைச்சிக்கிட்டுப் போறான். வேறே யாராவதுன்னு மொத்தமா கனையா சுருட்டப் பார்ப்பாங்க. கொஞ்சம் பொறுமை வேணும். எதுக்கும். எல்லாத்துக்கும்.''

ரோகிணிக்கு முழுத் தெம்பில்லேதான். பேருக்குத்தலையசைத்தான். மனத்தில்சஞ்சலப் படபடப்பு.

ரோகிணி எதை எதையோ டைனுக்குலர் வழியாய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சிதம்பரத்தை நெருங்கி விட்டோம் என்பதற்கு அறிகுறியாகத் தூரத்தில் கோபுரம் தெரிந்தது.

''கோபுர தரிசனம் கோடி பாபமும் தொலையுமாம்.'' ரோகிணி அவசரமாய்ச் சொன்னாள்.

தியாகேசன் திரும்பினான். லேசாகச் சிரித்தான் என்னைப் பார்த்து. நாங்கள் செய்யப் போகிற, செய்த பாவங்களுக்கு எத்தனை கோபுர தரிசனமும் போதாதே' என்பது போல.


பாக்கெட்டிலிருந்து காட்பரீஸ் எடுத்துச் சுவைத்தாள் ரோகிணி. அவளது பிரகாசமான கண்கள் ஆவலைக் காட்டின.

ரோகிணி எனக்கு முறைப் பெண். 'அட்வெஞ்சர்' என்றால் அவளுக்கு அல்வா மாதிரி. அவள் எனக்காக என்று ஆவதற்குள்தான் இந்தப் பயணம்.

சிதம்பரம் பஸ் ஸ்டாண்டில் வந்திறங்கியதுமே எங்களை வரவேற்றது பிச்சாவரம் பஸ். ஏறினோம். பஸ்ஸில் அத்தனை பேரும் கிராமவாசிகள். எங்களை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள்.

மொட்டைத் தலையன்: 'பையன் பிழைச்சுக்குவான்'னு எங்க அப்பா என்னைப் பத்திப் பெருமையாச் சொல்லுவார்
ஹிப்பி: எதனால.
மொ. தலை: சமையல் வேலையிலே அவர் கூட மாட ஒத்தாசையா இருக்கேனே!

—ப பழநி



''தியாகேசனுக்கு ஒரு தனி கிஃப்ட். தண்ணீருக்குள் இரும்பு மறைந்திருந்தாலும் உடனே அதைக் குத்திட்டுச் சொல்வான்'' என்றேன். ரோகிணிக்கு ஆச்சரியம்.

''விதெப்படி சீல் செய்யப்பட்ட இரும்புக் கவசம் போன்ற ஒன்றில்தான் புதையல் அடங்கியிருக்காம்.''

சிறிது நேரத்துக்கெல்லாம் கடற்கரை மணல் திட்டுக்கள் பாதையோரம் தெரியப் பிச்சாவரம் வந்தது.

தார் ரோடு பிச்சாவரம் நீர்நிலையருகே அழைத்துச் சென்றது. இருமருங்கும் காட்டு மரங்கள் அடர்த்தி. இவற்றிற்கிடையே பாயும் கடற்கசிவு நீர்நிலை.

ஆறு ஏழு படகுகள் இருந்தன. வாடகை பதினைந்து என்றான் ஒருவன். அவன் படகுக்குள் ஏறிப் புறப்படுவதற்குத் தயார்ப் படுத்தினான்.

அவனை மெல்ல இறக்கிவிட்டு ''நாங்கள் துடுப்புப் போட உத்தேசம், நீ தேவையில்லை'' என்றேன். என் புஜ வலிமையையும் தியாகேசனின் கட்டுமஸ்தான உடலையும் மாறி மாறிப் பார்த்துவிட்டு, ''சரிங்க!'' என்றான். நாங்கள் போகும் காரியத்திற்கு மூன்றாவது மனிதனின் மூச்சுக்கூட நெருங்கக் கூடாதே!

ரோகிணி படகின் நடுவில் அமர, தியாகேசன் ஒருபுறம், மற்றொருபுறம் நான் துடுப்பு போட, மெல்லப் படகு நகர்ந்தது.

கடலின் கையணைப்பில் இருக்கும் இடமாதலால் கடற் காற்றின் சகவாசம்.

தியாகேசன் முதன் முதலாகப் பேசினான். ''கப்பல் கொள்ளைக்காரர்கள் பலவிதம் உண்டு. கப்பலைத் தாக்கும்போது பொன்னைத் தொடுவார்கள். பெண்ணைத் தொட மாட்டார்கள்!'' என்றான்.

''பீட்டர்பான் கதையில் கூட கப்பற் கொள்ளைக்காரர்கள் வருவாங்களே!'' கான்வெண்ட் தனமாய்ச் சொன்னாள் ரோகிணி.

''கப்பலைச் சூறையாடிவிட்டு அதைக் கொளுத்தி வேடிக்கை பார்ப்பது சிலரது வாடிக்கை. சிலசமயம் கொள்ளையடிச்சி கொஞ்சம் கொஞ்சமாய்க் கப்பலை மூழ்கடிக்கச் செய்து ஆரவாரம் செய்வார்களாம்.''

''வைரவியாபாரிகளின் கப்பல்தான் அவங்களுக்குப் பொல்லாப் பசியைத் தீர்க்கிற தீனி! அப்படிப்பட்ட வைர வியாபாரிகள் கப்பலில் கொள்ளையடிக்கப் பட்டவைரங்கள்தான்நாம் தேடிப் போகிற புதையல்!''

சட்டென ரோகிணி நிமிர்ந்தாள். ''ராஜா அங்கே பாருங்க!'' என்றாள்.

தண்ணீரைத் தொட்டுக் கொண்டாற் போல் மரக் கிளைகள் இருபுறமும். படகில் அந்த இடத்தைக் கடக்க, மூவரும் பணிந்து 'மரியாதை' செலுத்தினோம் இயற்கைக்கு.

தியாகேசன் சுற்று முற்றும் பார்த்தான்.

''நம்ப இடத்துக்குப் போவோமா?'' என்றான் என்னிடம் ஜாடையாக.

''சரி'' என்றேன்.

படகு மெல்லத் திரும்பியது. கிளைகள் இருபுறமும் அடர்த்தியாய் இருக்க, கையால் அவற்றைத் தள்ளி, ஒதுக்கி, கடந்து போனோம்.

காந்தமென அலங்காரம் கவர்ந்திழுக்க சாந்தமுள்ள பொட்டிடுவீர் நெற்றியிலே...
தீட்டிடுவீர் கண்களிலே சிங்கார் கண்மை.



சிறப்புச் சலுகை

இலவசம்

சிங்கார் கண்மை மினி பேக்

சிங்கார் டீலக்ஸ் குங்கும் வாங்குந்தோறும் சரக்குகள் தீரும் வரை.



உங்களுக்குத் தெரியும் தரத்தின் சிகரம் எமது சிங்கார் டீலக்ஸ் குங்கும் பொட்டு—அதற்குப் பொருத்தமாய் இப்போது தீட்டிடுங்கள் சிங்கார் கண்மை— உன்னத பொருட்களால் உருவானது சிங்கார் கண்மை—கண்களுக்கு சிறப்பு. சிங்கார் வழங்கும் சிறப்புச் சலுகை—இலவச கண்மை மினி பேக் டீலக்ஸ் குங்கும் பொட்டு (பிந்தி) வாங்குந்தோறும்.



சிங்கார்

சிங்கார் டீலக்ஸ் குங்கும் பொட்டு (பிந்தி)
சிங்கார் டீலக்ஸ் கண்மை

everest/82/SH/670-tm

கையில் இருந்த துடுப்பைக் கீழே தள்ளி ஞன். அவசரமாய்த் தன் தோள்பையிலிருந்த வரைபடத்தைத் துழாவி எடுத்து அதைக் கூர்ந்து பார்த்து. ''இங்கேதான்..., வந்துட் டோம், ராஜா!'' என்ருன்.

ரோகிணி சட்டென எழுந்து நிற்க முயல, படகு மெல்ல வலதுபுறமாய்ச் சாய்ந்தது.

''ஏய்....ஏய்....!'' என்ருன் தியாகேசன். ''உட்காரு, அப்படியே உட்காரு. நாங்க பாத்துக்கரோம்!''

பரபரவென்று தன் 'கிட் பாக்'கிலிருந்து நீளமான கயிற்றை நீருக்குள் இறக்கிஞன். அதன் முனையில் வலிமையான இரும்புக் கொக்கி. கயிற்றை அப்படியும் இப்படியும் அசைத்தான்.

நீரைக் கூர்ந்து நோக்கிஞன்.

''நான் சொன்னேனில்லே. தண்ணீருக்குள் ஊடுருவும் கண் அவனுக்கு என்று?'' — நான் ரோகிணியை ஜாடையாய்ப் பார்த் தேன். ''ஹி வில் லொகேட் இட்!'' என்றேன்.

ரோகிணி, கைகளிரண்டையும் சேர்த்துக் கன்னத்தின்மீது பதியவைத்து அழுத்திஞள். அவளின் முத்திரை. கண் இமைகள் படபட வென்று அடித்துக் கொண்டன.

வேகமாய் வீசிய கடற் காற்று சில் லென்று இருந்தது. மரங்கள் அசைந்து அசைந்து அசாதாரண சப்தம் எழுப்ந்தது.

ரோகிணியின் ஷர்ட்டின் இறுக்கத்தைப் பார்க்க முடிந்தது. அவளது பாதங்கள், படகின் மர ஓரங்களை உராய்ந்து கொண் டிருந்தன. அழுத்தமாய் மடிந்து கொண் டிருந்தன பாத விரல்கள்.

தியாகேசனோடு நானும் சேர்ந்து கொண் டேன். அவன் சட்டென்று கயிற்றை இழுக்க, பாதி தூரம் வந்ததும் ரோகிணியும் சேர்ந்து கொண்டாள். நீருக்குள் இருந்த போது இருந்ததை விட மேல் மட்டத்துக்கு வந்ததும் அந்த இரும்புப் பெட்டியின் முழு பாரத்தை உணர முடிந்தது.

பெட்டி பழைய கால முத்திரையோடு சற்றுப் பெரியதாகவே இருந்தது.

படகைக் கரையோரமாச நிறுத்தி விட்டு, தியாகேசன் சுற்றும் முற்றும் பார்த்தான். யாருமில்லே. அலாதியான அமைதி.

ரோகிணி பறந்து கொண்டிருந்த தன் முடிக் கற்றையை வருடிஞள். மென்று விழுங்கிஞள்.

கரையில் பெட்டியைத் தள்ளி, தியா கேசன் தன் 'கிட் பாக்'கிலிருந்த சுத்தி, சின்ன உளி முதலியவற்றை வெளியில் எடுத் தான். ''கமான் ஹர்ரி அப்!'' என்ருன்.

எல்லோருக்கும் அவசரம், படபடப்பு.

ஆணிகளைப் பெயர்த்து எடுக்கச் சிரமமா இருந்தது. பலமாகவே அறையப்பட்ட ஆணிகள். இரும்புப் பட்டைகள். துருப் பிடித்த பகுதிகள். தியாகேசனின் கண்கள் சிவந்திருந்தன. அழுத்தி அழுத்திப் பலம் கொண்ட மட்டும் முயன்று அவன் திறக்க—

அத்தனையும் வைரங்கள்! ஜொலிக்கும் நவரத்தினங்கள்! விதவிதமான நகைகள்!

''ஓ....ஃபெண்டாஸ்டிக்! மார்வலெஸ்!''— ரோகிணி வாய் விட்டுக் கத்தியே விட்டாள்.

''நீங்க எழுதின அந்த அற்புதமான சரித்திர நாவலைப் படித்த பிறகுதான் என் வாழ்க்கையிலேயே பெரிய மாறு தல் ஏற்பட்டு விட்டது சார்!''

—அமுதன் மைந்தன்



''உஷ்! உஷ்!'' என்று அவளை அடக்கிஞன் தியாகேசன். அவன் கொண்டு வந்த ஆயு தங்கள் வைத்த பையை விரித்துப் பரப்பி அந்தப் பொக்கிஷங்களை அவசரமாக நிரப்பிக் கொண்டான்.

மறுநாள் இரவு. ஆடம்பர ஐந்து நட்சத் திர ஹோட்டலில் —

மதுக் கோப்பையை விட்டெறிந்தான் தியாகேசன். அவனுடைய 'நல்ல' பழக்கங் களில் அதுவும் ஒன்று.

''என்ன ராஜா! நம்ப திட்டம் சக்ஸஸ் தானே! எப்படி என் சாகசம்!!''

''மார்வெலெஸ்!''

''ரோகிணியை நம்ப வைத்தாயிற்று அந்த வைரங்கள் எல்லாம் புதையல்தான் என்று! ஓ!என்ன மாஸ்டர் பிளான் என்னுடையது பார்த்தாயா? இதற்காகவே செவண்டி ஃபைவ்வுக்குப் பதிலா நைண்டி பர்செண்ட் பங்கு எனக்குச் சேரணும். என்ன ராஜா! ஹைதராபாத்தில் நகைக் கடையில் நாம ரெண்டு பேரும் கொள்ளையடிச்ச நகைகள் தான் இதெல்லாம்னு ரோகிணியாலகொக்கி போட முடியாது நம்ப மேலே. ஏது இவ் வளவு பணம் வந்ததுன்னு சந்தேகம் கேட் கிற ரோகிணியையும் 'புதையல்' எடுக்க அழைச்சிக்கிட்டு வந்துட்டே! சாமர்த்திய ராஜா தாண்டா நீ!''

''புதையல்னு சொல்ற மாதிரி ஒரு பழைய காலப் பெட்டியை செலக்ட் பண் ணினது நீதாண்டா. கொள்ளை யடிச்சதை, இங்கே தண்ணிக்குள்ளே இறக்கிட்டேன்னு சொன்ன நாளிலிருந்து எனக்குத் தூக்க மில்லே. எவனாவது நமக்கு முன்னால இதை யெல்லாம் சுருட்டிட்டுப் போயிடப் போரு னேன்னு! சரியான இடம் பார்த்துத்தான் பெட்டியை இறக்கி யிருக்கே! கப்பற் கொள்ளைக்காரர்கள் வரலாறெல்லாம் நல் லாவே விவரிச்சேடா... ரொம்ப தாங்க்ஸ்!''

''இப்பா எல்லாம் தயார்தானே, ரோகி ணியை அடையறதுக்கு? கோ அஹெட் ராஜா!''

பெரிதாகச் சிரித்தான் தியாகேசன்.

பூக்களின்று புலம்புகின்றது!

மதுச்சந்திரன்

இருள் தூங்கும் இல்வாழ்வில் எங்களுக்கு வெறுமையின்
இரவுகளே தெரிகின்றது
ஒருகாலம் வருமென்று உரைத்திட்ட கவிதைகளும்
உறக்கத்தில் அமிழ்கின்றது

சிருங்கார எண்ணத்தை சிந்தையிலே நஞ்சாக்கும்
சித்திரங்கள் வருகின்றது.
வருங்காலம் செழித்திடவே விடிவெள்ளி முளைக்காதோ
விடைகளும் துயில்கின்றது.

நெருப்பாற்றில் நீந்துகிற நினைவலைகள் தொடர்ந்தாலே
நித்திரையும் கெடுகின்றது
செருப்பாக உழைத்தாலும் சிந்துவாரில் லாமலொரு
சித்ரவதை நடக்கின்றது


உருவாக்க முயல்கின்ற உணர்வுகள் ஒடுங்கிப்போய்
உரிமையின்றி அழுகின்றது.
மறுப்பாரை மிதித்திங்கு மறுவாழ்வு பிறக்குமென
மனமிங்கு சொல்கின்றது

பொறுப்பாக்கிக்கொண்டவர்கள்புதுமையினைமறுக்கின்ற
புத்தியின்மை புரிகின்றது
கருவினிலே உருவான கண்ணீரின் யாத்திரையோ
காலமெல்லாம் தொடர்கின்றது

பெரும்பாடு படுகின்ற பாட்டாளி வர்க்கங்கள்
புயலினில் அழிகின்றது
பருவகாலத் தென்றலினை பாடலுக்கு மறுத்ததினால்
பூக்களின்று புலம்புகின்றது.






"தொலைக்காட்சியா,
தொல்லைக்காட்சியா?
எது வேண்டுமென நீங்களே முடிவு
செய்யுங்கள்!"

என்று வினவுகிறார், தி.நகரில் உள்ள 'ஏஜன்சீஸ் அண்டு ஏஜன்சீஸ்' உரிமையாளர் திரு. சந்திரசேகர். ''தொல்லையை யாரும் வாங்க மாட்டார்கள். ஆனால் உங்களுக்குத் தெரியாமலேயே அதை வாங்கிட நேரலாம், அல்லது அதைப்பற்றி ஓரளவுக்குத் தெரிந்தும் அதிகம் தெரியாத காரணத்தால் வாங்கிட நேரலாம்!

ஆதலால், டிவியை வாங்குவதற்கு முன் எல்லா டிவிகளையும் நன்றாக அலசி ஆராய்ந்து தெரிந்து கொண்ட பின்னரே எந்த டிவியை வாங்குவதென முடிவெடுக்க வேண்டும்—அதாவது நீங்கள் வாங்கும் டிவி, எலக்ட்ரானிக்ஸ் துறையிலே மிக நம்பகமான பெயர் கொண்டதா என பாருங்கள் அது மட்டுமன்றி, அது எல்லோராலும் விரும்பப்படும் அடிக்கடி தொல்லைத்தராத டிவியா என பாருங்கள்?

பிறகு டிவியின் ஸ்விட்சைப்போட்டு செய்தி வாசிப்பவரின் கண் இமைகள் கூட துல்லியமாகத் தெரியும் படத்தோற்றம் உள்ளதா என சிறிது பாருங்கள். இவையாவும் ஒருங்கே ஒரு டிவியில் இருக்குமானால் அது சாலிடெராகத்தான் இருக்க வேண்டும்."

அனுபவம் பேசுகிறது, ஆதாரபூர்வமாக! இவையெல்லாம் சாலிடெரின் சிறந்த செயல் திறனுக்கான அத்தாட்சி. அடிக்கடி தொல்லைத் தராத ஒரே டிவி சாலிடெர் என்பது உறுதியான உண்மை.


மேலும் சாலிடெரின் பழுதுபார்க்கும் சர்வீஸ் என்ஜினியர்கள் எப்பொழுதும், எங்கிலும் உங்களுக்காகவே சேவை செய்யக் காத்திருக்கின்றனர். அதற்கும் மேலாக சாலிடெரின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறையினர் (R & D) நீங்கள் எதிர்பார்க்கும் வகையில், சிறந்ததை மேலும் சிறப்புற்றதாக்கும் பணியில் ஈடுப்பட்டுள்ளனர். எப்பொழுதும் உங்களுக்காகவே!

இத்தகைய பாரம்பரியத்தில் உருவானதே புதிய TS62E—சாலிடெரின் திறனுக்கும் தரத்திற்கும் மற்றுமோர் எடுத்துக்காட்டு.

- 14 வாட் சக்தி வாய்ந்த ஆம்ப்ளிஃபையர்.
- 20 செ.மீ. ஃபெரக்ஸ்டியூர் டியூயல் கோன்ஸ்பீக்கர்.
- ரெக்கார்ட் பிளேயர், டேப் ரெக்கார்டர் போன்ற வற்றை இணைக்க 'பிக்அப்' அமைப்பு.
- தேவையில்லா ஒலியை நீக்க ஆட்டோமேடிக் சாதனம்.
- விஷன் இன்டர்மீடியட் ஃபிரீக்குவன்ஸியில் (V.I.F) கண்டுள்ள முன்னேற்றத் தினால் ஈடு இணையற்ற' படத் தோற்றம்.
- இரண்டு ஷட்டர்கள் கொண்ட லாமினேடட் காபினெட்.
- மழைக் காலங்களில் உங்கள் டிவியைப் பாது காக்க கையாளப்பட்டுள்ள நவீன முறை.

மேலும் விவரமறிய இன்றே உங்களருகாமையிலுள்ள சாலிடெர் டீலரை அணுகுங்கள்.

ரூ. 325
மிச்சம்
உள்ளடங்கிய
வோல்டேஜ் ஸ்டெபிலைசர்



சாலிடெர்

-தொல்லையில்லாத் தொலைக்காட்சி

HE 765B

புதிதாகப் பொறுப்பேற்றுள்ள அமைச்சர்களை அவர்கள் தங்கியிருக்கும் அரசாங்க விருந்தினர் மாளிகையில் சந்தித்து 'கல்கி' சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்து விட்டுக் கொஞ்ச நேரம் பேசிய போது கிடைத்த விஷயங்கள்:

நாடகத்தில் பெண் வேஷம் போட்ட அமைச்சர்!

சத்துணவுத் திட்ட அமைச்சராய்ப் பொறுப்பேற்றுள்ள சௌந்திரராஜன் ஸ்ரீரங்கத்துக்காரர். அமைச்சராகித் தலைமைச் செயலகத்துக்குப் போன அன்று (9—9—83) தன்னைச் சந்தித்து வாழ்த்துக் கூற வந்த அனைவரிடமும் ஒரு வேண்டுகோள் விடுத்தார். ''எனக்கு மாலை வேண்டாம்; பதிலாக சத்துணவுத் திட்டத்துக்கு நிதி தாருங்கள்'' விளைவு: முதல் நாளே ரூ. 5000 சேர்ந்து விட்டது.

திருச்சி நேஷனல் கல்லூரியிலும் ஜமால் முகமது கல்லூரியிலும் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு, சொந்தமாகவே 'சௌந்திரராஜன் நாடக மன்றம்' ஆரம்பித்தார். பெரியாரின் வாழ்க்கை நாடகமாகப் போடப்பட்டது. பெரியார் அதை 49 தடவை பார்த்து ரசித்தார். ஒரு தடவை சௌந்தரராஜன் பெரியார் வேடத்தில் மேடைக்கு வந்ததும் முதல் வரிசையில் அமர்ந்து நாடகம் பார்த்துக் கொண்டிருந்த பெரியாருக்குப் பக்கத்திலிருந்த அவரது நாய் திடீரென மேடைக்குத் தாவி சிறு கலாட்டா, பெரியார் கூப்பிட்டதும்தான் கீழே இறங்கியது அந்த நாய். இவருக்குப் பள்ளிக்கூட நாடகங்களில் பெண் வேஷம் போட்ட அனுபவமும் உண்டு.

சுமார் 60 படங்களில் நடித்திருக்கிறார். 30 படங்களில் எம். ஜி. ஆருடன். கடைசியாக நடித்தது ம. மீ. சுந்தர பாண்டியன் (எம். ஜி. ஆருக்கும் இதுதான் கடைசி'.)

அமைச்சரானதும் முதல் நாளே கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு கிராமத்தில் சத்துணவுக் கூடம் கட்டக் கோரி மனு வந்ததாம்.

எம். ஜி. ஆருக்கு விசைப்படகு கொடுத்த அமைச்சர்!

39 வயதில் மீன் வளத் துறை அமைச்சராய்ப் பொறுப்பேற்றுள்ள கலைமணி மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவர். சொந்த ஊர் சிதம்பரம் அருகில் உள்ள 'கிள்ளி' கிராமம். அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் இன்ஜினியரிங் பட்டதாரி. கல்லூரி நாட்களிலேயே கட்சியில் தீவிர ஈடுபாடு. தொடர்ந்து பஞ்சாயத்து யூனியன் தலைவராயும், மீனவர் கூட்டுறவு சங்கச் செயலாளராகவும் இருந்திருக்கிறார்.

கட்சி சம்பந்தமாக ஒரு முறை இவர் பகுதிக்கு வந்த ஆர். எம். வீரப்பன் கே.ஏ. கிருஷ்ணசாமி இருவரையும் பிச்சாவரம் பிக்னிக் ஸ்பாட்டுக்கு அழைத்துக் கொண்டு போனார். ஆர். எம். வீ. அதைப் பற்றி எம். ஜி. ஆருடன் பேச, இதயக் கனி படத்துக்கான காட்சிகள் இப் பகுதியில் படமாக்கப்பட்டன. படத்தின் கிளைமாக்ஸில் வரும் படகுக் காட்சிக்கு கலைமணி, தமக்குச் சொந்தமான விசைப் படகுகளைக்கொடுத்து உதவியதுடன் ஷூட்டிங்குக்கான எல்லா ஏற்பாடுகளையும் கவனித்துக் கொண்டாராம்.

திருமணமாகி மூன்று குழந்தைகள். மூவரும் பள்ளியில் படிக்கிறார்கள். மனைவி உயர்நிலைப் பள்ளிக்கூட டீச்சர். பிடித்த உணவு? மீனில் எது செய்தாலும் என்கிறார் மீன் துறை அமைச்சர் சிரித்தபடி.


ஆசிரியராய் இருந்த அமைச்சர்!

நாமக்கல் தொகுதி எம். எல். ஏ.வான அருணாசலம் கிராமப்புறத் தொழில் துறை அமைச்சராகியிருக்கிறார். வயது 42. இப்போதைய சத்துணவுத் திட்ட அமைச்சர் சுகாதார அமைச்சராய் இருந்தபோது அவருக்கு அருணாசலம் பார்லிமெண்டரி செகரட்டரியாக இருந்திருக்கிறார். ''தலைமைச் செயலகத்தில் முதல் நாள் முழுவதும் வாழ்த்த வந்தவர்களுடன் பேசவே சரியாகி விட்டது எனக்கு'' என்கிறார் இவர்.

ரேடியோவில் செய்தி கேட்டுக் கொண்







முன்பும் எம். ஜி. ஆர். தம்மிடமிருந்த 'சுகாதாரத் துறையை' எனக்குத் தந்தார். இப்போதும் தம்மிடமிருந்த சத்துணவுத் திட்டத்தை என் பொறுப்பில் விட்டிருக்கிறார். இது வேறு எவருக்கும் கிடைக்காத பாக்கியம் என்கிறார் பெருமையாக.

பிரியாணியை வெறுக்கும் முஸ்லிம் அமைச்சர்!

நீர்ப்பாசனம், மற்றும் வாக்ஃப் போர்டு அமைச்சராகியிருக்கும் யாகூப் சையது முகமது யூஸுஃப்ச் சமீபத்தில் தமிழக மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அமைச்சராகித் தலைமைச் செயலகம் போனதும் முதல் நாள் பொதுப் பணித் துறையின் சில தலைமை இன்ஜினீயர்களுடன் தம் துறை பற்றி ஆலோசனை செய்தார். வாக்ஃபோர்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசினார். முதலில் பார்த்த ஃபைல் பக்கிங்ஹாம் கால்வாய் சம்பந்தப்பட்டது.

பத்திரிகைகளில் இவர் மந்திரி சபையில் இடம் பெறுவார் என்று ஜோஸியம் சொல்லப்பட்டாலும் அமைச்சரானது பற்றி செய்தி கிடைத்ததும் த்ரில்லிங்காகவே இருந்தது. எம். எல். ஏ. விடுதியில் தம் அறையில் இருந்தபோது பத்திரிகை நிருபர் வந்து கேட்டபோதுதான் விஷயம் தெரிந்தது என்கிறார். இவருக்கு 21 வயதிலேயே திருமணமாகி விட்டது. பெங்களூர் பி.இ.எல். லில் ஆறு வருடம் பணியாற்றியிருக்கிறார். அப்போதே தொழிலாளர் யூனியன் தலைவர். நிஜலிங்கப்பா முதல்வரா யிருந்தபோது உண்ணாவிரதமிருந்து, கைதாகி, சிறையில் இருந்தபோது, முதலிரண்டு நாளில் பகலில் ஈக்கள் தொல்லை, இரவில் கொசுத் தொல்லை! தாங்க முடியாத இந்தத் தொல்லை மறக்க முடியாத சிறை அனுபவம் என்கிறார். இவருக்கு ஒரு பெண் (கல்லூரி மாணவி) ஒரு பையன் (ஒன்பதாம் வகுப்பு) முஸ்லிமாயிருந்தும் இவருக்குப் பிரியாணி மீது அத்தனை வெறுப்பாம்!

நேரத்தில் முதல்வர் அலுவலகத்திலிருந்து போன் வந்ததாம்.

12 வருட காலம் பள்ளிக்கூட ஆசிரியராய் இருந்திருக்கிறார். அப்போது கட்சி அனுதாபி, அவ்வளவே! தேர்தலில் நிற்க ஆசிரியர் பதவியை ராஜினாமாச் செய்தார்.

அப்பா கிடையாது. அம்மா ஊரில் இருக்கிறார். சகோதரர் விவசாயம் செய்கிறார். இரண்டு சகோதரிகளில் ஒருவர் வாஷிங்டனில் இருக்கிறார். அவருடைய கணவர் இன்ஜினியர். அமைச்சருக்கு இன்னும் திருமணமாகவில்லை. திருமணத்தைப் பற்றியே நினைக்காமலிருந்த இவரை எம். ஜி. ஆர். ஒரு திருமணத்தில் சந்தித்தபோது "உங்க கல்யாணம் எப்போது?" என்று கேட்கவே விரைவில் திருமணம் செய்து கொள்ளும் முடிவுக்கு வந்திருக்கிறார். பெண் குடும்பப் பாங்காக இருக்க வேண்டுமாம். எந்த ஜாதியானாலும் பரவாயில்லையாம்.

புதிய அமைச்சர்கள் என்ன எழுதினார்கள்?

அமைச்சராகித் தலைமைச் செயலகம் சென்றதும் ஒரு டைரி கொடுக்கப்படும். அதில் அமைச்சர்கள் அன்றைய தேதியில் ஏதாவது எழுதிக் கையெழுத்திடுவார்கள். சமீபத்தில் பதவியேற்றுள்ள அமைச்சர்கள் எழுதியவை இதோ:


"தாயுள்ளம் கொண்ட இதய தெய்வம் புரட்சித் தலைவர் புகழ் ஓங்குக!"
—அருணாசலம்

"இதய தெய்வம் புரட்சித் தலைவர் வாழ்க!"
—சௌந்திரராஜன்

"புரட்சித் தலைவர் வாழ்க! அவர் புகழ் ஓங்குக!"
—கலைமணி

"புரட்சித் தலைவரின் சிறப்புப் பணிகள் வெல்க!"
—யூஸுஃப்

பேட்டி; தொகுப்பு: மௌலி





புதிய அமைச்சர்கள்: புதிய செய்திகள்!

[1]

ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டு கிடந்த அந்தப் பிணம் அழுகத் தொடங்கு வதைத் துர்நாற்றம் சொன்னது. உடம்பில் ஒட்டுத் துணிகூட இல்லாத அதன் முகம் கோரமாகச் சிதைக்கப்பட்டிருந்தது.

[2]

சுதந்திர தினச் செய்திகள் நாட்டின் பல பகுதி யிலிருந்து வந்த வண்ணம் இருக் கின்றன.

ட்ரிங்....ட்ரிங்....

தொலைக்காட்சிச் செய்தியில் லயித்திருந்த எஸ். பி. ராம், வலது கையை நீட்டி டெலி போனை எடுத்தார்.

''ஸர், எஸ். பி. இருக்காரு?''

''ஸ்பீக்கிங்!''

மறு முனையில் வந்த செய்தியில் ராமின் முகம் படிப்படியாகக் களையை இழந்து கொண்டே வர, பளிச்சென எழுந்தார்.

''இதோ வந்திட்டேன், என்னது.... ஸ்பாட்டுக்கு வந்தாச்சா? ஓ.கே... ஓ.கே... எல்லாம் அப்படியே இருக்கட்டும்... பத்து நிமிஷத்திலே வர்றேன்.''

எதிரே காஃபியோடு மனைவி வர,

''தாமஸ் மௌண்ட் கிட்ட ஒரு கொலை நடந்திருக்காம். உடனே போகணும்.''

அவள் ஏதோ கேட்க வாயைத் திறப்ப தற்குள் ஜீப்பின் ஒலி தூரத்தில் கேட்டது.

ஜீப்பை ஓட்டிக் கொண்டு பல்லாவரம் வழியாக, கான்ஸ்டபிள் சொன்ன இடத் துக்குப் பரபரப்போடு விரைந்தார்.

பிரதான சாலையை விட்டு விலகும் மற் றொரு சிறிய மண் சாலையில் கான்ஸ்டபிள் ஒருவன் தயாராக நின்று கொண்டிருக்க,

ஜீப் நின்றது.

''எங்கப்பா?''

''கொஞ்சம் இன்டீரியரா இருக்கு சார். கிட்டத்தட்ட மலைகளுக்குப் பக்கத்துல.''

வா.. அருகில் வா..!

தேவிபாலா

மர்ம நாவல்



அவனும் ஏறிக் கொண்டு வழி காட்ட, செலுத்தினர்.

சுமார் மூன்று பர்லாங்குகளுக்கு மேல் பயணிக்க, ஒரு கூட்டம் தெரிந்தது.

ஜீப்பை நிறுத்திவிட்டு ஓடினர்.

மல்லாந்து கிடந்த நிலையில், நிர்வாண மாக ஓர் ஆண் பிணம். முகம் என்ற ஒன்றே தெரியாமல், துப்புரவாகக் கூழாகிப்போயிருந் தது.

சுற்றிக் கொண்டு வந்தார்.

முதல் நாள் பெய்த பலத்த மழையில் அந்தஇடமே கொதகொதத்துப் போயிருந் தது. மழையின்ஈரமும்பிணத்தைக்கவர்ந்து கொள்ள, வாடை மூக்கைக் கிழித்தது.



புகைப்படக்காரர்கள் பல கோணங்களில் வெளிச்ச மழை பொழிய,

மற்ற சடங்குகள் மளமளவென நிறைவேற,

அடுத்தது என்ன என்பது போல எஸ். பி.யை மற்றவர்கள் பார்த்தனர்.

''ரிமூவ் பண்ணிடுங்க. இனிமே இங்கே வச்சு உபயோகமில்லே. மழை நம்மை எதுவும் செய்ய விடாமப் பண்ணி விருக்கு. பி.எம். முக்கு அனுப்புங்க.''

''முதல்ல யாரு இதைப் பார்த்தது?''

''நாந்தானுங்கோ!''

வேட்டியைத் தார்பாச்சிக் கட்டிக்கொண்டு திறந்த மேனியோடு கறுப்பாக ஒருவன் எதிரே வந்து நின்றான். உடம்பு நடுங்கிக் கொண்டிருந்தது.

''எப்பப் பார்த்தே?''

''நேரஞ் சரியாத் தெரியலீங்க. இருட்டத் தொடங்கினப்ப வந்தேனுங்க.''

''எதுக்கு இந்தப் பக்கமா வந்தே?''

தலையைச் சொறிந்து கொண்டு மிரள மிரள விழித்தான்.

''ம்! எதுக்கு?'' என்று குரல் கண்டிப்பு தெறிக்க,

பயந்த அவன், ''போலீஸ்காரங்க கிட்ட சாராயம் குடிக்கிறதைச் சொல்லலாமுங்களா?'' என்றான்.

அவனது அப்பாவி முகம் ராமுக்குள் ஒரு சிரிப்பை ஏற்படுத்த, முகத்தை இறுக்கிக் கொண்டான்.

''சரி, சொல்லு!''

''நானும், கபாலியும்....''

''யார் கபாலி?'' இடைமறித்தார்.

''நாந்தாங்க சாமி!'' மற்றொரு ஜோடித் தொடை எதிரே வந்து வெட வெடத்தது.

....''குடிக்கக் கொள்ள, இங்கே ராத்திரி வருவோமுங்க....''

''தினமுமா?''

''இல்லீங்க. வாரத்துக்கு மூணு நாள்.''

''உன் வீடு எங்கே?''

''குரோம்பேட்டைக்குப் பக்கத்தில.''

''என்ன வேலே செய்யறே?''

''இங்க கல்லொடைக்கிற வேலேங்க... நேத்து நாயித்துக் கிளமை. எங்களுக்கு வேலே இல்லீங்க. இன்னிக்குச் சொதந்தர நாளு. இன்னிக்கும் வரவேணாம்னு சொல் லிட்டாங்க....''

நோயாளி: எனக்குக் கண்ணிலேதானே கோளாறுன்னு சொன்னேன். ஏன் நாக்கை நீட்டச் சொல்றீங்க டாக்டர்

டாக்டர்: சரி... கண்ணே நீட்டுங்க!



அதற்குள் ஒரு கான்ஸ்டேபிள் இடைமறித்து, ''இல்லேன்னு எப்பவும் இந்தப் பக்கம் ஜனநடமாட்டம் இருக்கும் ஸார். இந்த ரெண்டு நாளும் தொடர்ந்து லீவு அதான்....'' என்றான்.

''ம்.... நீ சொல்லு!''

''சாராயம் குடிக்க நாங்க இந்தப் பக்கம் ஒதுங்கினப்ப, ஒரே வீச்சமா இருந்ததுங்கோ.. எலி, கிலி செத்துக் கிடக்கும்னு கவனிக்கலே. ஆனா நாத்தம் பொறுக்க முடியலீங்க. என்னான்னு பாக்க வந்தா....'' அதற்கு மேல் பேச முடியாமல் நடுங்கினான்.

''எட்டு மணி சுமாருக்கு இவன் வந்து விஷயத்தைச் சொன்னான் சார்...'' மீனம்பாக்கம் பிரிவு இன்ஸ்பெக்டர் இடையில் புகுந்தார்.

மணிக்கட்டைப் பார்த்தார் எஸ். பி.

9 : 33 : 47

''சரி, ரெண்டு கான்ஸ்டபிள் இங்க காவலுக்கு இருக்கட்டும். இந்தப் பசங்களைக் கூட்டிக்கிட்டுப் போய் ஒரு ஸ்டேட்மெண்ட் வாங்கிக்குங்க....''

கூட்டத்தை ஒரு முறை கண்களால் துழாவினார்.

அந்த இருவரைத் தவிர மற்ற எல்லாருமே காவல் துறை ஆட்கள்.

பிணம் அகற்றப்பட, கூட்டம் கலைய, எஸ். பி. இன்னும் நகராமல் இருக்க, மற்றவர்களும் நின்றார்கள்.

''மத்தவங்க போகலாம். எனக்கு இங்க கொஞ்சம் வேலே இருக்கு. அந்த ரெண்டு கான்ஸ்டபிள் மட்டும் இருக்கட்டும்.''

எல்லோரும் போய்விட,

அந்த மூன்று பேரைத் தாங்கிய பூமி 'ஜோ' என்று கிடந்தது. இருள் முழுக்கப் பூசிக்கொள்ள, அங்கங்கே மின்னல் கண்ணைச் சிமிட்ட, இடி கருதி சேர்த்தது. மேகங்கள் திரண்டு அடுத்த மழைக்குத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டது.

டார்ச்சை அடித்து அந்தப் பகுதிகளைத் தன் கூர்மையான கண்களால் அலசத் தொடங்கினார் எஸ். பி. ராம்.

'ரெண்டு நாட்கள் தொடர்ந்து வந்த இந்த லீவும், ஆள் நடமாட்டமில்லாத இந்தப் பகுதியும் அவனைக் கவர்ந்திருக்கணும். ஏற்கெனவே திட்டம் போட்டு, நாள் குறிச்சுக் கவனமாச் செஞ்சிருக்கான். மழை அவனுக்கு ரொம்பவும் உதவி செஞ்சிருக்கு. கூடுமான வரைக்கும் தடயங்கள் கலைஞ்சிருக்கு.'

பி. எம். ரிப்போர்ட் வந்த பின்னலதான் எதையும் அனுமானிக்க முடியும்.

அந்தச் சேற்றுப் பிரதேசத்தில் நிற்பதால் எந்தப் பலனும் கிடைக்கப் போவதில்லே என்பது புரிய, ஜீப்புக்குப் போன எஸ். பி. அவர்களையும் போகும்படி உத்தரவிட்டார்.

• • •

பி. எம். ரிப்போர்ட் வந்தபோது பரபரப்பானார் எஸ். பி.

''ஞாயிற்றுக் கிழமை ராத்திரி எட்டரையிலிருந்து ஒன்பதுக்குள்ளே நடந்திருக்கணும். கழுத்தை நெரிச்சுத்தான் கொன்னிருக்கான் ஃபாரிங்ல்ல தெரியுது.''

''கழுத்தை நெரித்து ஒருவன் கொலே பண்றான்னு, பாதிக்கப்பட்டவன் கொஞ்சமாவது போராடியிருக்கணுமே, உடம்புல ஏதாவது தெரியுதா?''

''அங்கதான் சார் அவன் சாமர்த்தியமே இருக்கு. மயக்கமாக்க, ஆரம்பத்துலேயே ஏதோ பண்ணியிருக்கான். க்ளோரோஃபாம் கன்டென்ட் கொஞ்சமா தட்டுப்படுது. ஸ்ப்ரே பண்ணி யிருக்கலாம். மயக்கமாயிட்டா கழுத்தை நெரிக்கறது சுலபந்தானே!''

''ம்....அப்புறம்?''

''ஆளேக் குளோஸ் பண்ணிட்டு முகத்துல நைட்ரிக் ஆஸிட் ஊத்திக் துப்புரவா சேதப்படுத்தியிருக்கான்.''

''பலமான மழை. இவனுக்கு ரொம்ப உதவியா இருந்திருக்கு. பிணம் சொட்டச் சொட்ட நனேஞ்சதுனுலே சுத்தமா ரேகை எதுவுமே கிடைக்கலே!''

''அப்புறமா உடைகளேக் கழட்டியிருக்கான். பிணத்தை நிர்வாணமாக்கிட்டுப் பட்சி பறந்திடுச்சு!''

''உடம்புல ஏதாவது சேதம் இருக்கா?''

''இல்லே சார்!''

புருவங்களேச் சுருக்கிக் கொண்டு யோசித்த எஸ். பி. ''டைஜஸ்ட் ஆகாத உணவுப் பொருட்கள் ஏதாவது உள்ளே கொஞ்சமா இருந்துதா?'' என்ருர்.

''இருந்தது சார். லாபுக்கு அனுப்பியிருக்கேன். ரிப்போர்ட் இப்ப வந்திடும்.''

''பாடியை நான் பார்க்கணும்.''

கான்ஸ்டபிள் வழி காட்ட, மார்ச்சுவரிக்குள் நுழைந்தார் ராம்.

கூறு போடப்பட்ட உடம்பு ஒழிந்த பொட்டலமாகக் கிடந்தது.

தலேயோடு கால் கவனித்தார்.

''இதைக் கவனிச்சீங்களா டாக்டர்?''—ஓர் இடத்தைச் சுட்டிக் காட்டினுர்.

''புரியலே சார்!''

''அரிசி அளவுக்கு ஒரு மச்சம் இருக்கே தெரியலே?''

''அதுக்கு?''

''பர்ஸனல் வெரிபிகேஷனுக்கு வரும்போது இது கட்டாயம் உதவும்.''

வெளியே வந்தார்.

லேப் ரிப்போர்ட் வந்தது.

''காட்பரீஸ் சாக்லேட்டோட துல்லியமான சில அனுமானங்கள் தெரியுது டாக்டர். ரொம்பச் சமீபத்திலே அதைச் சாப்பிட்டிருக்கணும்.''

''அது டைஜஸ்ட் ஆக ரொம்ப நேரம் ஆகாதே!''

''முன்னுலே வேற ஏதாவது சாப்பிட்டிருக்கலாம். கடைசியாச் சாப்டதினுலே குறைஞ்ச பட்சம் ஒரு மணி நேரமாவது ஆகும் இன்ஸ்பெக்டர்.''

''எட்டரையிலிருந்து ஒன்பதுக்குள் கொலே நடந்திருக்கு. அப்பமுன்னு ஏழரை மணிக்குக் காட்பரீஸா? சாவோட மடில இருக்கறவனுக்குச் சாக்லேட் சாப்பிட வா தோணும்?''

''ஒருத்தனுக்கு மயக்க மருந்து ஸ்ப்ரே பண்ணி, கழுத்தை நெரித்துக் கொலே பண்ண எவ்ளோ நேரம் ஆகும் டாக்டர்?''



''சாஸ்திரிகளே! நீங்கதானே என் கல்யாணத்துக்கு முகூர்த்தம் நாள் பார்த்துச் சொன்னது..?இப்ப சன்யாசத்துக்கு முகூர்த்த நாள் பார்த்துச் சொல்லுங்க!''

''அது செய்யறவனோட சாதுரியத்தைப் பொறுத்த விஷயம். பதினஞ்சு நிமிஷத்தில செய்யறது கூடச் சாத்தியம்தான்.''

''அப்பமுன்னு தன்னே அவன் கொல்லப் போருன்னு முதல் நிமிஷம் வரைக்கும் கொலேயுண்டவனுக்குத் தெரியாம இருந்திருக்கணும். அவன் ரொம்ப காஷுவலா சாக்லெட் சாப்டுட்டு இருக்கறப்ப, ஒரு வீக் மொமெண்ட்ல இவன் ஸ்ப்ரே பண்ணியிருக்கணும்.''

''அப்பமுன்னு அந்த ரெண்டு பேருமே இதுக்கு முன்னுலே அறிமுகமானவங்கதான். ஒருத்தரை ஒருத்தர் நல்லாப் புரிஞ்சவங்கதான். இவன் நல்லவனு நடிச்சு, கழுத்தை அறுத்திருக்கணும்.''

''சரி, விஷயத்துக்கு வருவோம். காட்பரீஸ் சாக்லெட், ராத்திரி ஏழரைக்குக்கூட ஒருத்தன் சாப்பிடணும்னு அவன் கொஞ்சம் வசதி உள்ளவனு இருக்கணும். ஸோ... மோடில் நம்பர் ஒன் பணம்....''

''வசதி உள்ளவன், என்னதான் தெரிஞ்சவனு இருந்தாக் கூட, ஒரு வனுந்தரப் பாதைக்கு வரமாட்டான். அப்படியே வந்தாலும் நடந்து வர வழியில்லே. ஸோ... ஒரு எல்லே வரைக்கும் அந்தப் பகுதிக்கு ஒரு கார் வந்திருக்கணும்.''

''மயக்க மருந்து கொடுத்து எவ்ளோ நேரம் ஆகியிருக்கும்னு சொல்ல முடியுமா டாக்டர்?''

''அது அவ்ளோ சரியாத் தெரியலே. கொலே நடக்கற ஒரு மணி நேரத்துக்கு முன்னுலே கூடக் கொடுத்திருக்கலாம். நார்மலா, பலமா ஸ்ப்ரே பண்ணு அரை நாள் கூடத் தாங்கும்.''

''மெயின் ரோட்ல யிருந்து உள்ளே நுழையறதுக்கு முன்னுலேயே, மயக்கமாயிருக்கணும். அப்புறமாக் கொலே நடந்திருக்கு. ஸோ, இது கார்ல நடந்த கொலே தான்.''

''காட்பரிஸ் சாக்லெட், கார்னு விஷயங்கள் கொஞ்சம் வசதியான எல்லேக்குத்தான். போகுது. ஆனு மொட்டையா இருக்கே தகவல்?'' எஸ். பி. ராம் கவலேயோடு தம் முகவாயைச் சொறிந்து கொண்டார்.

''கான்ஸ்டபிள்! முடிஞ்ச போன இந்த நாலு நாட்கள்ள, யார், யாருக்கு கார் காணாமப் போயிருக்குனு வாட்ச் பண்ண னும். தட் ஈஸ் நம்ம கிட்ட அது சம்பந்தமா வந்த ரிப்போர்ட்ஸ், அதுல யார் யாருக்கு உடனே திரும்பக் கிடைச்சிருக்கு, யாருக்கு இன்னும் கிடைக்கலேன்னு தகவல் சேக ரிச்சு எனக்கு ஒரு லிஸ்ட் வேணும். எவ்வளோ சீக்கிரம் முடியுமோ, அவ்வளோ சீக்கிரம்...

''நீங்க போய் அந்த மெயின் ரோட்டுக்குப் பக்கத்துல ஒரு கடை இருந்ததா எனக்கு ஞாபகம்.... அந்த ஆள் கிட்டக் கேட்டா ஏதாவது தகவல் கிடைக்கலாம்... முயற்சி பண்ணுங்க.

''முக்கியமான விஷயம்... சங்கதி பிரஸ் ஸுக்குப் போக வேணும். அவன் உஷா ராயிடுவான். இன்னும் இது வெளில வந்த மாதிரியே இருக்க வேண்டாம். நடமாட விட்டுப் பிடிக்கணும்.''

சில மணி நேரங்களில் காரைத் தொலைத்த வர்களின் லிஸ்ட் தம் கைக்கு வர, அதில் ஒரு பெயர் அவரைக் கணிசமாகக் கவர்ந் தது. அதன் பக்கத்தில் இருந்த தகவல் அவ ரைப் பெரிதும் ஈர்த்தது.

[3]

''அடப் பாவி, கலைச்சிடுன்னு சொல்ற? பணத்தை நம்பியா என்னை உங்கிட்டக் குடுத் தேன்? நான் ஏழைப் பொண்ணுடா, என்னை ஏமாத்தாதேடா....!

''சண்டாளா....!

''ஐயோ... போகாதேயேன்... நில்லேன்.. நான் சொல்றதைக் கேளேன்....

''பாவி...பாவி...போறியே,போறியே!''

[4]

குளித்த கூந்தல் ஈரத்தோடு கோடாலி முடிச்சாக முதுகில் புரள, வாசல் தெளித்துக் கோலம் போட்ட வந்தனா, துளசிக்குத் தண்ணீர் வார்த்துவிட்டு உள்ளே வந்தபோது பால் பாக்கெட்டுகள் வெள்ளையாக முற் றத்தில் சிரித்தன.

முன் பக்கத்துக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே போனாள்.

தலையோடு கால் கறுப்புக் கம்பளியால் பொதிந்து. ஒரு முனகல் மட்டும் வந்து கொண்டே இருந்தது. போர்வையை நீக்கி, நெற்றியில் கையை வைத்தாள். அனலாகக் கொதித்தது.

''நேத்திக்கே சொன்னேன். கேக்கலே. டாக்டரைக் கூப்பிடலேன்னு நிலைமை மோசமாய்ப் போயிடும். யாரு பெத்த பிள் ளையோ, பாவம்!''

டெலிபோனை எடுத்து டாக்டரை அழைத் தாள். உடனே வரச் சொல்லிவிட்டு.

பாலை எடுத்துக் கொண்டு அடுக்களைக்குள் போனாள். காஸைப் பற்றவைத்து, பாலை அடுப்பில் வைத்த கையோடு, மறுபடியும் முன் அறையில் வந்து எட்டிப் பார்த்தாள்.

அவன் உடம்பு ஏறத்தாழத் துள்ளிக்கொண் டிருந்தது.

கையைப் பிசைந்து கொண்டே பாலை இறக்கியவள், வாசலில் கார் சப்தம் கேட்க, அவசரமாக ஓடினாள்.

''என்ன வந்தனா? கார்த்தாலே வேளைல கூப்பிடறே? கண்ணனுக்கு ஏதானுமா?''

''இல்லே டாக்டர்! அவர் ஊர்லேயே இல்லே. என் கஸினுக்குத்தான்.''

''யாரது?''

''நேத்திக்கு ஊர்ல யிருந்து வந்தான். மழைல நனைஞ்சிருப்பான் போல இருக்கு. உடம்பு அனலாக் கொதிக்கிறது டாக்டர்.''

பரிசோதித்த டாக்டர், 'பயப்பட ஒன்னு மில்லேம்மா! நீ ஏன் இவ்வளோ நேரம் கம்மா இருந்தே? முன்னாலேயே கூப்பிட்டிருக்க-லாமே? போய் மருந்து அனுப்பறேன். சாயங்காலம் வந்து ஒரு ஊசி போட்டா சரியாப் போயிடும்'' என்றார்.

''காஃபி சாப்பிட்டுட்டுப் போங்க டாக் டர்.''

''ஆமா, நானும் பாக்கறேன். கல்யாணம் ஆகி வருஷம் ரெண்டாகப் போறது? என்ன ஒண்ணும் காணம்?'' குறும்பாகக் கண்களைச் சிமிட்டினார்.

''போங்க டாக்டர்!'' வெட்கத்துடன் புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டாள்.

''கண்ணனுக்கு முன்னாலே இப்படித்தான் போத்திக்கிறியாக்கும். அதான் சங்கதி! ஜாக்கிரதையம்மா'' வயது தந்த சலுகையில் சற்று ஆழமாக இறங்கிய அந்தக் கிழட்டு டாக்டர், ''வரட்டுமா? கதவைச் சாத் திக்கோ'' என்றார்.

சிரித்துக் கொண்டே உள்ளே போனாள் வந்தனா.

கண்களைத் திறக்க முயன்று தோற்றான் அவன். முகம் முழுக்க நெருப்பைச் சுமந்தது போல எரிந்தது. உதடு காய்ந்து, உடம்பு துண்டு துண்டாகத் துடித்தது.

''தண்ணீ.... தண்ணீ....''

மெதுவாக உதட்டோரம் வெந்நீர் ஒரு கோடாக இறங்க, இதமாக உணர்ந்தான்.


மங்கலாக வந்தனா எதிரே தெரிந்தாள்.

அவளது கவலை முகம் இவனுக்குத் தெளி வாகத் தெரிந்தது.

''இந்த மருந்தைக் குடிச்சுட்டுப் படுத்துக் குங்க....''

அவுன்ஸ் கிளாஸை அவன் முகத்துக்குப் பக்கத்தில் கொண்டு வந்து, அவன் தலையை

சர்வர்: என்ன வேணும் சார்! சீக் கிரமாச் சொல்லுங்க!... ஒன்... டு...



தாங்கிப் பிடித்துக்கொண்டு மெல்லப் புகட்டினான்.

மாத்திரையை மெல்ல நாக்கில் வைத்து நீரைப் புகட்டினாள்.

ஆயாசமாக மறுபடியும் கண்களை மூடிக் கொள்ள, அவனையே கவனித்தாள் வந்தனா.

''நாளைக்கு அவர் வந்த உடனே சொல்லணும்! பாவம் அவன்!''

கவின் என்று டாக்டரிடம் போய் சொன்னது நினைவுக்கு வர மெல்லச் சிரித்துக்கொண்டாள். 'பின்ன என்ன? ராத்திரி வேளைல யாரோ வந்து கதவைத் தட்டினா நீ திறந்து விடறதான்னு வாய்க்கு வந்தபடி திட்டுவார். மனுஷனுக்கு மனுஷன் உதவி செய்யலேன்னா எப்படி?'

அவன் வந்த கோலம் நினைவுக்கு வந்த போது பாவமாக இருந்தது.

இரவு பன்னிரண்டு மணி என்று சுவர்க் கடிகாரம் அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு ஓங்காரமாக அறிவிக்க,

கதவு படபடத்தது.

'தடக்'கென எழுந்து கொண்ட வந்தனா, செவிகளைக் கூர்மையாக்கிக் கொண்டு நன்றாகக் கவனித்தாள்.

இப்ப என்ன செய்யலாம்? திறக்கலாமா? மெதுவாக எழுந்து விளக்கைப் போட்ட போது, பலமான மழை தெரிந்தது. கதவின் ஓசை நின்று விட்டிருந்தது.

'தட்டினது யாரு?'

மறுபடியும் ஐந்து நிமிஷம் கழித்துப் பார்த்தாள். சப்தமில்லை.

'மாஜிக் ஐ' மூலம் வெளியே பார்த்தபோது யாருமே கண்ணில் படவில்லை.

குழப்பத்தோடு உள்ளே போகத் திரும்பியவள், ஏதோ நினைத்துக் கொண்டவள் போலக் கதவைத் திறந்தாள்.

குப்புற ஒரு மனிதன் வாசலில் விழுந்து கிடந்தான். ஒரு முனகல் மட்டும் வந்து கொண்டிருந்தது.

அவனைப் புரட்டிப் பார்த்தாள். அந்த ஈரத்திலும் உடம்பில் ஒரு சூடு தென்பட்டது.

கதவைத் தட்டினது இவனாகத்தான் இருக்கணும். நிக்க முடியாம விழுந்திருக்கான். எதுக்காக நம்ம வீட்டுக் கதவைத் தட்டணும்?

'ச்சே, இதை யோசிக்க இதுவா நேரம்?' மெதுவாக அவனை இழுத்துக் கொண்டு வந்து ஹாலில் கிடத்துவதற்குள் மூச்சு வாங்கியது.

'இவனை எழுப்பணுமே! இந்த ஈர உடைகளைக் களையச் சொல்லணும். ஏற்கனவே உடம்பு கொதிக்குதே!'

முகத்தில் கொஞ்சம் வெந்நீரைத் தெளித்தாள். பிளாஸ்கின் கோப்பையில் இதமாய்ச் சூடு இருக்க, அதைக் கன்னத்தில் வைத்தாள். இதெல்லாம் சரியா என்று அவளுக்குப் புரியவில்லை. எப்படியோ அவனை எழுப்பணும்.

மெதுவாகக் கண்களைத் திறந்தான்.

''டாக்டருக்குப் போன் பண்ணட்டுமா?''

அவசரமாகத் தலையை ஆட்டி மறுத்தான். கைகளை எடுத்து அவளை நோக்கித் தொழுதான்.

புரியவில்லை வந்தனாவுக்கு.



மனைவி: ''சம்பளம் வாங்கிட்டு வந்ததும் பிச்சைக்காரனுக்கு அம்பது ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுக்கிறீங்களே! உருப்பட முடியுமா ''
கணவன்: ''வாயை மூடடி... அவன் கிட்ட நான் வாங்கிய கடனைத்தான் திருப்பித் தந்திருக்கேன்.''
—கோவை தங்கபாரதி

''டிரஸ்ஸை அவுத்துடுங்க...மெதுவா.... மெதுவா....'' — அவனை எழுப்பி உட்கார வைத்தாள்.

கண்ணனின் லுங்கியும் ஜிப்பாவும் அவன் கைக்கு மாற, எப்படியோ அதை அணிந்து கொண்டவன் மறுபடியும் படுக்கையில் விழுந்தான். கண்கள் செருகிக் கொண்டன.

பயந்துபோனாள் வந்தனா.

டர்க்கி எடுத்து அவன் தலையை அவசரமாகத் துவட்டினாள்.

'உனக்கேண்டி இந்தக் கொழுப்பு! இவன் யாரோ எவனோ? மலை மாதிரி ஒரு ஆம்பளை. இதனால உனக்கு ஆபத்து ஏதாச்சும் வந்தா?'

ஒரு உள் மூளை அவளை எச்சரிக்க, அதை அலட்சியம் செய்தாள். சின்ன வயது முதல் அவளோடு வளர்ந்த அதீத இரக்க மனம் துணிச்சலாக அவளைத் தூண்டி விட்டது.

பிச்சை கேட்டு வரும் மனிதனுக்கு உட்கார வைத்துச்சம்பிரமமாகச் சாதம் போடுவாள்.

சாலையைக் கடக்கும் முதியவர் கண்ணில் பட்டால், கையில் இருப்பதைப் போட்டு விட்டு அவசரமாக உதவி செய்ய ஓடுவாள்.

நிறை மாதக் கர்ப்பிணி சினிமாவுக்கு வந்தால், வாய்க்கு வந்தபடி திட்டி, வாங்கியும் கட்டிக் கொள்வாள்.

இதற்காகக் கண்ணனிடம் பல முறை தர்க்கம் செய்ததும் உண்டு.

கண்களை நன்றாகத் திறந்த அவன், மெதுவாகத் தலையை உயர்த்திப் பார்த்தான்.

''ம்ஹூம்! எழுந்திருக்கவேண்டாம். படுத்துக்குங்க... சாயங்காலம் ஊசி போட மறுபடியும் டாக்டர் வருவார். அதுவரைக்கும் மூச்....''

''நோ.... நோ... நான் இப்பவே போகணும்.''

''போகக் கூடாது!''

''என்னைத் தடுக்க நீங்க யாரு?''

சுருக்கென்றது வந்தனாவுக்கு.

''நான் இங்கே இருக்கக் கூடாது.காரணம் உங்களுக்குப் புரியாது.''

''ஓ. கே.... நீங்க போகலாம். ஆனா டாக்டர் கிட்ட உங்களை என் கசின்னு பொய் சொல்லியிருக்கேன். நடு ராத்திரில ஒரு ஆளை வீட்டுக்குள்ளே அனுமதிச்சதுக்காக என் கணவர் கிட்டப் பேச்சு வாங்கப் போறதும் நான்தான். இத்தனையும் எதுக்கு? எனக்குத் தேவைதானா? சொல்லுங்க!''

''......''

''காரணம், உடம்பு முடியாம, மழைல நனைஞ்சு போய் வந்த ஒரு மனுஷனை ஆதரிக்கணும்கிற மனுஷத் தன்மைதான். இயல்பான இரக்க குணம். எதுக்கு என் வீட்டுக் கதவைத்தட்டினீங்கன்னோ, நீங்க யாருன்னோ இதுவரைக்கும் நான் கேட்டேனா? ஏன்னா, அது எனக்குத் தேவையில்லாத விஷயம். ஆனா, முழுதும் குணமாகாத நிலைல, ஒரு மனுஷன் வெளியே போகத் துடிச்சா, எப்படி அனுமதிக்க முடியும்? நீங்க தாராளமாகப் போகலாம்.''

சரசரவெனக் கண்ணீர் முத்துக்கள் கன்னத்தில் இறங்க, சிலையாக உட்கார்ந்திருந்தான் அவன்.

''எதுக்கு அழுகை?''

''அதுதான் எனக்கும் புரியலே ஸிஸ்டர்!''

'ஸிஸ்டர்' என்று அவன் அழைத்தது அவளுக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. கையில் வைத்திருந்த கஞ்சியை அவனிடம் கொடுத்தாள். ''சூடா இருக்கு. உடனே குடிச்சிருங்க. வயிறு காலியா இருக்கே நேத்துலயிருந்து.''

அதை வாங்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்த அவன் திடீரெனக் குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தான்.

காரணம் புரியாமல் உறைந்து போனாள் வந்தனா.

[5]

கார் காணாமல் போன பட்டியலில் இருந்த அந்த சுந்தரலிங்கம், எஸ். பி. ராமைப் பெரிதும் பாதித்தார்.

''பத்து வருஷத்துக்கு முன்னே நான் தினமும் டாக்ஸியிலே வேலைக்குப் போகணும்னு ஆசைப்பட்டேன்! ஆனா முடியலே... அந்த ஆசை இப்ப 'ஒருமாதிரி' நிறைவேறிடுச்சு!''

''எப்படி?''

''பத்து வருஷத்துக்கு முன்னே டாக்ஸிக் கட்டணம் எவ்வளவு இருந்ததோ அந்த அளவுக்கு பஸ் கட்டணம் இப்ப உயர்ந்திடுச்சே! இந்த விதத்திலேதான்!''

—சி. பூபால் சிங்



குறிப்பிட்ட அந்த டெலிபோன நம்பரைச் சுழற்றினார் ராம்.

''அது ஆர்த்தி ஆர்க்கேடா?''

''எஸ், ஹூ'ம் டு யூ வாண்ட்?''

''மிஸ்டர் சுந்தரலிங்கம்.''

அடுத்த அரை நிமிடியில் சுந்தரலிங்கம் லைனுக்கு வர, ''குட்மார்னிங் மிஸ்டர் லிங்கம். நான் எஸ். பி. ராம் பேசறேன். தொலைஞ்சு போன உங்க கார் விஷயமா....''

''சார் அது கிடைச்சிருச்சு!''

''தெரியும். ஆனா அது பத்திக் கொஞ்சம் உங்க கூடப் பேசணும். இப்ப வரலாமா?''

''வாங்களேன்!''

உடனே புறப்பட்டார். ''இன்ஸ்பெக்டர், யாராச்சும் இது தொடர்பா வந்தா நிறுத்தி வைங்க, நான் இன்னும் ஒரு மணி நேரத்துல வந்திர்றேன்.''

ஜீப்பை அவசரமாய் எலியட்ஸ் ரோடில் விரட்டி, ரிசப்ஷனில் தன்னைப்பற்றிச்சொல்லிக் காத்திருந்து.

சுந்தரலிங்கம் அழைப்பதாக ரிசப்ஷனிஸ்ட் சொல்ல,

அந்த ஏ. ஸி. அறைக்குள் 'சில்'லென்று நுழைந்தார்.

''வண்டி கிடைச்சிருச்சு எஸ். பி.''

''குட். அது பத்திப் பேசத்தான் வந்தேன். உங்க கார் எப்படிக் காணாமப் போச்சு? கொஞ்சம் விவரமாச் சொல்லுங்க.''

''ஆகஸ்ட் 14, ஞாயிற்றுக் கிழமை, மத்தியானம் மூணு மணி இருக்கும் கிட்டத்தட்ட''

''எங்கே வச்சு? அன்னிக்கு உங்களுக்கு ஆபீஸ் உண்டா?''

''ஆபீஸ் இல்லே. டாக்ஸ் விஷயமா கொஞ்சம் எங்க ஆடிட்டரோட டிஸ்கஸ் பண்ண, ஒரு சின்ன மீட்டிங் ஏற்பாடு பண்ணியிருந்தேன். மீட்டிங்குக்கு நடுவுல வெளிய கிளம்பிப் போக முடியலே. டிரைவரை அனுப்பிச் சோழால இருந்து ஏதாவது வாங்கிட்டு வந்து சாப்பிடலாம்னு நினைச்சோம். அவனைச் சுமார் ரெண்டரை மணி அளவில அனுப்பினேன்.

''காரைப் பார்க் பண்ணிட்டு, இவன் உள்ளே போய் ஆர்டர் பண்ணி, எல்லாத்தையும் பார்சல் பண்ணிட்டு வர்றதுக்குள்ள அரை மணி நேரத்துக்கு மேல ஆயிருக்கு. வெளியே வந்தா காரைக் காணோம். பதறி அடிச்சுட்டு ஆட்டோ பிடிச்சு வந்து எங்கிட்டச் சொன்னான். அந்த செக்யூரிட்டியைக் கடந்து, காரை.... அதுவும் லாக் பண்ணின காரை — எப்படி சார் எடுக்க முடியும்?''

''அதுக்கு ஆயிரம் வழி இருக்கு. சர்வசாதாரணமா பட்டப் பகல்லே நடக்குதே. சரி, மேலே சொல்லுங்க!''

''நான் உடனே போலீஸ்ல ரிப்போர்ட் குடுத்தேன். டீடெய்ல்ஸ் அதிலே இருக்குமே!''

''சரி, எப்படிக் கிடைச்சுது?''

''சொல்றேன். சுமார் ஏழு மணி வாக்கில எனக்கொரு டெலிபோன் வந்தது.''

''என்னன்னு? யார் கிட்டேயிருந்து?''

''காமதேனுல என் சிநேகிதன் ஒருத்தன் இருக்கான். அவன் சைதாப்பேட்டைக்கிட்ட என் காரைப் பார்த்திருக்கான், ஆறு மணிக்கு ரோட்ல நின்னு கையை ஆட்டியிருக்கான். கார் நிக்காமப் போயிருக்கு. டிரைவரை

அவனுக்கு நல்லாத் தெரியும். அவனைப் பார்த்தா என் டிரைவர் எப்பவுமே லிஃப்ட் கொடுப்பான். ஆனா டிரைவரோட எடத்துல வேற ஆள் இருக்கக் குழம்பிப் போன இவன் ஏழு மணி வாக்கில எனக்கு டெலிபோன் பண்ணி 'டிரைவரை மாத்திட்டியா? நிறுத் தாமப்போறானே?'ன்னு சொன்னப்ப எனக்கு ஷாக் அடிச்சது.

''ஆறு மணிக்கு இவன் பார்த்திருக்கான். ஏழு மணிக்கு போன் பண்ணியிருக்கான். நிறையத் தூரத்தைக் கடந்திருக்க வாய்ப் பிருக்கு. இதையும் உடனே போலீஸுக்குத் தெரியப்படுத்திட்டுப் பேசாம இருந்தேன். வேறென்ன செய்ய முடியும்?

''மறு நாள் காலை எனக்கு டெலிபோன் வந்தது. 'சார் ஏர்போர்ட்ல உங்க கார் இருக்கு. கண்டுபிடிச்சிட்டோம்'னு!''

''மீனம்பாக்கம் போலீஸா?''

''ம்!''

''14ந் தேதி ராத்திரி நல்ல மழை பெஞ் சுதே!''

''ஆமாம். கார் நனைஞ்சு இருந்தது. ஷட்டர் எல்லாம் ஏத்தி விடாம அப்படியே இருந்தது. உள்ளுக்குள்ளே யெல்லாம் பயங் கரத் தண்ணி. ஸீட் எல்லாம் ஒரு மாதிரி ஜில்லிட்டுப் போயிருந்தது. உடனே சர்வீஸுக்கு அனுப்பிட்டேன்.''

''அதாவது நேத்திக்கு!''

''ஆமாம்.''

''கார்ல சேதம் ஏதாவது இருக்கா?''

''ஒண்ணுமே இல்லை சார். என்ன காரணமா இருக்கும்னு புரியலை?''

''காலைலதான் போலீஸ் பார்த்திருக்கு. எந்த நேரத்துல கார் ஏர்போர்ட்டுக்குள்ளே வந்திருக்குன்னு தெரியலை.''

காரைப் பார்க்கலாம் என்று யோசித்த ராம் அதைக் கைவிட்டார். மழைல நனைஞ்சு சர்வீஸுக்குப் போய்ப் பல கைகள் பட்டிருக் கும். என்னதான் அதுல இருக்க முடியும்? ஃபிங்கர் பிரிண்ட்ஸ் இருக்க வழியில்லை. நான் நினைச்சதுக்கும், இந்தக் காருக்கும் எந்தத் தொடர்பும் இல்லாமலும் போகலாம்.

அந்தக் காமதேனு ஆளை விசாரிச்சா?

அவசர நோக்கில் என்ன தெரியும்? லிஃப்ட் கேக்கக் கையசைக்கிற நேரத்துல ஆள், அடையாளமா பாக்கத் தோணும்?

எதற்கும் இருக்கட்டும் என்று பட்டறை யில் போய்க் காரைப் பார்த்தார். துருவித் துருவி ஆராய்ந்தும் ஒன்றுமேஅகப்படவில்லை.

ஜீப்பில் ஏறியவர் ''மீனம்பாக்கம் ஏர் போர்ட்டுக்குப் போ'' என்றார்.

ஆறு மணிக்கு சைதாப்பேட்டை கிட்ட காரைப் பார்த்திருக்கான். விடிகாலைல ஏர் போர்டில அதே கார்.

கொலை நடந்தது மௌண்ட் கிட்ட.

மௌண்ட்டுக்கும் மீனம்பாக்கத்துக்கும் அதிக தூரமில்லை. திடீரென்று காட்பரீஸ் சாக்லெட் நினைவு அவருக்கு வந்தது.

ஞாயிற்றுக் கிழமை இந்தப் பக்கம் எல்லாக் கடைகளுமே லீவுதான். அதுனால கடை கள்ள, அதுவும் காட்பரிஸ் சாக்லெட் வாங் கறது சாத்தியமில்லை.

வந்தவன் பெட்டில அது இருந்திருக்கணும் ஏற்கனவே.



வீட்டைக் காக்கும் சிங்கக் குட்டி

திருவனந்தபுரம் மிருகக் காட்சி சாலை டாக்டர் சந்திராவின் வீட்டுக்கு நீங்கள் போனால் உங்களைப் பார்த்து நாய் குரைப்பதோடு சிங்கமும் உறுமும்! ஆமாம் அவரது வீட்டு முன்பு ஒரு சிங்கக் குட்டியைக் கட்டிப் போட்டுள் ளார்! அதன் பெயர் லியோ. வயது ஆறு மாதம். மிருகக் காட்சி சாலையில் உள்ள ஒரு சிங்கம் 3 குட்டிகளைப் போட்டது. இரண்டை அந்தச் சிங்கமே கடித்துக் கொன்று விட்டது. எனவே மூன்றாவது குட்டியையாவது காப் பாற்றுவோம் எனக் கருதி டாக்டர் சந்திரா அந்தக் குட்டியைத் தம் வீட்டுக்குக் கொண்டு வந்து வளர்த்து வருகிறார். தினமும் லியோ புட்டியில் தான் பால் குடிக்கிறது. இப்போது மாமிசம் சாப்பிடத் தொடங்கியுள்ளது. டாக்டர் வளர்க்கும் நாய் ஜிம்மிதான் சிங்கக் குட்டி லியோவின் நண்பன்.

—எஸ்.எஸ். மணி

சட்டென்று ஒன்று தோன்றியது அவருக்கு.

வந்தவன் ஃப்ளைட்ல வந்திருக்கலாம். காட்பரீஸ் சாக்லெட் சட்டென்று பொருந் தியது. காணாமல் போன கார் ஏர் போர்ட்ல. ஏற்கனவே நம்மோட அனுமானம் கொலை நடந்தது ஒரு வேளை கார்லே இருக்கலாங் கறது. இது ரத்தமில்லாத கொலை. உயிர் பிரிஞ்சப்புறம், உடம்பை வெளில இடத்தி, அமிலத்தை ஊத்தி முகத்தைச் சேதப்படுத்தி யிருக்கலாம்.

மழை, ரேகைகளையும் கார் தடயங்களையும் துப்புரவாக அழித்து விட்டிருந்தது.

இன்னும் சிலவற்றை யோசிக்க யோசிக்க அவருக்குத் தெளிவும், கூடவே குழப்பமும் கூடிக்கொண்டே போனது.

ஏர் போர்ட்ல போய் விசாரிக்கணும்.

நிச்சயமா உபயோகமான தகவல் கிடைக் கும்.

எட்டரை மணியிலிருந்து ஒன்பதுக்குள்ள கொலை நடந்ததா பி. எம். சொல்லுது.

இந்த முயற்சிகளைச் செய்யவும், இதைக் கச்சிதமாக முடிக்கவும் குறைந்த பட்சம் ஒருத்தனுக்கு ஒரு மணி நேரத்துக்கு மேல வேணும். சரி ஏழரை. ஏர் போர்ட்டுக்கும், கொலை நடந்த இடத்துக்கும் இடைப்பட்ட தூரத்தைக் கார்ல கண்டிப்பா அரை மணி நேரத்துல கடக்கலாம். அப்பகன்னு பிளைட்ல வந்தவன் ஏழரை மணிக்குள்ள வெளியே

வந்து கார்ல ஏறியிருக்கணும். ஏழரை மணிக்கு அவன் வெளில வரணும்னு கஸ்டம்ஸ் சடங்குகளெல்லாம் முடிஞ்சு வர குறைஞ்சபட்சம் ஒரு மணி நேரம் ஆகும். ஸோ, பிளேட் ஆறரை மணிக்கு வந்திருக்கணும்.

ஆறரைக்கு ஃப்ளேட் இருக்கா?

ஏர்போர்டில் நுழைந்து என்கொயரியில் அவசரமாக விசாரித்தார்.''ஆறரைக்கு ஏதாவது பிளேட் இருக்கா?''

''என்னிக்கு சார்?''

''ஞாயிற்றுக் கிழமை, ஆறரை மணி அளவுல இங்க வந்து சேர்ற ஃப்ளேட் இருக்கா?''

''பார்த்துச் சொல்றேன்.''

வந்த பதில் அவரை உல்லாசத்தின் உச்சிக்குக் கொண்டு போனது.

''இருக்கு சார். கொழும்பு ப்ளேட் போயிங் 737 ஒண்ணு சரியா ஆறரை மணிக்கு வருது.''

அதிகாரிகளைச் சந்திக்கக் கால்களை அவசரமாகப் பதித்து உள்ளே பாய்ந்தார்.

'ஐம் எஸ். பி. ராம்' என்று ஆரம்பித்து ஒரு கேஸ் விஷயமாகத் தமக்குச் சிலதகவல்கள் வேண்டும் என்றார்.

''என்ன வேணும்?''

''ஆகஸ்ட் 14ம் தேதி ஞாயிற்றுக் கிழமை கொழும்பு ஃப்ளேட் போயிங் 737 ஒண்ணு ஆறரை மணிக்குச் சரியா வந்ததா சார்?''

''எஸ்.''

''அதுல குறிக்கப்பட்ட பிரயாணிகள் எல்லாரும் வந்திருந்தாங்களா? இல்லே கடைசி நேர கான்சலேஷன் ஏதாவது இருக்கா?''

''இருக்கு. ரெண்டு பேர்.''

''யார் ஆது?'' பதறினார்.

பார்த்துச் சொல்ல, சார்ட்டை ஆராய்ந்த அந்த அதிகாரி,''மிஸ்டர் சோப்ரா வயசு 58, மிஸ் பூமா, வயசு 23 மத்த எல்லாரும் வந்தாச்சு!'' என்றார்.

கொலை செய்யப்பட்ட அந்த ஆளுக்கு வயது அதிகம் போனால் முப்பதுக்கு மேல் இருக்காது என்றது டாக்டர் சர்டிபிகேட்.

ஸோ... ஆள் வந்திருக்கணும்!

''ப்ளீஸ், நீங்க ஒரு உதவி பண்ணணும். வந்து சேர்ந்த அந்த பாஸெஞ்ஜர்ஸ் எல்லாரோட பேரையும், அட்ரஸோட தரணும்.''

''அரை மணி நேரம் வெயிட் பண்ணணும்''

''காத்திருக்கேன்.''

வெளியே வந்து யோசிக்கத் தொடங்கினார். ஒரு சமயம் பார்த்தபோது, வேரே இல்லாமல் மரத்தை வளர்ப்பது போலப் பட்டது. மேலே யோசிக்காமல் நிறுத்தினார். லிஸ்ட் வரட்டும்... அப்புறமா மத்தது.

லிஸ்ட் வந்தது.

வரிசையாகப் பார்த்துக் கொண்டு வந்தார். முப்பதிலிருந்து நாப்பதுக்குள் ஏராளமான எண்ணிக்கை தேற, அயர்ந்து போனார்.

அதில் பெண்களுடன் நண்பர்களுடன் வந்தவர்களை யெல்லாம் கழித்தார்.

நான் நினைக்கிறபடியா இருந்தால் ஆள் தனியாத்தான் வந்திருக்கணும்.

தனியாக வந்தவர்களில், சிலர் கணித்து வைத்திருந்த அந்த வயதில், ஆறு பேர் இருந்தார்கள்.

அதை மட்டும் குறித்து எடுத்துக்கொண்டு புறப்பட்டார்.

முதல்ல இந்த ஆறு வீடுகளுக்கும் டெலிபோன் பண்ணி வந்தாச்சான்னு செக்கணும். தகவல் தெரிஞ்சாத்தான் இந்தப் பாதை சரியா, தப்பான்னு முடிவு செய்யலாம்.

ஸ்டேஷனுக்குள் நுழைந்து அவசரமாக முதல் மூன்று பெயர்களை முயற்சி செய்ய வந்த பதில் முகத்தில் கரியைப் பூசியது.

''வந்தாச்சே!''

''வந்தாச்சே!''

''வந்....''

''சே! என்னடா இது?''

நாலாவது!

''மிஸ்டர் மகாதேவன் வீடா?''

''ஆமாம். மிஸஸ் மகாதேவன்தான் பேசறேன்.''

''உங்க கணவரைக் கொஞ்சம் கூப்பிட முடியுமா?''

''ஸாரி, அவர் கொழும்பு போயிருக்கார். இன்னும் திரும்பி வரலே. நீங்க யாரு பேசறது?''

துள்ளினார் எஸ். பி. ராம்.

''மேடம், உங்க கணவர் ஞாயிற்றுக்கிழமை வர்றதா இருந்தாரா?''

''ஆமாம்.''

''அவர் வந்திருக்கார் மேடம்!''

''இல்லேன்னு நான் சொல்றேன். எனக்குத் தெரியாதா? என்ன இது பேத்தல்?''

''அவர் வந்ததா எங்களுக்கு ஆதாரம் இருக்கு. இப்பவே நான் உங்களை மீட் பண்ணணும்.''


''ஐயோ சார், கடைசி நேரத்துல அவரோட ட்ரிப் கான்சலாகி, அதுக்குப் பதிலா என் தம்பி அவரோட பேர்ல வந்திருக்கான். இட்டக்கத்தான் இருக்கான். பேசச் சொல்லட்டுமா?''

'டொக்'கென்று டெலிபோன் கை நழுவி விழ எஸ். பி. ராம் சோர்ந்து போனார்.

மறுபடியும் ஐந்தாவது பெயர்...

''வந்திட்டாருங்க. நீங்க யார்...?''

எஜமான விசுவாசம்



நம்பிக்கையை முற்றிலும் இழந்துபோனராம், துவண்டார். இன்னும் ஒரே ஒரு எடந்தான். அதுவும் கண்டிப்பா தோல்வியாத்தான் இருக்கும். மறுபடியும் முதல்ல இருந்து தொடங்கணுமா?

ஆறுவதை முயற்சி செய்ய, எண்களைச் சுழற்ற எதிர் முனையில் மணி அடித்தது.

''ஹலோ....!''

[6]

"பசிக்குது! சாப்பாடு போடுன்னு சொல்லிச் சொல்லிக் கடைசில என்னையே சாப்டிட்டியேடா சண்டாளா?

''முழுக்க அனுபவிச்சுட்டு, இப்ப சக்கையா என்னைத் துப்பிட்டியே!

''என்ன கேட்டே? என்ன கேட்டே? சின்ன வீடா வேணும்னு செட்டப் பண்ணிக்கலாம்னு? உன்னை இதுவரைக்கும் பாக்காத பெரிய வீட்டுக்கே அனுப்பி வைக்கறேண்டா வர்றேண்டா....''

பரபரவெனத் தாவணியைக் கிழித்துக் கொண்டு அவள் சாலையின் குறுக்கே ஓட...

எதிரே அந்த அசுர லாரி சீறிக்கொண்டு வர....

அதன் முகம் இவளை நெருங்க....

''க்ரீச்.....''

[7]

"சொல்றேன்னு சொல்லி நேரத்தைக் கடத்திட்டே போனா என்ன அர்த்தம் சங்கர்? முடியாத இந்த உடம்பிலேயும் ஒரு பாட்டம் பெரிசா அழுதாச்சு. பேரைத் தவிர வேற எதையும் சொல்லலே. உங்களுக்கு இஷ்டமில்லேன்னா...?'' வந்தனா இழுத்து நிறுத்த.

பதறிப்போய்த் தடுத்தான் சங்கர். ''இல்ல சிஸ்டர், உங்க கிட்ட நான் சொல்லியே ஆகணும். ஆனா, அதுக்கு முன்னால நான் உங்களுக்கு ஒரு கதை சொல்றேன் சிஸ்டர்.''

''கதையா, எதுக்கு?''

''காரணம் கேக்காதீங்க சிஸ்டர். அந்தக் கதையைப் பத்தின உங்க அபிப்பிராயம் எனக்கு வேணும். அதுக்குப் பின்னால என்னைப் பத்தி நான் சொல்றேன்.''

சிரித்துக் கொண்டே அவனைப் பார்த்த வந்தனா, ''ஓ. கே. சொல்லுங்க! எனக்கு நியாயம்னு பட்டதை நான் உங்களுக்குச் சொல்றேன்.'' என்றாள்.

''நியாயம்னு மனசுல பட்டா அதுபடி நீங்க நடந்து காட்டுவீங்களா சிஸ்டர்?''

''கண்டிப்பா!''

''குறுக்கே சென்டிமெண்டலா ஏதாவது வந்தா?''

''மிதிச்சுத் தள்ளிட்டு நடந்துருவேன்.''

''அப்படீன்னா கதையைக் கேளுங்க சிஸ்டர்.''

சொல்லத் தொடங்கினான்.

"எத்தனை நாளைக்கு இந்த லால்பாக்கும், மகாத்மா காந்தி ரோடும்? ம்?''



மேலட்டை வண்ணப்படம்:

திலீப் பானர்ஜி

எம். டி. ஆரில் உட்கார்ந்து நெய் தோசையை விண்டு சட்னியில் புரட்டிக் கொண்டிருந்தான் பாபு.

''என்ன செய்யச் சொல்றே என்னை?''

''கல்யாணம் பண்ணிக்கச் சொல்றேன். உங்களைப் பத்தி ஒரு தகவலும் சொல்றதில்லே. கேட்டா அறுதைன்னு சொல்றீங்க.''

''நான் பொய்யா சொல்றேன்?''

''அப்படி நான் சொல்லலியே!''

''பின்னே?''

''எத்தனை நான் பொறுக்க முடியும்? அன்னிக்கு மைசூர் போய் ரூம் எடுத்தது பெரிய தப்பு! என் தம்பிக்கு நம்ம விஷயம் எதுவுமே இன்னமும் தெரியாது. அவனை மெட்ராஸ்ல இருந்து வரவழைக்கட்டா?''

''வேணும்.''

''நான் அவனுக்கு எல்லாம் விவரமா இன்னிக்கு லெட்டர் எழுதிப் போட்டாச்சு.''

''எதுக்குக் கோகிலா?''

''எனக்குன்னு உறவு அவன் மட்டும் தானே! சீக்கிரம் கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணுங்க.''

''கொஞ்சம் பொறு.''

''நான் பொறுத்தாலும் உங்க பய பொறுக்க மாட்டான்.''

அதிர்ச்சியோடு திரும்பினான். ''உன் தம்பிக்கு இதையும் எழுதிப் போட்டாச்சா?''

''ஆமாம். இது தெரிஞ்சப்பத்தான் எனக்குப் பயமே மனசுக்குள்ள வர ஆரம்பிச்சிருக்கு. ப்ளீஸ் பாபு, சொல்லுங்க பாபு. எப்ப நம்ம கல்யாணம்?''

சற்று யோசித்த அவன், அவளை நெருங்கி இறுக அணைத்துக் கொண்டான். நெற்றியில் இதழ்களைப் பதித்தான். கூந்தலைக் கைகளால் மெல்ல வருடினான்.

''இந்த வேலையெல்லாம் வேணும். உடனே எனக்குத் தெரியணும். எப்ப நம்ம கல்யாணம்?''

''நாளைக்குச் சாயங்காலம் அஞ்சு மணிக்கு என் ரூமுக்கு வா.'' அட்ரஸ் தந்தான். ''அங்கே வச்சு உனக்கு ஒரு நல்ல முடிவாச் சொல்றேன்.''

அவன் போய் ரொம்ப நேரம் ஆன பிறகும், உல்லாசத்தில் மிதந்து கொண்டிருந்தாள் கோகிலா.

மறு நாள் மூன்று மணியிலிருந்தே பார்த்துப் பார்த்து அலங்கரித்துக் கொள்ளத் தொடங்கினாள். தம்பிக்கு மறுபடியும், தான் பாபுவின் அறைக்குப் புறப்படும் அந்த நிமிஷம்வரை எழுதினாள். உடனே புறப்பட்டுவா என்றும் ஒரு வரியும் கடைசியில் குறிப்பிட்டாள்.

நாலு மணியானதும் புறப்பட்டாள்.

அல்சூருக்குப் போகும் அந்த டஸ்ஸைப் பல்லக்காக நினைத்துப் பயணித்தாள்.

அவன் கொடுத்த முகவரியை விசாரித்து, எண்களைக் கண்களால் தடவி, கதவைத் தட்டினாள்.

திறக்கப்பட்டது.

யாரோ ஓர் ஆள்.

''இங்கே இருக்கான். வாங்க. நீங்கதான் கோகிலாவா?''

மகிழ்ச்சியோடு உள்ளே நுழைந்தாள்.

கதவு சாத்தப்பட்டது.

''ஏன் கதவைச்சாத்தறீங்க?பாபு எங்கே?''

பதறிப்போய் அவள் நகர்ந்தாள்.

''மிஸ் கோகிலா, நான் உங்களை எதுவும் செய்ய மாட்டேன். அப்படி ஒக்காருங்க.''

''பாபு எங்கே?''

பதில் இல்லை.

''பாபு எங்கே?''

மௌனம்.

அவனும் இவளை ஒன்றும் செய்யாமல் மௌனமாக இருக்க, இவள் குழப்பமடைந்தாள். நிமிடங்கள் அரை மணி நேரமாகக் கரைய,

கதவு தட்டப்பட்டது.

பாபு.

''பாபு நீங்க... ஏங்க இவ்ளோ நேரம்?''

''கோகிலா நீ எங்கே இப்படி?''

''நீங்கதானே பாபு உங்க அறைக்கு வரச் சொன்னீங்க? அதான் வந்தேன்.''

''என் அறையா? நான் மெஜஸ்டிக்ல ஒரு ஹோட்டல்ல இல்ல இருக்கேன். எனக்கேது அல்சூர்ல ரூம்?''

''பாபு?''



''என்னடீ கூச்சல் போடறே? காசுக்காக யார் யாருக்கோ முந்தானை விரிக்கிறவ நீயின்னு தெரியாமப் போச்சு... கடைசில என் நண்பனோட அறையிலேயே...''

''பாபு, நிறுத்துங்க... உங்க நாக்குல விஷமா?''

''என்னடி பேத்தல் இது? நல்ல காலம் தப்பிச்சேன். எவனோடவோ படுத்துட்டு, குழந்தை என்னதுன்னு கூசாமச் சொல்றியா? இஷ்டமிருந்தா வச்சுக்கோ, இல்லேன்னு கலை, யாருக்கு என்ன?''

ஒவ்வொரு சொல்லும் அம்புகளாகப் பாய, சொல்வது பாபுதானா என்று கண்கள் நம்ப மறுக்க, அந்த அறையே தட்டாமாலை சுற்றியது கோகிலாவுக்கு...

''பாபு, என்னோட நிலைமை....?''

''வேணும்னா சின்ன வீடா செட்டப் பண்ணிக்கிறேன்.''

தலைக்குள் என்னவோ ஒன்று புகுந்து குடைய நரம்புகள் கண்ணுக்குள் எட்டிப் பார்க்க மூளைக்குள் படீரென்று எதுவோ தெறி ஒரு பூகம்பம் நிகழத் தொடங்கியது.

மெல்லச்சிரிக்கத் தொடங்கினாள்கோகிலா.

பலமாகச் சிரித்து முடிந்தவுடன் அழத் தொடங்கினாள்.

ஓடிப்போய் பாபுவின் சட்டையைப் பிடித்து ஆவேசமாக இழுக்க அது 'டர்' என்றது.

ஆத்திரத்தின் உச்சியை அடைந்த பாபு பளீரென்று மாறி மாறி அவள் கன்னத்தில் அறைந்து தலைமுடியைக்கொத்தாகப் பிடித்து மூலையில் தள்ளினான்.

அலறிக் கொண்டே ஓரத்தில் போய் விழுந்தாள் கோகிலா.

''வேணும் பாபு. பணத்துக்கு ஆசைப் பட்டு ஒரு பொண்ணைப் பைத்தியமாக்கிட்டேனே! நீ இவ்ளோ கொடூரக்காரனாபாபு?'' பணத்தை மணி திருப்பிக் கொடுக்க,

அலட்சியமாக அதை வாங்கிக் கொண்டு பாபு வெளியேறினான்.

மூலையில் உட்கார்ந்து சிரித்தும், அழுதும் அந்தப் பெண் பிதற்றுவதைக் கண்டபோது மணிக்கு நெஞ்சில் ரத்தம் வடிந்தது. 'ச்சே! ஒரு அயோக்கியனுக்கு — சேவலம் பணத்துக்கு ஆசைப்பட்டுத் துணை போயிட்டேனே. ஒரு பெண் பாழாயிட்டாளே!''

''அடப் பாவி! கலச்சிடுன்னு சொல்றே? பணத்தை நம்பியா என்னை உன்கிட்டக் குடுத்தேன்?

''ஐயோ...போகாதேயேன்... நில்லேன்.

''போறானே... அவனைக் கேக்க யாருமே இல்லையா? சண்டாளன்... சண்டாளன்.''

''கோகிலா எழுந்திரும்மா!'' மணி அருகே போய் அழைக்க,

அவனைக் கொஞ்சமும் பொருட்படுத்தாமல் எழுந்து நடக்கத் தொடங்கினாள்.

''முழுக்க அனுபவிச்சுட்டு இப்ப சக்கையா துப்பிட்டியே!

''என்ன கேட்டே? சின்ன வீடா வேணும்னு செட்டப் பண்ணிக்கலாம்னு?''

பரபரவெனத் தாவணியைக் கிழித்துக் கொண்டு அவள் சாலையின் குறுக்கே ஓட....

''கோகிலா .... நில்லு .... போகாதே... கோகிலா....'' மணி துரத்த.

எதிரே அந்த லாரி சீறிக் கொண்டு வர, கோகிலா ரத்தக் குழம்பானாள்.

மணி நாராகக் கிழிக்கப் பட்டிருந்தான். நினைவு இழக்கும் கட்டத்துக்கு வந்து கொண்டிருந்தான்.

''அடப் பாவி, எங்க அக்கா சாகக் காரணமா இருந்தியே உன்னை என்ன செய்யறேன் பாரு!''

''என்ன வேணும்னு செய். அதுதான் நியாயமும் கூட. கொன்னுடு. ஆனா இத்தனை விவரங்களையும் உனக்குச் சொன்ன எனக்கு, சாகறதுக்கு முன்னால ஒரு வாய் தண்ணி தந்துட்டுத் திரும்பவும் அடி.''

''எங்கே அந்த பாபு?''

''முதல்லே அவன் பேரு பாபு இல்லே. அவன் ஒரு வுமனைஸர். ஊருக்கு ஒரு பேரு. வேலைக்கு ஒரு பொண்ணு. பணக்காரக் கொழுப்புல இன்னும் எத்தனை பேரைச் சாகடிச்சிருக்கானோ தெரியாது. அவனோட பேரும், அட்ரஸும் இதுல இருக்கு.... தண்ணி....தண்ணி....''

''அப்புறம் சங்கர்?''

''இது புத்தகத்துல வந்த கதை இல்லே ஸிஸ்டர். நடந்த சம்பவம். அந்தத் தம்பியோட மனநிலை எப்படி இருந்திருக்கும்னு நீங்களே யோசனை பண்ணிப் பாருங்க ஸிஸ்டர். அக்கா மேலே உயிரையே வச்ச அவனால இதை எப்படி ஸிஸ்டர் தாங்கிக்க முடியும்?''

''ஹாரிபிள்! பாஸ்டர்ட்!''

''நீங்க அந்தத் தம்பியோட மனநிலைல இருந்தா என்ன செஞ்சிருப்பீங்க ஸிஸ்டர்?''

''அந்த பாஸ்டர்டைக் கண்ட துண்டமா வெட்டிச் சாய்ச்சிருப்பேன். உடம்பைக் கூறு போட்டு உப்புத் தடவியிருப்பேன்.''

''அதைச்சட்டம்அனுமதிக்குமா ஸிஸ்டர்?''

''சட்டத்துல ஆயிரம் ஓட்டை. தர்மம்னு ஒண்ணு இல்லையா சங்கர்? அந்தக் கோகிலா ஆத்மா சாந்தி யடைய வேணுமா?''

''அந்தத் தம்பியும், நீங்க எடுத்த முடிவை எடுத்திருந்தா நீங்க அவனைப் பாராட்டுவீங்களா ஸிஸ்டர்?''

''கட்டாயம். கையைக் குலுக்குவேன். அவன் என்ன செஞ்சான்? யாரந்தத்தம்பி?''

டெலிபோன் அடித்தது.

''ஹலோ, மிஸஸ் கண்ணன்.''

எதிர் முனையில் கெகிகெப்பாக எதுவோ கேட்க,

''இல்லே சார், இன்னும் வரலே. கடைசி நிமிஷத்துல கான்சல் ஆயிட்டதா அவரே எஸ். டி. டி. போட்டுப் பேசினார்.''

''.......''

''என்னது? வந்திருக்காரா? ஏர்போர்ட்ல விசாரிச்சீங்களா? சான்ஸ் இல்லே இன்ஸ்பெக்டர். ஏர்போர்ட்டுக்கு வந்தவர் வீட்டுக்கு வராமப் போக வழியே இல்லையே!''

''என்னது? ஆகஸ்ட் 14ஆ? இன்னிக்குப் பதினேழு இன்ஸ்பெக்டர். மூணு நாளா வீட்டுக்கு வந்து சேர?''

''.......''

''சரி வாங்க. நான் காத்துக்கிட்டு இருக்கேன்.'' டெலிபோனை வைத்துவிட்டு

முகத்தில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக்கொண்டாள் வந்தனா.

''அது யாருனு சொல்லட்டுமா ஸிஸ்டர்?''

''வேணாம் சங்கர். மனசு சரியில்லே.''

''டெலிபோன்லே என்ன நியூஸ்ஸிஸ்டர்?''

''......''

''ஏன் ஸிஸ்டர் பதில் பேசல? 14ம் தேதி கொழும்பு போயிங் 737 பிளேட்ல வந்த உங்க கணவர் வீடு வந்து சேரலேன்னு போலீஸ் சொல்லுதா?''

''சங்கர்?''

''14ம் தேதி காலேல உங்களுக்கு ஃபோன் போட்டுக் கான்சலான சேதியைக் கண்ணன் சொல்லியிருக்காரே!''

''......''

''போலீஸ் சொல்றதுக்கு முன்னால நானே சொல்லிடறேன். ஸிஸ்டர். இல்லேன்னு இங்க சொல்றதைப் போலீஸ் ஸ்டேஷன்ல சொல்ல வேண்டி வரும்.''

''சங்கர், நீங்க?''

''கோகிலாவைக் கெடுத்து அவ சாகக் காரணமா இருந்த அந்த அயோக்கியன் பாபு உங்க புருஷன் கண்ணன்தான் ஸிஸ்டர். அந்தத் தம்பி நான்தான். தம்பி என்ன செஞ்சான்னு கேட்டீங்களே ஸிஸ்டர். நீங்க எது நியாயம்னு தீர்ப்புச் சொன்னீங்களோ அதைத்தான் செஞ்சான்.''

''சங்கர்....'' அலறிய வந்தனா. ''நீ....நீ கண்ணனைக் கொ....'' பேச வராமல் உடம்பு நடுங்க....

மௌனத்தில் பதிலைச் சொன்னான் சங்கர்.

மணி, கண்ணனோட முகவரியைத் தந்துட்டு எனக்குச் சில உபதேசங்களும் பண்ணினான். நேரா மோதாதே! அவன் பெரிய மனுஷன்... மூளை முன்னால எடுன்னு. கண்ணனை அவனே அறியாமல் நிழல் போல் தொடர்ந்து ரொம்ப நாள் ஸ்டடி பண்ணினேன். பிஸினஸ் விஷயமா அவன் கொழும்பு போனப்ப, இதுதான் சரியான நேரம்னு தீர்மானிச்சேன். ஆகஸ்ட் 14ந்தேதி சாயங்காலம் ஆறரை மணி ஃப்ளைட்டிலே கண்ணன் வரப்போற தகவல் எனக்கு 12ந் தேதியே கிடைச்சது. ரொம்பவும் யோசிச்சு, இடத்தை, நேரத்தைத் தேர்ந்தெடுத்தேன். என்னவெல்லாம்செய்யணும்னு தீர்மானிச்சு வச்சுட்டேன்.

''சுந்தரலிங்கம் காரை நோட் பண்ணி, அதுக்கு மாத்துச் சாவி ரெடி பண்ற பொறுப்பை மணி ஏத்துக்கிட்டான்.

''மூணு மணிக்கு காரை ஆபீஸ்ல வச்சே கிளப்பத் தீர்மானிச்சேன். டிரைவர் சோமு வரைக்கும் போனது இன்னும் சௌகரியமா இருந்தது.

காலேல மணி பெண் குரல்ல ஃபோன் ஃபிரம் கொழும்போன்னு குரல்குடுக்க, நானும் குரலைக் கொஞ்சம் கரகரப்பாக்கிட்டு கண்ணன் பேசற மாதிரி 'ட்ரிப் கான்ஸலாயிடுச்சு'ன்னு உங்ககிட்டப் பேசினேன். இந்தக் கோணத்துல யோசிக்கவா உங்களுக்குத் தோணும்?. போன்ல குரலும் மாறியிருக்க வாய்ப்புண்டு. அது முடிஞ்சவுடனே காரை எடுத்துட்டுக் கொஞ்சம் அங்கங்கே சுத்திட்டு ஆறரை மணிக்கு ஏர்-போர்ட்டுக்குப் போனேன். கஸ்டம்ஸ் முடிச்சு, கண்ணன் வெளியே வர்றது தூரத்துல தெரிஞ்சுது.

''நானே வலியப் போய் 'விஷ்' பண்ணினேன்.''

''யாரு நீங்க?''

''அம்மா அவங்க செநேகிதியோட காரைக் கொடுத்து அனுப்பினாங்க.''

''அப்படியா வெரிகுட்!''

''பெட்டியைக் குடுங்க!''

சிறிய அந்தப் பெட்டியை வாங்கிக் கொண்டு காருக்குள் நுழைந்தான் சங்கர்.

''சீக்கிரம் போ டிரைவர்... நீ டிரைவர் தானே?''

''ஆமாங்க.''

கோட் பாக்கெட்டுக்குள் இருந்த காட்பரீஸ் சாக்லெட்டை உரித்து வாயில் அடக்கிக்கொண்டான் கண்ணன்.

பிரதான சாலையிலிருந்து ஒற்றையடிப் பாதை ஒன்றில் வண்டி திரும்பியது.


''ஏன் வண்டி இப்படிப் போகுது?''

''ஏதோ ப்ராப்ளம் இருக்கு பாக்கணும்!'' வண்டியை நிறுத்திவிட்டுப் பானெட்டைத் தூக்கினான் சங்கர்.

கண்ணன் சுவாரஸ்யமாக காட்பரீஸை மென்று சொண்டே உட்கார்ந்திருந்தான்.

சட்டைக்குள்ளிருந்த குளோரோஃபாம் ஸ்ப்ரேயை வலது கைக்குள் சாமர்த்தியமாக மடக்கிக் கொண்ட பின்புறம் வந்த சங்கர்,

''சீட்டுக்கடியில ஸ்பானர் இருக்கு. எடுத்துக்கறேன் சார்'' — கதவைத் திறந்து தலையையும் கைகளையும் உள்ளே நுழைத்தான் சாதுர்யமாக,



ஒரு சாதாரண டிட்டர்ஜெண்ட்
சலவை கட்டியை விட
எடையோ இரண்டு மடங்கு
விலையோ
சிலகாசுகள்தான் அதிகம்
அதிகப்படியான சலவை செய்யும் டிட்டர்ஜெண்ட் கட்டிகள்
சிக்கன முறையில் சலவை செய்யும் சோப் பார்கள்.
நிகரமான எடை 300 கிராம்கள்
டோட்டல்
நீலநிற டிட்டர்ஜெண்ட் பார்
Total
BLUE DETERGENT BAR
எளிதான சலவைக் கேற்ற ஐந்து பகுதிகளைக் கொண்டது
தரமான தயாரிப்பினை வழங்குவோர்:
கர்நாடக சோப்ஸ் அண்டு டிட்டர்ஜெண்ட்ஸ் லிமிடெட்
பெங்களூர்
விற்பனை செய்வோர்:
மைசூர் சேல்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட் பெங்களூர்
MCA/TDB/52/TAM-R

கண்களை உயர்த்தியபோது கண்ணன் வெளிப்புறமாகப் பார்ப்பது புரிந்தது.

வலது கையைப் பிரித்துப் பளிரென வேகமாக ஸ்ப்ரேயை அடிக்க கண்ணன் உதறிக்கொண்டு விடுபட முயல்வதற்குள் கதவை அடித்துச் சாத்தினான். ஏற்கனவே இன்னொரு கதவும் பூட்டப்பட்டிருந்தது.

பிறகென்ன?

மலைப்பிரதேசத்துக்குப் பக்கத்தில்நிறுத்திக் கண்ணனை இழுத்து வெளியில் போட்டுச் கழுத்தை நெரிப்பது கஷ்டமாக இருக்கவில்லை சங்கருக்கு.

மூச்சு நின்றதை நிச்சயப்படுத்திக்கொண்டு உடைகளைக் களைந்து நிர்வாணமாக்கினான். உடைகளை அந்தப் பெட்டிக்குள்ளேயே திணித்தான். தான் கொண்டு வந்திருந்த பைக்குள் ஷூ மற்ற சங்கதிகளைத் திணித்துவிட்டு, சுற்றுப்புறத்தைச் சுத்தமாக ஆராயத் தொடங்கினான்.

அதற்குள் மழைத் தூறல்கள் மெல்ல ஆரம்பிக்க, தயாராக இருந்த நைட்ரிக் அமிலம் மெல்லக் கண்ணனின் முகத்தைச் கலைக்க ஆரம்பித்தது.

முடிந்தபோது தெப்பலாக நனைந்திருந்தான் சங்கர்.

''கோகிலா. இப்ப திருப்தியா? இனிமே எந்தப் பெண்ணுக்கும் உன் நிலை வராது.''

குரூரமாக ஒரு திருப்தி முகத்தில் படர, நிதானமாகக் காரில் ஏறி, ஏர் போர்ட்டுக்கு விரட்டினான். உள்ளே பார்க் செய்துவிட்டு, பெட்டியையும் பையையும் எடுத்துக்கொண்டு,

மழையில் மீனம்பாக்கம் ஸ்டேஷனுக்கு ஓடத் தொடங்கினான்.

பார்க்கில் இறங்கி, சென்ட்ரல் ஸபர்பன் பிளாட்பாரத்துக்கு வந்தபோது எலக்ட்ரானிக் கடிகாரம் 10:45 என்றது.

கையில் பெட்டி கனத்தது. ஆம்பர் கண்களைச் சிமிட்டி ரயில் நகர ஓடிப்போய் ஏறினான் சங்கர். கடமையை முடித்த ஆயாசம்; மழையில் தெப்பலாக நனைந்த ஈரம். உடம்பு கனக்கத் தொடங்கியது. ரயிலில் அங்கங்கே ஓரிருவர்.

பேஸின் பிரிட்ஜ் தாண்டும் சமயம், பெட்டியை — கூவத்தின் ஒரு பகுதி அழுக்காக அங்கு ஓட, அதில் வீசி எறிந்தான் பையோடு.

''சங்கர், அப்படீன்னா தெரிஞ்சுதான் நீ இங்கே வந்தியா?''

''ஆமா ஸிஸ்டர்! கண்ணன் இறந்துட்டா அது சம்பந்தமா போலீஸ் தேடாத ஒரே இடம், அல்லது தேடற கடைசி இடம் இதுவாகத்தான் இருக்கும். அதுவரைக்கும் பிழைக்கலாமேன்னு ஒரு சபலம். கூவத்துல மிதக்கிற பெட்டி ஒரு நாள் கண்டெடுக்கப்படும்.... தண்டனை நிச்சயம்... உண்மையைச் சொன்னா, என்னோட திட்டமெல்லாம் கொலை முடியறவரைக்கும்தான்... அப்புறமா எதுவுமே நான் சரியாத் தீர்மானிக்கலை... ஆனா உங்களை நினைச்சா... நினைச்சா ஆறலை ஸிஸ்டர்....'' அவள் காலடியில் மண்டியிட்டு அழத் தொடங்கினான்.

''எனக்குக் கோகிலா இன்னும் சாகலை ஸிஸ்டர்... அது நீங்கதான் ஸிஸ்டர்...'' குரலெடுத்து அழத் தொடங்கினான்.

வாசலில் ஜீப் வந்து நிற்க,

''சீக்கிரம் கண்ணைத் துடைச்சுக்கோ சங்கர். நான் சொல்றதுக்குத் தலையாட்டு. கமான் சியர் அப்!''

''நீங்கதான் மிஸஸ் கண்ணனா?'' எஸ்.பி. ராம் வேகமாகக் கேட்டுக் கொண்டே உள்ளே வந்தார்.

''ஸாரி இன்ஸ்பெக்டர்! இவர் இப்பத்தான் வந்தார்.''

''என்னது, கண்ணன் வந்துட்டாரா?''

''ஆமாம். அன்னிக்கு ப்ளேட்ல வந்த உடனே வெளில இவர் வரவே இல்லை. அங்கேயே டிரெண்ட் எடுத்துக்கிட்டு உடனே ஒரு கான்பரன்ஸுக்காக டெல்லி ஃப்ளைட்ல 7.40க்குப் புறப்பட்டுப் போயிட்டார். ஏர்போர்ட்ல யிருந்து எனக்குச் சொல்ல முயற்சி பண்ணியிருக்கார். லைன் அவுட் ஆஃப் ஆர்டர். போன இடத்துல வேலை, நல்லகாலம் இன்னமும் தவிக்க விடாம வந்துட்டார்.''

எஸ். பி. கண்ணனைப் பார்த்ததில்லை. முகம் வாடிப்போகப் படி இறங்கினார். இனி கேஸ் பாதை மாறிவிடும். வேறு வழியாகப் போய், இங்கு திரும்பி வரத் தாமதமாகும். சங்கரைத் தாற்காலிகமாகவேனும் காப்பாற்றி விடலாம்.


அவர் போனதும்,

''ஸிஸ்டர் என்ன இது? போலீஸை ஏமாற்ற முடியுமா? உங்க புருஷனைக் கொன்னவனைக் காப்பாத்திட்டீங்களே ஸிஸ்டர்!'' கண்ணீரோடு அவன் சொல்ல

''மறுபடி போலீஸ் உன்னைத் தேடி வர நாளாகும் சங்கர். அதுக்குள்ள இந்த எல்லையை நீ தாண்டிடலாம். நீ சிக்கினாலும் அது என்னால் இருக்கக் கூடாது சங்கர்! நீதான் கோகிலான்னு என்னைச் சொல்லிட்டியே! உன் அக்கா உன்னைத் தண்டிப்பாளா? இல்லை, காட்டிக் கொடுப்பாளா?''

அவனோடு சேர்ந்து வந்தனாவும் அழத் தொடங்க அந்தக்கண்ணீரில் அவள் நெற்றிப் பொட்டு மெல்லக் கரையத் தொடங்கியது.


(முற்றும்)



நவராத்திரி ஜோக்ஸ்

அ.குமார்

''இந்த நவராத்திரி சீசன் முடியற வரைக்கும் ராத்திரி சமையல்லே எங்களுக்குன்னு எதுவும் செய்ய வேண்டாம். உங்கவரைக்கும் ஏதாவது செய்துண்டாப் போதும்.''





''ஏண்டி கொழந்தே! ஸ்வாமி கீர்த்தனைகளே கேட்டுக் கேட்டு அலுத்துப் போச்சு. 'வாடி எங்கப்பங் மொங்கே, அண்ணே அண்ணே' மாதிரி ஏதாச்சும் பாட்டுப் பாடேன்!''

''அந்த ஒரு பொம்மையை மட்டும் தினமும் வெவ்வேறு இடத்திலே இடம் மாற்றி வைக்கிறியே, ஏன்?''

''அது 'அரசியல்வாதி' பொம்மை யாச்சே!''





''என் வீட்டுக்காரரை ஏன் உள்ளே அடைச்சு வச்சிருக்கேன்னு கேட்கிறியா? அவர்தான் அரசியல்வாதியாச்சே! கொலுவுக்கு வர்ற கும்பலேப் பார்த்த உடனே மீட்டிங் ஞாபகத்திலே பேச ஆரம்பிச்சுடறாரு!''

''போன வருஷம் டி.வி.க்கு வர்ற கும்பலேயும் கொலுவுக்கு வர்ற கும்பலேயும் தனித்தனியா சமாளிக்க முடியாமப் போச்சு அதுக்காகவே இந்த வருஷம் இப்படி 'அரேஞ்ஜ்'பண்ணிட்டோம்.''



மாறுதல் வரும்

காதல் பிரச்னைகளும் வழி வகுத்துவிட்டு ஒரு வழியாக அதே வாசலைக் கடந்து அவர் ஊர் திரும்பப் புறப்படுகிறார் என்றால்...... புறப்படும்போதும் அமளி துமளிக்குக் குறைச் சலே இல்லை!

பகுதி 4

மாமா: சினிமா பாத்துப் பாத்து எப்படிக் கெட்டுப் போயிருக்கு பாரும் ஜனங்கள். ஸ்ரீதேவி கண்ணைப் பொத்திக்கிறான்னு, இதுவும் பொத்திக்கிறது பாரும்... (எல்லோரும் சிரிக்க), மாப்பிள்ளே, உடம்பைப் பார்த்துக்குங்கோ. தேகாப்பி யாசம் எல்லாம் வேண்டாம். எங்க யாவது தொடிச்சுக்கும். நானு இந்த எலும்பைக் கொண்டு போய்த்திருப்பிக் கொடுத்துரு. அடுத்த தடவை வரப்ப தங்கம் பண்ற வித்தையைச் செஞ்சு காட்ட றேன்... நீ என்ன பண்றே ரவி, முதக்காரி யமா சலூனுக்குப் போயி மீசையை எடுத்துரு. அப்புறம் பவானி, (அவள் தோளில் கையை வைத்து வாத்ஸல்யத்துடன் அணைத்து. தணிந்த குரலில்) சீக்கிரமே சந்திக்கலாம். நான் சொன்னது எல்லாம் ஞாபகம் இருக்கு இல்லே? ஒரு பிரின்ஸி பிள் வெச்சுக்கோ. எந்தக் காரியத்தை எடுத்தாலும் புதுமாதிரியா செய்யணும். மத்தவா போற பாதையிலேயே போகக் கூடாது. ஞாபகம் வெச்சுக்கோ. வரட் டுமா மாப்பிள்ளே?... எதுக்கு அழறேன்? சேச்சே!

அப்பா: ஒண்ணும் இல்லே. கண்ல தூசி.



பவானி: இந்த வாசல் வழியாகத்தான் ஒவ்வொரு முறையும் வருவார் எங்க மாமா!

வாசல்

வாசல் வழியே நுழைந்து வீட்டுக்குள் வரு வதற்கு முன்பே மாமாவின் குரல் உரக்க ஒலித்து அவரது ஆர்ப்பாட்டங்களும் ஆரம்ப மாகிவிடும். ஒரே ஒரு நாள்தான் தங்குவார். என்றாலும் அதற்குள் வீடேஅல்லோல கல்லோ லப்பட்டுப்போகும். அம்மாவின் சமையலை ருசித்து, அப்பாவின் கோபத்துக்கு ஆளாகி, குழந்தை களுக்கு விளையாட்டுக் காட்டி, பவானியின்

மாமா: நானு இந்த எலும்பைக் கொண்டுபோய்த் திருப்பிக் கொடுத்துடு. அடுத்த தடவை வரப்ப தங்கம் பண்ற வித்தையைச் செஞ்சு காட்றேன்!

புகைப்படங்கள்: ரங்கேஷ்



மாமா: ஸ்கூட்டர்ல கார்பரேட்டர் கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணி வச்சிருக்கேன். இப்பப் பாரும், நாப்பது கொடுக்கும்.

அப்பா: அதாவது ஸ்டார்ட் ஆகுது. இப்ப ஸ்டார்ட்டே ஆக மாட்டேங்கறது.

மாமா: சோக் போட்டீரா?

அப்பா: என்னவோ போட்டுக்கறேல். ஒமக்கு பஸ்ஸுக்கு நாழியாயிடப்போறது.

மாமா: வரட்டுமா? (செல்கிறார்)

அப்பா: அப்பாடா. புயல் அடிச்சு ஓஞ்சாப் பல இருக்கு. உங்கண்ணா வந்துட்டுப் போனது. இன்னும் ஒரு மாசம் ஆகும் புழுதி அடங்க.

(எல்லோரும் அவர் சென்ற திசையையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்க.)

அப்பா: என்னடாது. எல்லாரும் அசோகவனத்து சீதை மாதிரி! எங்க போயிட்டார்! வந்துருவார்ரு.

(ஒளி மங்குகிறது.)

• • •

பவானி (குரல்): எல்லாவற்றையும் புதுமையாகச் செய்ய வேண்டும் என்று மாமா சொன்னார். அவர் புறப்பட்டது கூட ஒரு புதுமைதான்.

• • •

(ஒளி மறுபடி வர, எல்லோரும் ஹாலில் உட்கார்ந்திருக்க, தங்கசாமி உள்ளே நுழைகிறான் பெட்டியுடன்.)

அப்பா: என்ன தங்கசாமி, கௌம்பிப் போயிட்டாரா?... மறுபடி ஏது பெட்டி?

தங்கசாமி: அவுரு போவலீங்க. ரொம்ப நேரம் காத்துக்கிட்டு இருந்தேன். அவுரு வரலீங்களே!

அப்பா: சரியாப் போச்சு! இப்பத்தான் புறப்பட்டுப் போயிருக்கார். ஓடு! (தங்கசாமி பெட்டியை எடுத்துக் கொண்டு மறுபடி செல்ல) முட்டா பய! பேசாமல் பஸ் ஸ்டாண்டில நிக்க வேண்டியது தானே! இங்கே யாரு திரும்பி வரச் சொன்னது?



அம்மா: அப்பாடா புயல் அடிச்ச ஓஞ்சாப்போல இருக்குடி உங்கண்ணா வந்துட்டுப்போனது இன்னும் ஒரு மாசம் ஆகும் புழுதி அடங்க!

சுஜாதா


அம்மா: இவர் போற போது எதிர்த்தாப் பல பாத்திருக்க மாட்டானோ?

ரவி: இல்லேம்மா, பஸ் ஸ்டாண்டுக்கு ரெண்டு வழி இருக்கோல்லியோ? இவன் ஒரு வழியில் வந்திருப்பான். அவர் ஒரு வழியில் போயிருப்பார்.

மாமா (விரைந்து உள்ளே வந்து): தங்கசாமியை அங்க காணமே. பெட்டியை எடுத்துண்டு எங்க போனான்?

அம்மா: சரியாப் போச்சு. நீங்க வரக் காணமேன்னு அவன் திரும்பி வந்திருக்கான்.

மாமா: மாப்பிள்ளே உடம்பைப் பாத்துக்குங்கோ! தேகாப்பியாசம் எல்லாம் வேண்டாம்!



மாமா: எங்க அவன்?

அப்பா: திரும்ப உம்மைத் தேடிண்டு பஸ் ஸ்டாண்டுக்குப் போயிருக்கான்.

மாமா: சரியான வேலைக்காரன் வெச்சிருக்கிய்யா. ஒரு இடத்தில ஸ்திரமா நிக்க மாட்டானோ?

அப்பா: இப்பத்தான் போறான். சீக்கிரம் போங்கோ. பஸ் ஸ்டாண்டுலதான் இருப்பான்.

மாமா: சரி, நான் வரட்டுமா? சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கா?

அப்பா: போய்ட்டு வாங்கோ. பஸ் போயிடப் போறது. இப்பவே சந்தேகம் தான்.

மாமா: பஸ் ஸ்டாண்டுக்கு ஒரு வழிதானே?

ரவி: இல்லே மாமா. ரெண்டு வழி: கோவில் வழி, கொளத்து வழி. அவன் கோவில் வழியா போயிருப்பானோ என்னவோ ஒருவேளை. நீங்களும் கோவில் வழியாப் போங்கோ.

மாமா: சரி பாக்கறேன்.

(போகிறார். ஒளிமங்குகிறது.)

● ● ●

பவானி (குரல்): இதோடு முடியவில்லை. முடிந்து விட்டால் அப்புறம் மாமாவுக்கும் மற்றவர்களுக்கும் என்ன வித்தியாசம்! (மறுபடி ஒளிபரவுகிறது)

● ● ●

அப்பா: சரியான கூத்து. இப்பவாவது ஒழுங்காப் போய்ச் சேருவாரான்னு சந்தேகமாகத்தான் இருக்கு.

தங்கசாமி (பெட்டியுடன் மறுபடி நுழைந்து): அவரு அங்க இன்னும் வரலேங்களே?

அப்பா: அட, திருவாழத்தான்! இப்பதான் போறார். நீ எந்த வழியா வந்தே?

தங்கசாமி: ஒருவேளை கொளத்து வழியா வராரோன்னு அந்த வழியா வந்தேங்க.

அப்பா: அவர் கோயில் வழியாப் போறார். சரியாப் போச்சு.

தங்கசாமி: சரிங்க, போய்ப் பார்த்துட்டு வரேங்க.

அப்பா (அவன் மேல் பாய்ந்து): நீ போகாதே. இங்கேயே இரு. இல்லாட்டா ரெண்டு பேரும் ஓடிப் புடிச்ச விளையாடி எங்களைப் பைத்தியமா அடிச்சுடுவேள். அவர் போய் ஒன்னைக் காணுமத் திரும்பி வருவாரு. ரெண்டு பேரும் இங்கேயே சந்திச்சுக்குங்கோ.

தங்கசாமி: அப்ப போக வேணாங்களா? பஸ்ஸுக்கு நேரமாயிருச்சன்னு?

அப்பா: இதோ இப்ப வருவார். பாத்துண்டே இரு.

● ● ●

பவானி (குரல்): மாமா வரவில்லை. தங்கசாமி பஸ் ஸ்டாண்டுக்கு வருவான் என்று பஸ் ஸ்டாண்டில் காத்திருந்திருக்கிறார். ரொம்ப நேரம் கழித்துத்தான் (மேடையில் அனைவரும் சிலையாகின்றனர்) இப்படி ஒரு சாத்தியக்கூறு இருப்பது எங்களுக்குப் பட்டது. டைசியில் தங்கசாமி உள்பட எல்லாரும் எல்லா வழியிலும் பஸ் ஸ்டாண்டுக்குப் போய் அவரைச் சந்தித்து, தங்கசாமி, மாமா இருவருக்குமிடையே சரித்திரப் பிரசித்தமான ஒரு சந்திப்பை ஏற்படுத்திக் கொடுத்து, மாமாவைப் பத்தரை மணி பஸ்ஸில்தான் அனுப்பி வைக்க முடிந்தது.

● ● ●

(எல்லோரும் விரைந்து வெளியே செல்கிறார்கள். இப்போது வெளிச்சம் குறைந்து மறுபடி ஸ்பாட் அந்த வாசலுக்கு மட்டும் தெரிகிறது.)

● ● ●

பவானி (குரல்): ஆம். இந்த வாசல் வழியாகத்தான் ஒவ்வொரு முறையும் வருவார் எங்க மாமா. அடுத்த தடவை எப்போது வருவார் என்று ஆவலுடன் காத்திருந்தோம். எங்களை மறுபடி குழந்தைகளாக்கும் விஜயம் எப்போது வரும் எப்போது வரும் என்றுதான்... (சற்று தாமதம். ஒரு விம்மலுடன்.) அடுத்த முறை மாமா வரவில்லை. பதிலாக ஒரு செய்திதான் இந்த வாசல் வழியாக வந்தது. அந்தச் செய்தி...(தாமதம்) வேண்டாம். அதைச் சொல்லி உங்கள் சந்தோஷத்தைக் கலைக்க விரும்பவில்லை. சந்தோஷத்தைத்தான் மற்றவர்களுடன் பங்கு கொள்ள வேண்டும். துக்கத்தை அல்ல. அதன்பின் எங்கள் வாழ்க்கையில் நிகழ்ந்த அவலங்கள் உங்களுக்கு வேண்டாம். நாங்கள் பாதை மாறிப்போனது. என் வாழ்க்கை மாமா கொடுத்த தைரியத்தில் திசை திரும்பியது. ரவி வேலையில்லாமல் தவிப்பது. நாணு எங்களை எல்லாம் ஏமாற்றி அமெரிக்கா போய்விட்டது. கிட்டுவின் படிப்பு நின்றுபோனது... இதெல்லாம் எதற்கு உங்களுக்கு! மாமா வந்தார், வருஷத்துக்கு ஒருநாள் சந்தோஷமாக இருந்தோம். அது மனத்தின் அடித்தளத்தில் இத்திக்கும்போது, மற்ற துக்கங்கள் முக்கியமில்லை. இல்லையா?.... மாமா! எப்பேர்பட்ட மனிதர்! (மெல்ல ஒளி மறைகிறது. இருள்)

—திரை—

நண்பன் 1: எல்லோரும் ஜாதி இரண்டொழிய வேறில்லை'னுதான் சொல்வாங்க. நம்ம பாலு மட்டும் 'ஜாதி மூன்றொழிய வேறில்லை'னு சொல்றாரே, ஏன்?

நண்பன் 2: ஆமாம், அவருக்கு மூனு பொண்ணு'சாதி'ங்க இருக்கு. அதனாலதான் அப்படிச் சொல்றார்.

—இ. ச. கோபுராஜ்



அடுத்த வாரம்: "கிருஷ்ணா! கிருஷ்ணா"

உத்தமமான முதலீட்டின் சின்னம்



யூனிட்டுகள்

ஆம் நீங்கள் எதிர்பார்க்கும் பாதுகாப்புடன் அதிக வருமானத்தைத் தரக் கூடிய முதலீடு யூனிட்டுகள்தான்.

யூனிட்டுகள் தரும் வருமானம் வருடாவருடம் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. 1982-83 ஆம் ஆண்டுக்கான யூனிட்டுகள் அளித்த டிவிடெண்ட் 13.5%.

மேலும் யூனிட்டுகள் பிரத்யேக வருமானவரி மற்றும் சொத்துவரி சலுகைகளை அளிக்கிறது.

முதலீட்டுக்கு முழுப்பாதுகாப்போடு உங்களுக்குத் தேவையானபோது எளிதில் பணமாக்கும் வசதியை அளிக்கும் யூனிட்டுகளுக்கு இணையான முதலீடு வேறு கிடையாது.

இப்பொழுதே யூனிட்டுகளில் முதலீடு செய்து மேற் கண்ட நன்மைகளை பெறுவீர்.

உங்கள் சேமிப்பின் தொடக்கம் யூனிட்டுகளாக இருக்கட்டும்.

Sista's-UTI-128/83-TM A

யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியா

(ஒரு பொதுத்துறை நிதி நிறுவனம்) தலைமை அலுவலகம் : பம்பாய்

பிராந்திய செயலகம்: ரெஜீனா மான்ஷன், 46 செகண்ட் லைன் பீச், சென்னை-600 001. போன் : 27433

தமிழ் நாட்டிலுள்ள எங்கள் முக்கிய பிரதிநிதிகள் : ● கோவை, பெரியார் மற்றும் நீலகிரி மாவட்டங்களுக்கு : திரு. ஏ. தனபால், 10-ஜே. ஹாஸ்சர் ரோடு, கோவை-641 018. போன்-34776 (அலு). ● மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு : திரு எம். இராமமூர்த்தி. 30, எல். ஐ. சி. காலனி, மதுரை-625 002 போன் : 30160 (அலு) ● சேலம் மாவட்டத்திற்கு : திரு என். கே. இங்கர்சால், 155, கவர்னரும்பிகை தெரு. அன்னதானப்பட்டி, சேலம்-636 002. போன்-64302 (வீடு) ● தஞ்சை மாவட்டத்திற்கு : திரு கே. முத்துசாமி, 52-ஏ, வ. உ. சி. நகர், தஞ்சை-613 007. போன்-1224 (வீடு) ● நெல்லை மற்றும் குமரி மாவட்டங்களுக்கு : திரு எம். எம். காஜா, பாக்காளி பில்டிங் அனெக்ஸ், 41-B, திருவனந்தபுரம் ரோடுஞ்சாலை, எல். ஐ. சி. அருகில், பாளையங்கோட்டை-627 002. போன்-4520 (அலு) 5395 (வீடு)



மாலைப் பூக்கும் மலர்கள்

சிவசங்கரி

8

முதல் வகுப்பு.

கூபே.

கூடவே ஓடிவரும் தந்திக் கம்பங்கள்.

முழங்கை வரை வெள்ளையாய் வளையல்கள் அணிந்து சிவப்பு குட்டைப் பாவாடையும் சிரிப்புமாய் நின்று ஓடும் வண்டிக்குக் கள்ள மில்லாமல் கை ஆட்டும் மத்தியப் பிரதேசத் துப் பெண்கள்.

ஜன்னல் அருகில் அமர்ந்து வேடிக்கை பார்த்த கௌரிக்குத் திடுமெனப் பக்கத்துக் கம்பார்ட்மெண்ட் பெண்மணி சற்று முன் கேட்ட கேள்வி ஞாபகத்துக்கு வர, பக் கென்று சிரிப்பு எழுந்தது.

இரண்டு குழந்தைகளுடன் பக்கத்துப் பெட்டிக்குள் ஏறிக்கொண்ட தம்பதியை நேற்றே அவள் கவனித்து விட்டாள்.

ஆணுக்கு முப்பத்தைந்து வயதும், பெண் ணுக்கு முப்பது வயதும் இருக்கலாம்.

மூத்தது பெண் குழந்தை...

நாலு வயது இருக்குமா?

ம்ம்... இருக்கும்...

கைக் குழந்தை — ஆணு, பெண்ணு என்று தெரியவில்லை.

வண்டி புறப்பட்டானதும் காற்று வரட் டும் என்று கதவைத் திறந்து வைத்துக் கொண்டு, கொஞ்ச நேரம் படித்து, கொஞ்ச நேரம் பேசி, சிரித்து, கௌரியும், பாலாஜியும் சீட்டு ஆடியபோது, அந்தப் பெண் குழந்தை அடிக்கடி எட்டிப் பார்த்துச் சிரித்தது.

''இந்தா'' என்று பிஸ்கெட் பொட்டலம் ஒன்றை நீட்டியதை வாங்கிக் கொண்டு மழலை யில் 'தாங்க்ஸ்' சொல்லி ஓட்டம் பிடித்தது.

'சுமி, வா இங்கே'—என்று குரல் கொடுத்த படி ஒரிரு முறைகள் வந்து பெண் கையைப் பற்றிக் கொண்டு போனபோது அந்தப் பெண் மணி கௌரியைப் பார்த்துப் புன்னகைத் தாள்.

நேற்று இதோடு சரி...

காலையில் எழுந்து ஹவுஸ் கோட்டுடன் கௌரி இப்படி அப்படி காரிடாரில் நடந்த போதும் இதே சிரிப்புத்தான்...

ஆனால் ஒரு சமயம் குளியல் அறைக்குச் சென்று வருகையில் எதிரில் அந்தப் பெண் மணி வந்து நின்றாள்.

''ஹலோ''—

''ஹலோ...''—

''டெல்லியா?''—

''ம்ஹூம் இல்லே; ஆக்ரா.''

''ஓஹோ? ஹனிமூனுக்கும்....''

நமட்டாய்ச் சிரித்துக் கொண்டு அந்தப் பெண்மணி வினவ, கௌரி விழித்தாள்.

''ஹனிமூன் போறவங்களைப் பார்த்தாலே தெரிஞ்சிடுமே! முகத்தில் அலாதியா புதுசா கல்யாணமானவங்கன்னு எழுதி ஒட்டியிருக் குமே! நேத்திக்கு உங்க சிரிப்பையும், கல கலப்பையும் கேட்ட உடனேயே நான் எங்க வீட்டுக்காரர் கிட்டச் சொல்லிட்டேன் — இவங்க புதுசாக்கல்யாணம் ஆனவங்கன்னு.''

சகலமும் தெரிந்த மாதிரி அந்தப் பெண் பேசிக் கொண்டே போக, கௌரியின் காது மடல்கள் சூடேறிப் போயின. சட்டென்று கன்னத்தில் ஒரு சிவப்பு ஏறுவதைப் புரிந்து கொள்ள முடிந்தது. சின்னச் சிரிப்புடன் அடி உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

''நான்வெளிப்படையாக்கேட்டுட்டேன்னு வெட்கப்படறீங்களா? இதெல்லாம் ஒரு காலம்... போனா திரும்ப வராது... நாங் களும் எல்லாத்தையும் அனுபவிச்சவங்கதான். அது நடந்து ஆயிடுச்சு வருஷம் அஞ்சு...''

ரொம்ப வயசு ஆன தினுசில் அவள் பேசிக் கொண்டே போக, சிரமப்பட்டுச் சிரிப்பை அடக்கி இனியும் இவளிடம் பேச்சுக் கொடுப்பது நடக்காத சமாசாரம் என்பதால் 'நான் வரேன்' என்று சொல்லி நகர்ந்த கௌரி தங்கள் பெட்டிக்கு வந்ததும் வயிற் றைப் பிடித்துக் கொண்டு 'வாட் எ ஜோக்' என்று சொல்லிப் பெரிசாய்ச் சிரிக்க, பாலாஜி விழித்தான்



''என்ன ஜோக்! எனக்கும் சொல்லிட்டுச் சிரிக்கிறது.''

''பா...லா... அந்த லேடி நம்பளை... ஓ......ஹ்....''

''அட எதுக்கு இத்தனை சிரிப்பும்மா?''

''அவுங்க... நம்பளை ஹனிமூனிங் கப்பில்னு நினைச்சுட்டாங்க பாலா...ஆ... ..''

விஷயத்தை உருப்படியாய்க் கூற முடியாமல் சிரிப்பு பொத்துக் கொண்டு எழ, எப்படியோ, திணறி, விழுங்கிச் சொல்லி முடித்ததும் பாலாஜி பெருமையுடன் புன்னகைத்தான்.

''அடி சக்கை! அப்ப நீயும் நானும் அவ்வளவு இளமையா இருக்கோம்னு சொல்லு.''

''ஆஹா... ரொம்பப் பெருமைதான் போங்க... என்ன பாலா நீங்க! அத்தனை கெக்கே பிக்கேன்னு காணாததைக் கண்ட மாதிரி நடந்திருக்கோம்னு ஏன் நினைக்க மாட்டேங்கறீங்க? அவங்க அப்படிக் கேட்டதும் எனக்கு வெட்கமாப் போச்சு...வாயே திறக்கலே. தொடர்ந்து துருவி ஏதாவது கேட்டுடு வாங்களோன்னு ஓட்டமா ஓடி வந்துட்டேன்.''

''நான் அப்படி நினைக்கல்லே கௌரி, மனசு பூரா காதல் இருக்கறதாலே, நாம மத்தவங்க கண்ணுக்கு இளமையாத் தெரியறோம். இன் ஃபாக்ட் இதை நினைச்சுக் கண்டிப்பா நாம பெருமைப்படணும்...''

''அவங்களுக்கு என் வயசுதான் இருக்குமோ, இல்லே என்னை விடச் சின்னவங்களா இருப்பாங்களோ, தெரியலே... நாத்துக் கிழவி மாதிரி 'நாங்களும் தேனிலவுக்குப் போயிருக்கோம்; ஆனா அது அஞ்சு வருஷம் முன்னாலே'னு யுகம் போயிட்ட மாதிரிப் பேசினதும் என்னாலே சிரிப்பை அடக்கவே முடியலே. நமக்குக் கல்யாணமாகி ஏழு வருஷம் ஆச்சுன்னு சொல்லி, அவங்க முகம் போற போக்கைப் பார்க்கணும்னு ஒரு நிமிஷம் ஆசையாக்கூட இருந்...''

பாலாஜியின் சட்டைப் பட்டனைத் திருகிய படி, சிரிப்புக் குறையாமல் கௌரி பேசிக்

கொண்டிருக்கையிலேயே ''ஆரஞ்சு சாப்பிட றீங்களா? நாக்பூரில வாங்....'' பேசிய வண்ணம் உள்ளே நுழைந்த பக்கத்துப் பெட்டிப் பெண்மணி இவர்கள் நெருக்கமாக அமர்ந்திருப்பதைப் பார்த்து முதலில் பதறி, பின் அசடு வழிந்து, 'ஸாரி, ஸாரி' என்று சொல்லிப் பின்வாங்க...

இந்த ஆக்ரா பயணம் கௌரி சற்றும் எதிர்பார்க்காத ஒன்று.

ஒரு வாரம் இருக்கும்,

நர்ஸிங் ஹோமிலிருந்து வீடு திரும்பிய பாலாஜியின் கையில் ஒரு காகித உறை.

''என்ன சொல்லு பார்க்கலாம்?''

''ம்? ஸபையர் தியேட்டர் டிக்கெட்ஸ்...''

''ம்ஹூம்.''

''ம்யூஸிக் அகாடமிலே ரஷ்யன், பாலே பார்க்க இன்விடேஷன்?''

''ம்ஹூம்.''

''அ... லலித்கலா அகாடமிலே ஆர்ட் எக்ஸிபிஷன் விவரம்''—

''இல்லே.''

''உங்க கிட்ட யாரோ கடன் வாங்கித் திருப்பிக் கொடுத்த பணம்?''—

''இல்லே.''

''சொல்லுங்க, என்ன சஸ்பென்ஸ்.''

''நீ கொஞ்சம் கூட எதிர்பார்க்காத சமாசாரமா இருந்தா, எனக்கு என்ன தரே?''

''என்ன வேணும்?''—

புகைப்படப் பொக்கிஷம்

நீங்கள் பொக்கிஷமாகப் பார்த்து காக்கும் புகைப்படம் ஏதேனும் ஒன்று நிச்சயம் இருக்குமே? அதை எதனால் மதித்துப் போற்றுகிறீர்கள் என்பதை ரத்தினச் சுருக்கமாக எழுதி அத்துடன் அந்தப் புகைப்படத்தையும் அனுப்புங்களேன். ரசமாக அமைந்து பிரசுரமானால் பரிசு ரூ. 25.

ஏற்கப் படாதனவற்றைத் திரும்பப் பெற போதிய தபால் தலைகள் இணைத்து அனுப்புதல் வேண்டும். உறையின் மேல் 'புகைப்படப் பொக்கிஷம்' என்று குறிப்பிடவும். **முடிவு தேதி அக்டோபர் 20.** தபாலில் அனுப்புகையில் காணாது போனாலோ மடிந்து பாழானாலோ கல்கி நிறுவனம் பொறுப்பேற்பதற்கில்லை. கடிதப் போக்குவரத்து கிடையாது.

கல்கி 20-11-83 புகைப்படச் சிறப்பிதழ்

''கேட்கறதைத் தரணும்...''

''தரேன்—அதுக்காக அடாவடியா கேட்கக் கூடாது....''

''அதெல்லாம் தெரியாதும்மா, நீ சரின்னு சொல்லிட்டே..இங்க பாரு...டட்டடாண்!''

ஆக்ரா செல்ல இரண்டு முதல் வகுப்பு டிக்கெட்டுகள்.

''யாருக்கு பாலா?''

''ம்? நம்ம வீட்டு ஆயாக்கும் அவ புருஷனுக்கும்...''

''என்ன பாலா?''—

''பின்னே யாருக்கு வாங்குவேன்? உனக்கும் எனக்கும்தான்!''

கண்களை அகல விரித்தவளின் இடுப்பை வளைத்து அருகில் இழுத்தான்.

''நம்ப முடியலையா? நாமதான் போறோம் டார்லிங்.''

''எப்ப?''

''அடுத்த வாரம்.''—

''அடுத்தவாரமா? மை குட்னஸ்... இன்னும் எண்ணி அஞ்சு நாள் கூட இல்லே... ஆமா, நர்ஸிங் ஹோமை விட்டுட்டு நீங்க வரமுடியுமா?''—

''ஒரு மாசமா போகப் போறேன்? ஒரே ஒரு வாரம்தானே! மூணு வாரத்துக்கு முன்னாலேயே பிளான் பண்ணிட்டதுல அடுத்த வாரம்ஜயா ஃப்ரீதான். ஸீனியரும் ஜமாய்டான்னு க்ரீன் ஸிக்னல் கொடுத்திட்டார்.''—

''அப்ப, எனக்குத் தெரியாம, என் முதுகுக்குப் பின்னாடியே இத்தனை ஏற்பாடும் பண்ணி இருக்கீங்க?''—

''உனக்கு ஒரு ப்ளெஸன்ட் ஸர்ப்ரைஸ் கொடுக்கணும்னுதான்... எப்படி? க்ரேட் இல்லே? வர்ற பௌர்ணமிக்கு தாஜ்மஹால் முன்னால இருப்போம். ஹவ் டு யு லைக் இட்?''—

சென்ற பௌர்ணமிக்குத் தன்னை ஏமாற்றியதற்குச் சேர்த்து வைத்து இப்படி ஒரு அருமையான ஏற்பாட்டை பாலாஜி செய்திருப்பது புரிய, ஹ்ருதயம் தம் தம் மென்று தலைகால் புரியாமல் குதிக்க, அவன் கரத்தை கௌரி கன்னத்தில் வைத்துக் கொண்டாள்.

ஆக்ரா ஸ்டேஷனில் இறங்கி, டாக்ஸி ஒன்றை இரண்டு நாட்களுக்கு அமர்த்திக் கொண்டு ஹோட்டலுக்குப் போனார்கள்.

குளித்துத் தயாராகி, முதலில் பதேபூர் சிக்ரிக்குச் சென்றார்கள்.

செப்புக் கற்களால் நுணுக்கமான வேலைப் பாடுகளைக் கொண்ட பிரும்மாண்டமான கோட்டையை அவசரப்படாமல் நின்று, நிதானமாய்ச் சுற்றிப் பார்த்தார்கள்.

அக்பருக்குக் குழந்தை வரத்தைத் தந்த சலீம் சிஷ்டியின் சமாதி முன் மரியாதையுடன் நின்று வணக்கம் செலுத்தினார்கள்.

நிலாக் காலங்களில் தண்ணீர் சூழ்ந்த முற்றத்தில் வித்வான்கள் சூழ அமர்ந்து சங்கீதக் கச்சேரிகளை அக்பர் அனுபவித்ததைக் கற்பனை பண்ணி 'ஹா என்ன ரசனை?' என்று அதிசயித்தார்கள்.

தரையில் மிகப் பெரிய அளவில் இழைக்கப்பட்டு, காய்களுக்குப் பதிலாக அடிமைப் பெண்களைக் கட்டங்களில் நிறுத்தி வைத்து

உப்பரிகையிலிருந்து அரச வம்சத்தினர் சதுரங்கம் ஆடிய பலகை மேல் நடந்து, நின்று, அந்தக் காட்சியை நினைத்துப் பார்க்க முயன்றார்கள்.

மாலையில் ஹோட்டலுக்குத் திரும்பி வந்து கொஞ்சம் படுத்து, களைப்பாறிவிட்டு இரவு, தயாராகி, தாஜ்மஹாலைப் பார்க்கப் போனார்கள்.

மேகமே இல்லாத ஆகாயம், தங்கக் காசாக முழு நிலா. வெள்ளை வெளேரென்று ஆகாசத்துக்கும் பூமிக்குமாய் நின்று வெள்ளியாய் ஜொலித்த தாஜ்மஹால், அதன் பிம்பத்தைக் காட்டும் அமைதியான யமுனை.

ஒரு வார்த்தை கூடப் பேசத் தெரியாதவர்களாய்ப் பிரமித்து, சிலிர்த்து, புல்வெளியில் அமர்ந்து இருவரும் அந்தச் சுகமான அனுபவத்தில் கரைந்தார்கள்.

அவள் மடியில் தலை வைத்துப் படுத்த பாலாஜி—

''சந்திர ஒளியில் அவளைக் கண்டேன்
சரணம் என்றே புகுந்து கொண்டேன்
....
பயனென்றுமல் உழைக்கச் சொன்னாள்,
பக்தி செய்து பிழைக்கச் சொன்னாள்,
துயரில்லாதெனைச் செய்து விட்டாள்,
துன்ப மென்பதைக் கொய்து விட்டாள்''

என்று தன் கரகரப்பான குரலில் மென்மையாகப் பாட, கௌரியின் கண்களில் நீர் பொட்டாகத் துளிர்த்தது. குனிந்து அவன் நெற்றியில் முத்தமிட்டாள்.

''பாலா... என் பாலா...'' என்று சன்னமாய் அரற்றினாள்.

மறுநாள் பூராவும் நடந்தே கடைத்தெருக்களைச் சுற்றி வந்தார்கள்.

வெல்வெட் துணிகளில் பாசி மணிகளையும், சம்கிகளையும் நிமிஷத்தில் தைத்து அழகழகான பொருட்களை உருவாக்குவதைக் கிட்ட நின்று வேடிக்கை பார்த்தார்கள்.

சலவைக் கற்களில் மணிகளைப் புதைத்து இழைத்து, வெட்டி, சின்னப் பெட்டிகள், தட்டுகள் செய்யப்படும் இடத்திற்குச் சென்று ஆர்வத்துடன் கவனித்தார்கள்.

மாலையில் மீண்டும் ஒரு தரம் தாஜ் மகாலுக்குச் சென்று வந்து, இரவு ரொம்ப நேரத்துக்குக் கையோடு கொணர்ந்திருந்த ஸ்க்ராப்ல்ஸ் ஆட்டத்தை ஆடிக்கொண்டிருந்துவிட்டு, உறங்கிப் போனார்கள்.

விடிகாலை நாலு மணி இருக்கும்.

யாரோ உலுக்கி எழுப்பி விட்ட மாதிரி கௌரி எழுந்து உட்கார்ந்து கொண்டாள். தண்ணீர் குடித்து, மறுபடியும் தூங்க முயன்று முடியாமல் போக, சில நிமிஷங்களுக்கு அப்படியே இருட்டில் அமர்ந்து யோசனை செய்தாள்.

எழுந்து பால்கனிக் கதவைத் திறந்து-கொண்டு வெளியில் வந்து நிலாவில் நின்றாள்.

அப்புறம் ஒரு முடிவுக்கு வந்துவிட்ட தினுசில் உள்ளே வந்து பாலாஜியின் தோளை லேசாக அசைத்து அவனை எழுப்பினாள்; கேட்டாள்.

''நாம ஏன் ஒரு குழந்தையைத் தத்து எடுத்துக்கக் கூடாது பாலா?''

(தொடரும்)

எந்தத் தலைப்பு யாருடையது? போட்டி-முடிவு

சரியான விடை:

(1) ஜே. எஸ். ராகவன் — சியன்னு, ஜயன்னு, ஏயன்னு

(2) அன்னம் — ஆசிரியர் படித்த பாடம்

(3) ஜெயராதன் — எரிச்சல்

அறிவித்த போட்டிகளுள் இதுதான் மிகவும் எளிதானது போலும். மொத்தம் 244 வாசகர்கள் சரியான விடைகளை எழுதியிருந்தனர். அவர்களுள் பின்வரும் பத்துப் பேர் குலுக்கல் முறையில் பரிசு பெற்று ரூ. 300 பரிசுத் தொகையைப் பகிர்ந்து கொள்கின்றனர்:

(1) எஸ். அமுத செல்வதுரை
143, வேங்கடநகர்,
4வது கிராஸ் ரோடு,
பாண்டிச்சேரி-605.011.

(2) டி. பாரதி,
15 ஸ்ரீ வேங்கடேஸ்வர நகர்
அம்பத்தூர், சென்னை-600.053.

(3) இரா. மு. இராமலிங்கம்,
நடுத்தெரு,
மொரவச்சேரி,
சிக்கல் போஸ்டு
நாகப்பட்டினம் (வட்டம்)

(4) திருமதி ஸாரதி,
B-10-B, மெயின் காலனி
வால்சந்த் நகர்,
பூனா (மா. வ.) 413.114.

(5) தெ. அண்ணாசாமி,
2/11, சிவன்கோவில் தெரு,
தலைவாசல் (அஞ்சல்)
சேலம் மா. வ.-636.112.

(6) கே. ராஜலக்ஷ்மி,
9, 2வது பாரதியார் தெரு
பழவந்தாங்கல்,
சென்னை-600.061.

(7) வி. உமார்த்தி,
137, ராமலிங்கம் காலனி,
கோயமுத்தூர்-641.043.

(8) பி. பாபு,
25, அண்ணாநகர்,
ஹரித்ராநதி (போஸ்டு)
மன்னார்குடி, தஞ்சை மா. வ.

(9) என். கண்ணன்,
மே-பா, பி. நயினார் தேவர்,
காராயிருப்பு,
திருநெல்வேலி-627.357.

(10) நெல்லை சுவாதி,
15, தெற்கு கே. ஆர். கோயில் தெரு.
மேற்கு மாம்பலம்,
சென்னை-600.033.



பாக்யராஜ்



ரகுமான்



கபில்தேவ்

○ ?நடராமணி ஜகதீஸ், திருச்சி

? பம்பாய் நீதிமன்றத்தில் சாட்சிக் கூண்டில் இருந்த எதிரி சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து...

! அவன் தரும் சாட்சியம் வேறு சில கள்ளக் கடத்தல் பெரும் புள்ளிகளைச் சிக்கலில் மாட்டி வைத்து விடும் என்பதால் நடந்த கொலை. கள்ளக் கடத்தல் மிகவும் ஆபத்தான தொழிலான போதிலும் அதிக லாபம் தருவதால் வர்த்தகக் கட்டுப்பாடுகள் மிகுந்த இந்தியாவில் கொழிக்கிறது.

○ அ. கல்குல் ஜமால், திருமங்கலக்குடி

? இருவர் தொடர்கதை எழுதும் முயற்சி குமுதத்தில் தோல்வி யடைந்தும் குங்குமம் அதே முயற்சியில் ஈடுபடுவது ஏன்?

! குமுதம் முயற்சி தோல்வி என்று எந்த அடிப்படையில் தீர்மானித்தீர்? குங்குமம் வெற்றி பெறுது என்று எந்த அடிப்படையில் கருதுகிறீர்? பார்க்கப்போனால் இதுபோன்ற உளவாக்காட்டிக் காரியங்களில் வெற்றியாவது தோல்வியாவது வெறும் ஜாலிதான்!

○ ஜேபி, வேலாயுதபாளையம்

? ஜனதாவுடன் இணைவது குமரி அனந்தனுக்கு நல்லதா? ஜனதாவுக்கு நல்லதா? அரசியலுக்கு நல்லதா??

! ஜனநாயகத்துக்கு நல்லது. நாடு தழுவிய நோக்கில் இரு கட்சிகள் இருந்தாலே போதும். மற்றவை இவற்றுடன் இணைந்துவிட வேண்டும்.

○ எம். ராஜேந்திரன், லால்குடி

? இலங்கைத் தமிழர் பிரச்னையை முன்வைத்து கருணாநிதி அரசியல் லாபம் தேடப் பார்க்கிறார் என்று ஸ்டீபன் சொல்கிறாரே?

! இவ்விஷயத்தில் தாம் நடந்து கொண்ட விதத்தால் கருணாநிதி அரசியல் லாபம் அல்ல; நஷ்டம் தான் அடைந்திருக்கிறார். இவருக்கு நஷ்டம் ஏற்பட்டாலும் ஈழத் தமிழருக்காவது ஏதாவது லாபம் ஏற்பட்டிருக்கிறதா என்றால் அதுவும் இல்லை.

○ ஆ. சந்திரசேகரன், லால்குடி

? பாகிஸ்தான் கிரிக்கெட் அணியைக் கௌரவிக்க நடைபெற்ற வரவேற்பில் இந்திய அணி கலந்துகொள்ளாதது குறித்து....?

அந்த வரவேற்பு விருந்துக்கு இந்தியக் கிரிக்கெட் அணியினருக்கு மிகவும் கால தாமதமாக அழைப்புக் கிடைத்திருக்கிறது. ஏதோ கடைசி விநாடியில் நினைத்துக் கொண்டு, போனால் போகட்டும் என்பது போல் அனுப்பப்பட்ட அழைப்பை கபில்தேவ் நாசுக்காக ஏற்காமலிருந்தது சரியே.

○ விமலா வித்யா, நாமக்கல்

? ருஷ்ய எல்லைக்குள் ஊடுருவிய விமானத்தைச் சுட்டு வீழ்த்தியது எந்த விதத்தில் தவறு? அந்நிய எல்லைக்குள் பறக்க அனுமதி வேண்டுமல்லவா?

! அனுமதி வேண்டும் என்பது சரி; ஆனால் அந்தப் பயணிகள் விமானம் திசை தப்பி ரஷ்ய எல்லைக்குள் ஊடுருவி இருக்கலாம் என்று கருதுவதிலும் தவறில்லை. ஏறத்தாழ இதே நேரத்தில் ஓர் அமெரிக்க உளவு விமானம் ருஷ்ய எல்லைக்குள் பறந்து திரும்பியது என்பது சரி. ஆனால் இந்தக் கொரிய விமானத்தை அந்த உளவு விமானம் எனத் தவறாகக் கருதி விட்டதாக எண்ணுவதற்கில்லை. கொரிய விமானம் எதிர்த் தாக்குதல் ஏதும் நடத்தாத போது அதனைச் சுட்டு வீழ்த்தாமல் ருஷ்ய விமானத் தளமொன்றில் இறங்கச் செய்வதில் ருஷ்யப் போர் விமானங்கள் வெற்றி பெற்றிருக்க முடியும். அவசரப்பட்டுவிட்டார்கள். சில ராணுவ ரகசியங்களை விட 269 மனித உயிர்கள் மேலானவை.

○ எஸ். அன்புமணி, ஈரோடு

? முந்தானை முடிக்க பற்றி வாசகர் கேள்விக்கு நீங்கள் அளித்துள்ள பதில் ஏற்கத்தக்கதல்ல. ஏனெனில், நிறுவனம் சமீபத்தில் செக்ஸ் இல்லாமல் எந்த நல்ல படம் எடுத்து அது வெற்றி பெறாமல் போய்விட்டது?

! அம்மா.

○ முல்லை அழகான், முல்லைக்காரன்பட்டி

? பாக்கியராஜ் இனி செய்ய வேண்டியது என்ன?

! பிரபலமடைய திரைப் படங்கள் எடுத்தாச் விட்டது. பெயர் நிலைக்க இனி எடுக்க வேண்டும்.

○ எஸ். ருக்மிணி, சென்னை5-

? இலங்கைப் பிரச்னை பற்றி பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் விவாதிக்க அமிர்தலிங்கம் சென்றுள்ளது அவசியம்தானா?

! அவசியமே. பிரிட்டன் இலங்கை அரசு மீது தார்மீகச்செல்வாக்கைப்பயன்படுத்த முடியும். ஈழத்

கருணாநிதி அரசியல்

தமிழருக்கு நல்லதுசெய்ய இயலும்.

○ எஸ்.வி. ராஜசேகர் சென்னை5
? எழுத்தாளர் என்ற பெயரை நீக்கி விட்டுப் பார்த்தால் சுஜாதா எப்படித் தெரிகிறார்?
! சிறந்த விஞ்ஞானியாக.

○ சே. புகழேந்தி, பழனி
? நாடு முன்னேற்றப்பாதையை நோக்கிச் செல்கிறது என்று எதைப்பார்த்தாவது எண்ணியது உண்டா?
! விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தக் கோரி மகாராஷ்டிர மாதர் முன்னணியைச் சேர்ந்த ஐம்பது பெண்கள் அம் மாநில அரசின் தலைமைச் செயலகத்துக்கு முன்னே கூடி ''ஆர்ப்பாட்டம்'' செய்தனர். எப்படித் தெரியுமா? பாட்டுப் பாடினர்; பஜனை நிகழ்த்தினர். பக்க வாத்தியமாகச் சில பெண்கள் தகர டப்பாக்களைத்தட்டினர். அத்தியாவசியப்பண்டங்களின்விலை வாசிகளைக் குறைப்பதில் முன்னேற்றம் ஏற்படாவிட்டாலும் எதிர்ப்புத் தெரிவிக்கப் புது முறை களைக்கையாள்வதில் கணிசமானமுன்னேற்றம்இருக்கத்தானே செய்கிறது!

○ சிவராமன், காட்டுமன்னார்கோயில்
? ரஞ்சன் பற்றிய நினைவுகள்..?
! மங்கம்மா சபதம் பார்க்கக் கூடாதென்று அப்பா தடை விதித்தது; சந்திரலேகா பார்த்துப் பிரமித்தது; மூங்கிலில் போர்வாள் சிவித் தயாரித்து ரஞ்சனாகவே என்னை எண்ணிக்கொண்டது; அபூர்வ சகோதரர்களில் எம்.கே. ராதா நடிப்பா, நிஷானில் ரஞ்சன் நடிப்பா, எது உசத்தி என்ற விவாதம்; ஹிந்திப் படத்துக்கு ரஞ்சனைப் பயன்படுத்திய வாசன் சாமர்த்தியம்...

○ என். சக்திவேல், பழனி
? சமீபத்தில் உங்கள் இதயத்தை உலுக்கிய நிகழ்ச்சி?
! ஏ. கே. செட்டியார் மறைவு. சில பழைய தலைமுறை எழுத்தாளர்கள் இன்றைய எழுத்தாளர்களை இவர்களுக்கு என்ன தெரியும் என்பது போல் துச்சமாக மதிப்பார்கள். ஏ.கே. செட்டியார் விதிவிலக்கு. என்னைச் சந்திக்க நேரும்போதெல்லாம் இளம் எழுத்தாளர்கள் பலர் எழுதிய நல்ல கட்டுரைகளை சிலாகித்துப் பேசுவார். குமரி மலர் பத்திரிகையை ஒரு வேள்வி போல் நடத்தி வந்தார். வெளி நாடுகள் பற்றி எழுதியது போல் இங்குள்ள குடகு தரங்கம்பாடி குறித்தும் அதே அளவு சிரத்தையுடன் எழுதுவார். காந்தி படத்தைத் தயாரித்ததற்கு அடுத்தபடியாகச் சிறந்த பணி, ''கொய்த மலர்கள்'' 'பண்பு'' ஆகிய புத்தகங்களை எழுதி டி.வி.எஸ். உதவியுடன் பள்ளி மாணவர்களுக்கு இலவசமாக வழங்கியது. தமிழ் எழுத்தாளர் சங்கம் கேடயம் வழங்கி கௌரவிக்க முன்வந்தபோது மறுதளித்ததும்ஒருபுகைப் படம் கூட எடுத்துக் கொள்ளாததும் அவரது அடக்கத்துக்குச் சான்றுகள்.

○ எம். சிவஞான முருகன், ஸ்ரீவைகுண்டம்.
? துர்வாசர் கட்டுரையின் பயனால் பத்திரிகைகள் போக்கு மாறியுள்ளதா?
! டி-டி-டி. அடித்ததால் கொசுத் தொல்லை ஒழிந்ததா? மைஸின் மருந்துகளால் நோய்த் தொல்லை குறைந்ததா? மருந்துகளை விழுங்கியே கிருமிகள் வளரும்போது, துர்வாசர் கட்டுரைகள் சில எழுத்தாளர்களுக்கும் பத்திரிகை ஆசிரியர்களுக்கும் தாதுபுஷ்டிலேகியமாகவே பயன்பட்டிருப்பதில் வியப்பில்லை!

○ கே. ராஜகோபாலன், விருகம்பாக்கம் ★
? செயற்கை மழையாளர்களை இயற்கை மழை அகால வேளையில் வந்தே ஏமாற்றி விட்டதே?
! ஏமாற்றி விட்டதாவது சரியாப் போச்சு! எக்களிப்பில் ஆழ்த்தி விட்டது என்று சொல்லுங்கள். இயற்கை மழை பெய்தாலும் இங்கே செயற்கை மழைக்குச் செலவிடப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. வருடம் முழுவதும் செயற்கை மழைக்குத் தமிழக அரசு ஏற்பாடு செய்யப் போகிறது. யார் காட்டிலோ கனத்த ''மழை'' எக்கச் சக்கமாகக் கொட்டப் போகிறது! நமது அரசியல் வாதிகளின் சாமர்த்தியத்துக்குக் கேட்கவா வேண்டும்!

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:
கே. ராஜகோபாலன்
11. ராஜாஜி காலனி,
விருகம்பாக்கம்,
சென்னை-600.092


கருணாநிதி


குமரி அனந்தன்

நீங்கள் கேட்டவை
தராசு

எப்படித் தெரிகிறார்?

1. பெ. சு. தியாகராஜன் அருப்புக்கோட்டை 2. ப. மூர்த்தி பெங்களூர் 3. லலிதா வெங்கடேஷ் சென்னை 4. ரா. ஜோதிராமன் நெல்லிக்குப்பம் 5. கோ. பாபு சின்னசேலம் 6. வி. ஜெயவேலு அத்திமலைப்பட்டு 7. சங்கை ஜெ. ராஜ்குமார் சங்கராபுரம் 8. எம். அசோக்ராஜா அரவக்குறிச்சிப்பட்டி 9. வி. ச. வாசுதேவன் பம்மல் 10. முகம்மது இப்ராஹிம் குளச்சல் 11. நேசன் பழவந்தாங்கல் 12. வி. எஸ். சுதர்ஸனம் தஞ்சாவூர்



1 ஜி. பார்த்தசாரதி அவர்களின் பணிகளின் -திறனைச் சிந்தித்துத் தூர திருஷ்டிக் கண்ணாடி போல் காட்டியது கட்டுரை.

2 ''புதையலைத் தேடுங்கள்'' என்று கல்கி இதழின் முதல் பக்கத்திலிருந்து கடைசிப் பக்கம் வரையிலுமா தேட வைப்பது?–தேவை ஒரு பூதக் கண்ணாடி.

3 மாலையில் பூக்கும் மலர்கள் - விரசமில்லாமல் ஆழமான காதலை இத்தனை அழகாய் வெளிப்படுத்த முடியுமா? பிரமிப்பாக இருக்கிறது.

4 வைரமுத்துவின் வேண்டுகோளுக்கிணங்கி வளரும் கவிஞர்களுக்கு வாய்ப்பளிக்கின்ற வகையில் வாரம் ஒரு பக்கத்தை ஒதுக்கியதற்கு நன்றி!

5 விண்ணை எட்டிவிட்ட விலைவாசி, ஆபாச சினிமா, பத்திரிகை, லாட்டரி இவைகளின் மீது மக்களின் மோகம், அரசியல்வாதிகளின் பித்தலாட்டம் முதலியவற்றினால் தங்களுக்கு ஏற்பட்ட விரக்தி தலையங்கத்தில் தெளிவாகத் தெரிந்தது.

6 கமலின் பதில்கள் சுருக்கமாகவும், சுவையுடனும் இருந்தன.

7 வெந்துவிட்ட மனத்தினை
நொந்துவிட்ட கரத்தினால்
வடித்து வார்த்த
கொம்பன் வசந்தபாரதியின்
கவிதைக்கு
''தும்பி என் வணக்கங்கள்''

8 மீண்டும் மீரா சிறுகதையைப் படித்ததும் மனத்தில் ஒரு நிறைவும், நிம்மதியும் ஏற்பட்டது.

9 இசைத் தமிழுக்கு ஸ்ரீமதி எம். எஸ். அவர்கள் எவ்வளவோ செய்திருக்கிறார். ஆனால் அதற்கெல்லாம் எவரெஸ்ட் போல் சிகரமாக அவரது 'மதுரத் தடாக' பாரதி பாடல் எல். பி. கம்பீரமாக ஒலித்துக் கொண்டிருக்கும் என்பது தெளிவு.

10 செப்டம்பர் மாதத்தில் நினைவு விழா கொண்டாட வேண்டிய மறைந்த மாபெரும் தலைவர்களுக்குப் பதிலாக இன்றைய சினிமா நடிக நடிகைகளுக்கும் மஞ்சள் பத்திரிகை ஆசிரியர்களுக்கும் விழாக் கொண்டாடலாம் என்று நீங்கள் வேதனையோடு தலையங்கத்தில் குறிப்பிட்டிருப்பதுஎன்நெஞ்சைத்தொட்டது.

11 செப்டம்பரில் நமது நினைவுக்கு வரக்கூடிய பெரிய மனிதர்களின் பட்டியலைத் தலையங்கத்தில் தந்துள்ளீர்கள். சமுதாய ஏற்றத் தாழ்வுகள் மறையத் தம் வாழ்நாள் முழுதும் அயராது பாடுபட்ட பெரியார் ஈ. வெ. ரா. பிறந்ததும் செப்டம்பரில்தான். அவர் பெயரை விட்டு விட்டீர்களே!

[தலையங்கத்தில் குறிப்பிடாமல் விடப்பட்டவர்களின் நீண்ட பட்டியலை அனுப்பியிருக்கிறார் பெங்களூர் எம். நவீன். நன்றி. ஆனால் தலையங்கம் ஒரு கருத்தைச் சொல்ல எழுதப்படுகிறதே தவிர பட்டியலைப் பூர்த்தி செய்வதற்கல்ல. -ஆசிரியர்]

12 ''தஞ்சைத் தரணியிலே'' கட்டுரை படித்தேன். என்போன்ற தஞ்சைவாசிகள் அல்லல் படுவதைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார் அன்பர் தஞ்சை ராஜன்.

விட்டுப் போனவை: வலுவிழந்த மேம்பாலம் வழியாக லாரி பஸ் போன்ற கனவாகனங்கள் (Heavy vehicles) போகக் கூடாது என்ற எச்சரிக்கை போர்டு இருந்தும் அதை அடிக்கடி மீறுபவர்கள் திருவள்ளுவர் போக்கு வரத்து பயணிகள் வண்டி ஓட்டுனரும், லாரி ஓட்டுனரும் தான். இவர்களைத் தட்டிக் கேட்க ஆளில்லையா? முத்துக்குமார மூப்பனார் ரோடு, சீனிவாசம் பிள்ளை ரோடுகளில் லாரிகளைப் போக்கு வரத்துக்கு இடையூறாக நிறுத்திப் பழுது பார்க்க பாதி ரோடை 'ஒர்க்ஷாப்'பாக மாற்றிக் கொள்கிறார்கள். போலீஸாரும் இதைப் பார்க்காதது போல் இருக்கிறது.

பெரியாரை மறக்கலாமா?

சந்தித்தார்கள்

இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்கின் சேர்மன் திரு. சீனிவாஸ், எழுத்தாளர் ஹேமா ஆனந்த தீர்த்தன் இருவரும் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள். இந்த முன்னாள் கிளாஸ்மேட்கள் சந்தித்துக் கொண்ட போது...

இடம்: ஐ. ஓ. பி. மத்திய அலுவலகம்.
நேரம்: மாலை சுமார் மூன்று மணி.

''வாங்க... வாங்க... ஆனந்த தீர்த்தன்!''

''குட் ஈவினிங். சௌக்யம்தானே?''

''ம்... என்ன? ஜாலியா ரிடையர்டு லைபை என்ஜாய் பண்ணறீங்க போல இருக்கு.''

''ஆமாம்... 35 வருஷத்துக்கு மேல ரிசர்வ் பாங்க்ல வேலை பார்த்துட்டு ரிடையராகி, இப்பத்தான் டென்ஷன் எதுவும் இல்லாம, அமைதியா இருக்கேன்.''

''போர் அடிக்கலையா?''

''நேரமே இல்லே; நிறையப் படிக்கிறேன்; நிறைய எழுதறேன்.''

''என் ஆனந்ததீர்த்தன்! உங்களுக்குப் படிக்கிறபோதெல்லாம் — கோயமுத்தூர் ஆர்ட்ஸ் காலேஜ்ல இண்டர் படிக்கிற போதும் சரி... அதற்கப்புறம் மெட்ராஸ் லயோலால ஹானர்ஸ் படிக்கிறபோதும் சரி, யூ வேர் மச் இண்ட்ரஸ்டட் இன் ஆக்டிங். தவிரவும் இங்கிலீஷ் தமிழ் பேச்சுப்போட்டிகளில் நிறையக் கலந்து கொண்டு பரிசு வாங்கி யிருக்கீங்களே. ஏதோ ஒரு பிரெஞ்சு டிராமாடிஸ்ட்டோட நாடகத்தைக் கூட தமிழ்ல போட்டீங்க. அதுல உங்களுக்கு ஒரு வயசானவர் ரோல். அதனால் அப்போ காலேஜுக்கு வரும்போது கைல வாக்கிங் ஸ்டிக்கோட வருவீங்க. எல்லாரும் தாத்தா.. தாத்தான்னு கிண்டல் பண்ணுவாங்களே!''

''ஆமாம்... 'மோலியர்' என்கிற நாடகாசிரியரோட 'மைசர்' என்ற பிரெஞ்சு நாடகத்தைத் தமிழில 'தனபால்'னு போட்டோம். அதுலதான் எனக்குவயசானரோல்.''

''ஒரு தடவை நமக்கு டெஸ்ட். உங்களைப் பார்த்து நான் டைம்டேபிள் எழுதிண்டேன். ஆனால் அதுல நீங்க தப்புப் பண்ணி இருந்தது எனக்குத் தெரியாது. நான் உங்களைப் பார்த்து காப்பி பண்ணிண்டது உங்களுக்குத் தெரியாது. நான் டெஸ்ட் எழுத வரேன். நீங்க எல்லாரும் டெஸ்ட் எழுதி முடிச்சுட்டு வரீங்க. எனக்கோ ஷாக்....''

''ஓ! நன்னா ஞாபகமிருக்கே! இது போக இன்னும் எத்தனையோ சம்பவங்கள்... நீங்க காலேஜ் முடிச்சவுடனேயே பாங்க்ல சேர்ந்துட்டீங்களா?''

''எஸ்... படிச்சு முடிச்சதும் 46லே ஐ.ஓ.பி.ல ஆபீஸர் அப்ரெண்டீஸாச் சேர்ந்தேன். சேர்ந்தபோது சம்பளம் 50 ரூபா ப்ளஸ் பன்னிரண்டரை ரூபா அலவன்ஸ்.''


''அப்படியா! 50 ரூபா சம்பளத்துல வேலைக்குச் சேர்ந்து இன்னிக்கு அதே பாங்க்கோட சேர்மனா உயர்ந்திருக்கீங்கன்னு அது எவ்வளவு பெரியவிஷயம்! நீங்கரிடையரானப்புறம் என்ன பிளான் வெச்சிருக்கீங்க?''

''அரசுடைமையான பாங்க்ல சேர்மன் பதவியில் இருந்து ரிடையராகி, தனியார் துறை எதிலும் வேலை செய்யறதுல எனக்கு இஷ்டமில்லே. அரசாங்கத்துக்குச் சேவை செய்யணும். என்னைத் தீவிரமா சோஷியல் ஒர்க்ல ஈடுபடுத்திக்கணும்னுநெனைக்கிறேன்.''

''நீங்க ஓய்வு நேரத்துல என்ன செய்யறீங்க?''

''நிறையப் புத்தகங்கள் படிக்கிறேன். பாங்கிங் சம்பந்தமான கட்டுரைகள் எழுதறேன். லெக்சர்கள் தருவதுமுண்டு. அப்பப்போ பத்திரிகைகள் படிக்கிறேன். என் ஒய்ஃப் பசங்கள்ளாம் நெறையப் பத்திரிகைகள் படிப்பாங்க.''

○ ஐ. ஓ. பி. சேர்மன் திரு சீனிவாசனும் திரு ஹேமா ஆனந்ததீர்த்தனும்



''என்னோட கதைகள் படிக்கிறதுண்டா?''

''எல்லாக் கதைகளும் படிக்கிறதில்லே. ஆனாலும் என் ஒய்ஃப் படிச்சுட்டுச் சொல் லுவா. ஆரம்ப காலத்துல உன் கதைகளைப் படிச்சுட்டு என் மனைவி கிட்ட என் ஃப்ரண்ட் ஆனந்த நீர்த்தனின் ஒய்ஃப் கதை எழுதி யிருக்கா பாருன்னு சொல்வேன். அப்புறம் நான் ''பெதிக் லாரன்ஸ்'' போல நீங்களும் மனைவி பேர்ல எழுதறது தெரிஞ் சது. இப்போ கொஞ்ச நாளா – கோய முத்தூர் அக்ரிகல்சரல் காலேஜ் விவகாரம் லேடீஸ் யூனியன், துர்வாசர் விவகாரம்னு ரொம்ப கான்ட்ரவர்ஷியல் ஃபிகரா ஆயிட் டீங்க போலிருக்கே!''

தேறமா ஆனந்த நீர்த்தனின் முகத்தில் லேசான சிரிப்பு.

''நான் என்னோட பல வருஷ எழுத்துலக வாழ்க்கைல பல்வேறு சமயங்களிலும் பல தரப்பட்ட விஷயங்களைப் பற்றி எழுதி யிருக்கேன். ஆனா அவற்றில் ஒருசிலவற்றி லேந்து சில வரிகளை எடுத்தெழுதி ஆபாசம்... ஆபாசம்னு கூப்பாடு போடறது தப்பு... அதுவுமில்லாம இன்னிக்கு ஃபீல்டுல போட்டி ஜாஸ்தி. இந்த மாதிரி எழுதினாத்தான் நிற்க முடியும் என்கிற நிலே. என் கிட்ட கதை கேட்கிற பத்திரிகை ஆசிரியருங்க கவர்ச் சியா கதை குடுங்கன்னு கேக்கறாங்க. சாதா ரணமான கதை எழுதித் தந்தாலும் 'என்ன உங்க ஸ்டைலில் இல்லையே'னு கேக்கறாங்க! நான் என்ன பண்ண?''


''உங்களைக் கேட்டா பத்திரிகை ஆசிரியர் கேட்கிறார் அதான் அப்படி எழுதறேன்னு சொல்லுறீங்க. பத்திரிகை ஆசிரியருங்களைக் கேட்டா வாசகர்கள் அப்படிப்பட்ட கதை களைத்தான் விரும்பிப் படிக்கிறாங்க. அதான் அப்படிப் போடறோம்னு சொல்றாங்க. நல்ல கதைதான் போங்க.''

''ஹா... ஹா... ஹா...''

இருவரும் சிரித்துக் கொண்டே விடை பெற்றனர்.

தொகுப்பு: **எஸ். சந்திரமௌலி**
போட்டோ: **உத்ரா**

டில்லியிலிருந்து...



○ விஞ்ஞான பவனம்

மயக்கும் மலையாளம்

திடீரென்று டில்லியில் மலையாளப் படங்களுக்கு மௌசு ஏற்பட்டு விட்டது. எப்போதாவதுதான் திரை அரங்குகளில் காலைக் காட்சியாக மலையாளப் படங்கள் திரையிடப்படும். இப்போது நிலைமை மாறி விட்டது. நிறையத் தியேட்டர்கள் மலை யாளப் படங்களைக் காட்டுகின்றன. தலைப் புகளை மிகவும் கவர்ச்சியாக மாற்றி விடு கிறார்கள். கிரேஸி லேடி, செக்ஸ் பாய் என் றெல்லாம் நாமகரணம் இடுவதுடன் ''செக் ஸிற்கு மொழி அவசியமில்லை'' என்ற பொன் மொழியுடன் விளம்பரப்படுத்துகிறார்கள். சென்னைக்கும் டில்லிக்கும் இது விஷயத்தில் ஒரு வித்தியாசம்:

டில்லியில் உள்ள சில பெண்கள் சங்கங்கள் போர்க் கொடி உயர்த்தினார்கள் ஒடியன் தியேட்டர் எதிரில்.

அந்தப் பெண்களில் சிலர் ஒரு மாதிரி டிராஸ் செய்து கொண்டிருந்தார்கள் என்பது வேறு விஷயம்.

இனி இத்தகைய மலையாளப் படங்களைத் திரையிட மாட்டோம் என்று தியேட்டர்க் காரர் கூறிவிட்டார்.

மணக்கும் தமிழ்

பாடப்பாட வாய் மணக்கும் திருப்புகழை ஆர்வத்துடனும் பக்தியுடனும் கடந்த 25 வருடங்களாகப் பாடிவரும் புதுடில்லி திருப் புகழ் அன்பர்கள் (தலைவர்: ஏ. எஸ். ராகவன்) செப்டம்பரில் திருப்புகழ் வைபவம் கொண் டாடுகிறார்கள். எப்படி? புலவர் கீரனின் சொற்பொழிவு பித்துக்குளியின் இசை மாரி சாதுராம் சுவாமிகள், மங்கலமுடையார், சுகப்பிரம்மம் ஆகியவர்களின் கருத்துரைகள் படி விழா என்று ஜமாய்க்கிறார்கள்.

இனிக்கும் வயலின்

இரவு இரண்டு மணிக்கு அந்த வயலின் கச்சேரி துவங்கியது. வந்திருந்தோர் எல் லாரும் இன்ஜினியரிங் கல்லூரி மாணவர்கள். சுமார் ஒன்றரை மணி நேரம் கர்நாடக இசை வெள்ளமாகப் பொழிந்தது. மாணவர்களின் தனி உரிமையான விசில், கலாட்டா எதுவும் இல்லாமல், அபார அமைதியுடன் நிகழ்ச்சி நடந்தது. இத்தனைக்கும் அதற்கு முன்பு இரண்டு மணி நேரம் உலகப் புகழ் பெற்ற அம்ஜத் அலிகானின் சரோட் கச்சேரி நடந்து முடிந்திருந்தது, அதே ஹாலில்.

நிச்சயமாக இளம் பி. கே. விஜயகுமார் பாராட்டுக்குரியவர்தான். ஐ.ஐ.டி. மாணவ ரான இவர் வயலினில் அபார தேர்ச்சி பெற்றுள்ளார். தொழில்முறைக் கலைஞர்கள் இனம்' என்ற நிகழ்ச்சியில் பட்ட பட்ட வித் வான்களுக்கு இடையில் விஜயகுமாரின் கச் சேரி இடம் பெற்றதே பெருமைக்குரிய விஷயம்.

-பி. எஸ். ஆர்.

பொய்க்கால் குதிரை

அத்தி பூத்தது போலத் தமிழ்த் திரையில் எப்போதாவது முழு நீள நகைச்சுவைப் படம் மலர்வதுண்டு. ஆனால் அவற்றில் இரட்டை-அர்த்த வசன நெடியோ, அரசியல் பொடியோ நெடுகிலும் நிறைந்திருக்கும். அப்படி யில்லாமல் அசல் நகைச்சுவைப் படமாக 'பொய்க்கால் குதிரை' உருவாகியிருப்பது ஆறுதலான விஷயம்.

'பெட்' இலகமான ஒரு பெரியவரிடம், காதல் தீண்டாத அவரது மகளின் உள்ளத்தைக் கவர்ந்து மணந்து கொள்வதாக ஹீரோ சவால் விட்டு, 'பெட்' கட்டி, வெற்றி பெறுவதைச் சிரிப்பு வழிய விவரிக்கிறது படம்.

ரேடியோவில் சென்ட்ரல் ஸ்டேஷன் அறிவிப்பும், போலீஸ் ஸ்டேஷன் உரையாடல்களும் கேட்கும்படி ரேடியோ ரிப்பேர் செய்யும் ஒரு நாயரும், காதல் இளவரசனைக் குருநாதராகக் கொண்டு அசட்டுத்தனத்துடன் காதல் சாகசத்தில் இறங்கும் ஒரு சலூன்காரரும்தான் ஹீரோவுக்குத் துணை. தொட்டுக்கொள்ள மெட்ராஸ் பாஷையில் வெளுத்து வாங்கும் துணை நடிகர் வேறு. எல்லாருமாகச் சேர்ந்து அடிக்கும் கொட்டம் விலா எலும்பை முறிக்கிறது.

தெலுங்கு தேசத்திலிருந்து(?) இறக்குமதி ஆகியிருக்கும் புதுமுக ஹீரோ நம்பிக்கை தருகிறார்.

விஜியை ஷோ-கேஸ் பொம்மை என்று தாக்கவும் முடியாது; உணர்ச்சிகளையெல்லாம் கொட்டிப் பிரமாதப் படுத்தியிருக்கிறார் என்று தூக்கவும் முடியாது. கதைப்படி அவருக்கு அதிக வாய்ப்பில்லையே!

வாலியைப் பற்றிக் குறிப்பிடாவிட்டால் பேனாவுக்கே கோபம் வரும். வாலிப்பான ரோலைச் சும்மா ஊதித் தள்ளியிருக்கிறார்.

'அட! நம்ம தலைவரா!' என்று ஆச்சரியப்பட வைப்பவர் ரவீந்தர். கடைசி கடைசியில் ஹீரோவின் அப்பாவாக அவர் வேஷம் கட்டிச் செய்கிற கலாட்டாவைப் பார்க்கும்போது 'இவருக்குள் இத்தனை திறமை ஒளிந்திருக்கிறதா?' என்ற வியப்பை விட, பாலசந்தரின் கண்டுபிடிப்புத் திறன் பற்றிய ஆச்சரியமே அதிகமாக இருக்கிறது.


ஒரு சவால்: அதை நிறைவேற்ற ஹீரோவின் தில்லு முல்லுகள்; நகைச்சுவைத் தாளிப்போடு சில சம்பவங்கள். இவையே போதும். அந்தச் சோத்தை வில்லன் வேறு எதற்கு?

'ஸ்டில்'களிலிருந்து பாத்திரங்கள் உயிர் பெறுவதும், ஆளுக்கு ஆள் உச்சக் குரலில் கத்தும்போது ஒலியை நீக்கி வாயசைவை மட்டும் காட்டுவதும் கொஞ்சம் பழசுதான்.

நகைச்சுவைப் போர்வைக்குள் ஆழமான ஒரு கருத்தை ஒளித்துக் கொள்ளும் படங்களுக்குக் கிடைக்கும் வரவேற்பு, முழுக்க முழுக்கப் பொழுது போக்குப் படமான இதற்குக் கிடைக்குமோ?

கிடைக்காவிட்டால் நஷ்டம் பாலசந்தருக்கு அல்ல.

-முகுந்தன்



பெற்றோர்களே...

இந்தப் பக்கத்தைப் படித்து வைத்துக் கொள்ளுங்கள்

குழந்தைக்குச் சாதாரணக் காய்ச்சல் என்றால் வீட்டில் வைத்துச் சரிப்படுத்தி விடலாம். ஆனால் காய்ச்சலோடு மயக்கமோ, உடல் நடுக்கமோ இழுப்போ இருந்தால் உடனே டாக்டரை அணுக வேண்டும். ஜுரம் மூன்று நாளுக்கு மேல் நீடித்தால் கண்டிப்பாக வைத்திய உதவி நாட வேண்டும். ரத்தப் பரிசோதனை முதலியன தேவைப்படலாம்.

பெற்றோர்கள் நன்மைக்காகக் கீழே பன்னிரண்டு வகையான நோய்க் கூறுகளைக் கொடுத்துள்ளோம். இவை யாருக்குமே வரவேண்டாம்; வந்து விட்டாலோ டாக்டரை உடனே பார்ப்பது அவசியம்.

- வயிற்றுப் போக்கோ வாந்தியோ 48 மணி நேரத்துக்கு மேல் இருந்தாலோ, குழிந்த கண்கள், வறண்ட தோல், உலர்ந்த உதடுகள் ஆகியன உடலில் நீர் குறைந்துள்ளதைக் குறிக்கும்.
- தலையில் அடிபட்டுச் சில மணி நேரத்திற்கு நினைவிழத்தல், வாந்தி, இரட்டைப் பார்வை, மயக்க நிலை, ஏறுமாறாகப் பேசுதல், காதிலிருந்தோ, மூக்கு வழியாகவோ ரத்தமோ, நீரோ வருதல், ஆகியவை, மண்டையோடு உடைந்ததன் விளைவாகக் கல்மூளை அதிர்ச்சிக்குண்டானதைக் குறிக்கும்.
- வெட்டுக் காயம் பட்ட இடத்தில் காயத்தின் அடியில் வெண்மையான கொழுப்பு தெரிந்தால் தையல் போடுதல் அவசியம்.
- உடம்பு சில்லென்று வெளிரி இருப்பதும் மயக்கமாக இருப்பதும் இரத்த ஓட்டம் குறைந்துள்ள ''அதிர்ச்சி'' நிலை.
- வயிற்று வலி, வாந்தி, இரத்தப் போக்கு, வயிற்று உப்புசம் போன்றவைகள் குடல் அடைப்பால் வரலாம்.
- தொண்டை அடைப்பான் நோயால் குழந்தைக்குக் காய்ச்சலும், மூச்சடைப்பும் விழுங்கும்போது வலியும் உண்டாகலாம்.
- மூளைக் காய்ச்சல் (Meningitis) கண்டுள்ள குழந்தைகளுக்கு காய்ச்சல், தாங்க முடியாத தலைவலி, குமட்டல், இருக்கும்.
- இரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குக் குடலேற்றம் ஏற்படலாம். இதனால் வயிற்று வலியும், காய்ச்சலும், வாந்தியும் ஜவ்வரிசிக் கஞ்சி போல் ஆனால் சிவப்பு நிறமான மலமும் வரும். இதில் குடலடைப்பும் ஏற்படலாம்.
- லேசான காய்ச்சலும், தலைவலி, குமட்டல் வாந்தி, வெளிர் மஞ்சள் நிறமான உடம்பு, மஞ்சள் நிறமான கண்கள், மஞ்சள் காமாலை நோயால் உண்டாகலாம். சிறிது வளர்ந்த குழந்தைகள் வாய் கசப்பாக உள்ளது என்று கூறலாம்.
- பூச்சி கடிக்குப் பிறகு, பெரிய வீக்கம், இறுகிறுப்பு, வியர்வை, மார்பு படபடப்பு, மூச்சடைப்பு ஏற்பட்டால் இது உயிருக்கு ஆபத்தான ஒவ்வாமையைக் (Allergy) குறிக்கும்.
- நிமோனியாவினால் அவதியுறும் குழந்தைகளுக்கு மார்பு வலி, அதிகமான காய்ச்சல், இருமல், மூச்சடைப்பு ஏற்படலாம்.
- அடிவயிற்றில் காய்ச்சல், எரிச்சலுடன் அடிக்கடி சிறுநீர் கழிக்கும் நிலை இவைகள் சிறுநீர்ப் பாதையில் நோய்க் கிருமிகள் ஆக்கிரமிப்பால் ஏற்படலாம்.

(குழந்தை மருத்துவ நிபுணர் திருமதி சகுந்தலா தமிழ்வாணன் கூறியது.)

பேட்டி: **தில்லப்பா**
வண்ணப்படம்: **ஜெய்மோகன்**

''பெண்களுக்கான கல்லூரி திருக்குற்றாலத்தில் தொடங்குவதற்குப் பிரம்மாண்டமான கட்டடமும் மைதானமும் தேவைப்பட்டன. அப்பொழுது திரு எம். பக்தவத்சலம் முதன் மந்திரியாக இருந்தார். அவர் திருவாங்கூர் மகாராஜாவை அணுகி ''திருக்குற்றாலத்தில் உள்ள உங்கள் மாளிகையைக் கல்லூரி தொடங்குவதற்குத் தரவேண்டும். சர்க்கார் அந்த மாளிகைக்குரிய விலையைப் போட்டுத் தரச் சித்தமாயிருக்கிறது!'' என்றார்.



''ஐயா, நான் மகாராஜா பதவியை இழந்திருந்தாலும் அந்த மகாராஜாவுக்குரிய பெருந்தன்மையை இன்னும் இழந்துவிடவில்லை. கல்லூரி தொடங்குவதற்கு என் மாளிகையை இலவசமாகவே எடுத்துக் கொள்ளுங்கள்!'' என்று திருவாங்கூர் மகாராஜா கூறிய போது முதல்வர் பக்தவத்சலம் திகைத்துப் போனார்.

பராசக்தி கல்லூரி இன்றைய முதல்வர் கூறக் கேட்டவர்: பி. எஸ். எம்.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P.S. Mani

Editor: K. Rajendran


1983

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

[redacted]

ஒரு மங்கையின்
வாழ்வில் மிக இனிமையான
நேரங்களில்
இணைந்திருப்பது கட்டாவ்.



கட்டாவின் டெர்கோஸா ஸாரிகள்

Rediffusion/K/2392